ஸ்ரீ:

ஸீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே ஶரண...
நைனாராசார்யர் திருவடிகளே சரணம்.

நைனாராசார்யர் அருளிச்செய்த

பிள்ளை யந்தாதி

திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான் பகவத்விஷயம்
பண்டிதபூஷணம் தேசிகதர்ஶநாசார்யர் மஹாமஹோபாத்யாய
**ஸ்ரீ. உப. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியின்
வ்யாக்யானத்துடன்**

ஸ்ரீரங்கம் ராயகுரு கோடிகன்னிகாதானம் ஏழு திருமாளிகை
ஸ்ரீ. உப. ஐயா யாமுனதாதாசார்யரால்
பரிஶோதிக்கப்பட்டு

முசிரிதாலூகா, இரையூர்போஸ்ட், பெருமாள் மலையடி
வேதாந்ததேசிகபுரம் ஸ்ரீரங்கம் வித்யாபிவ்ருத்தி ஸபை
தேசிக ப்ரகாசிகை ஆபீஸ் மானேஜரான ஸ்ரீமான் மாராடி
வேதாந்ததேஶிக ராமானுஜதாஸரால் ப்ரசுரம் செய்யப்பட்டன

...ாபில் பிரஸ், செ... ...ை.

1929. [தபாற்கூலி வேறு.

23077

OFFICE OF THE REGISTRAR ... MADRAS
14 JUL 1930

॥ ஸ்ரீ: ॥

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ தூப்புல் நயினாராசார்யர் அருளிச்செய்த

பிள்ளையந்தாதி.

தனியன்.

சீரார்தூப்புற் பிள்ளையந்தாதி யென்று செந் தமிழால்
நேராக வேதாந்த தேசிகர் தாளிணைக் கீழ் மொழிந்தான்
ஏரார்மறைப்பொரு ளெல்லாமெடுத் திவ்வுல குய்யவே
சீராகிய வரதாரியன் பாதம் துணை நமக்கே.

॥ ஸ்ரீ: ॥

॥ ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸ ராமாநுஜ மஹாதேசிகாய நம: ॥

திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான்
பகவத் விஷயம் பண்டித பூஷணம் தேசிக தர்ஶநாசார்ய
மஹாமஹோபாத்யாய
ஸ்ரீ. உப. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியின்

வ்யாக்யானம்.

தனியன் வ்யாக்யானம்.

இவ்வுலகத்தில் உத்தமமான ஆசார்ய நிஷ்டையைத் தாம் அநுஷ்டித்தபடியை ப்ரபந்த ரூபேண எல்லோரும் அறியும்படி அருளிச்செய்த உபகாராதிஶயத்தை முன்னிட்டு தூப்புல் நயினார் திருவடிகளே அத்யந்தம் அகிஞ்சனர்களான நமக்குத் தஞ்சம் என்கிறது 'சீரார் தூப்புல்' இத்யாதி.

சீர்-கல்யாண குணங்களினால், ஆர் - நிறைந்த, தூப்புல் - விஶ்வாமித்ரகுலத்தில் அவதரித்த, பிள்ளை-ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன்

விஷயமான, அந்தாதி என்று-அந்தாதியென்னப்படுகிற, செம்-ப மான, தமிழால் - தமிழ் ப்ரபந்தத்தினுல், இவ்வுலகு - இந்தலோகம், அதில் இருக்கும் ஜனங்கள் என்றபடி, உய்யவே - உஜ்ஜீவிப்பதற் காகவே, ஏர் - அநுகுணமான, ஆர் - அர்த்தங்களால் நிறைந்த, அன்றிக்கே ஏரார் - ஏற்கையினுல் நிறைந்திருக்கிற, மறைப்பொருள் - வேதத்தின் அர்த்தங்களையெல்லாம், எடுத்து - ஸாராம்ஶத்தை உத் தாரம் செய்து, வேதாந்த தேசிகர் - ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசி கனுடைய, தாளிணைக்கீழ் - திருவடிகளின் கீழே, மொழிந்தான் - அருளிச் செய்தவரான, சீராகிய - கல்யாண குணங்களை உடையவ ராகிய, வரதார்யன் - தூப்புல் நயினருடைய, பாதம் - திருவடிகள், நமக்கே - அந்தத் திருவடிகளில் பக்தியையுடையவர்களான நமக்கே, துணை-ஸஹாயம், ரக்ஷகமென்றபடி.

[தா - ம்] ‘சீரார்’ என்றது ஆசார்யத்வோபயுக்த குணங்கள் எல்லாம் மேன்மைபெற்று விளங்குவது நம் தேசிகனை ஆஶ்ரயித்த படியினுலே என்றபடி. ஸத்யத்வ ஜ்ஞானத்வாதி குணங்கள் பக வானை ஆஶ்ரயித்து மேன்மைபெற்றதோ பாதி ஆசார்யத்வோபயுக்த குணகணங்களும் நம் தேசிகனுடைய ஸம்பந்தத்தினுல் நிறம்பெற்ற படி. இதைத் திருவுள்ளம் பற்றியே அண்ணனும் 1 “ஸர்வே ஶ்ராமணாஸ்ஸ்யு: ஸம்ஶ்ரித விஹவாஸ்ஸம்ஶ்ரிதஸ்த்வத்பதே’ என் றருளிச்செய்தார். அங்கு ‘ஶாஹீ-ஶியம்யாதா:’ என்பதை இங்கு ‘ஸம்ஶ்ரித விஹவா:’ என்றருளிச்செய்தபடி. இவ்வர்த்தம் ஜ்ஞானவைரா க்ய பூஷணம் என்று நிரூபிக்கப்பட்டதிறே. ‘சீரார்’ என்பது தூப்புல் குலத்திற்கும் அந்தாதி ப்ரபந்தத்திற்கும் விஶேஷணமாகவுமாம். குலத்திற்கு விஶேஷணமாகும்பொழுது 2 ‘இக்ஷ்வாகு வம்ஶப்ரபவோ ராமோ நாம ஜநைஶ்ஶ்ருத:’, 3 ‘வம்ஶே ஜாத ஸ்ஸவிதுரநகே’, ‘வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த் தோன்றி’ என்று பெரு மாள் அவதரிப்பதற்கு பரமபாகவதர்கள் நிறைந்த இக்ஷ்வாகு குலம் அமைந்தாப்போல நம் தேசிகன் அவதரிப்பதற்கு விஶ்வாமித்ரகுலம் அமைந்தபடி த்யோதிதம். விஶ்வங்களுக்கு எல்லாம்மித்ரன்என்றிறே விஶ்வாமித்ர பதத்திற்கு வ்யுத்பத்தி சொல்லுவது. ஸர்வ ஜனங்க ளிடத்திலும் மைத்ரியை உடைத்தாயிருக்கும் தன்மை கோத்ரருஷி முதலாக வந்தது என்று தாத்பர்யம். ஶரணாகத ஸம்ரக்ஷணத்தில்

---

1. 11ம் பக்கம் பார்க்க.

2. இக்ஷ்வாகு வம்ஶத்தில் பிறந்தவரும், ராமன் என்று ஜனங்களினால் அறியப்பட்டவரும்.

3. குற்றமற்ற ஸூர்ய வம்ஶத்தில் பிறந்த.

223071

மிகவும் ப்ரஸித்தி பெற்று விளங்கியவர் விஸ்வாமித்ர மஹருஷி என்பது ஸ்ரீ தேசிகன் தம்மாலும் 'விஸ்வாமித்ர ஸபோதநாவத' இத்யாதி ஸ்லோகத்தில் முதலில் இவரை நிரூபித்திருப்பதினால் ஏற்படுகிறது. ஆகையினால் ஸாரணாகத தர்ம ப்ரவசனம் இவருக்குக் குலக்ரமாகதமாயிற்று என்றபடி. இக்குலத்தின் மேன்மை 1'ஸேந்த்ரம் ஸாவநஸேந்த்ரமிந்த்ரரஹிதம் வா கர்த்தும் க்ஷமே கவிர்யஸ்மின்னவாப்யே । ஜந்ம த்விதீயம் ருஷிபி: கதிதம் யதஸ்மாத் தேவீ ச விஸ்வஜநநீ யதநந்யகோத்ரா' என்றருளிச் செய்யப்பட்டதிறே. 'தூப்புல்'(பரிசுத்தமான புல்- விஸ்வாமித்ரம்)என்பதினால் பாவநத்வம் த்யோதிதம். இத்தால் பெருமாளும் பிராட்டியும் திருவயோத்யையிலும் மிதிலாபுரியிலுமாய் நிற்பதை ஸஹிக்காமல் தாமே இம்மிதுனத்தைச் சேர்த்து க்ருதார்த்தரானார் கூடஸ்த ரிஷி. அப்படியே ஸ்ரீ தேசிகனும் அந்தச் சேர்த்திக்கு ஒருக்காலும் வார்த்தையினாலும் கூட பிரிவு வாராதபடி ஸ்தாபித்துப் போந்தார். அதுவும் கூடஸ்த ரிஷியினால் அனுஷ்டிக்கப்பட்ட தர்மம் என்பதும் த்யோதிதம். 'அந்தாதிக்கு' விஸேஷணமாக யோசிக்கும்போது இப்படி குணபூர்ணமான வஸ்துவை விஷயமாக உடையதாகையினாலே இக்ரந்தம் ஸர்வோத்க்ருஷ்டமானது என்பது த்யோதிதம். அன்றிக்கே 2'வேதே மாயாஸஹஸ்ரம் ஸரஸிஜநயநஸ்வைகல்யாணஜாலம் ஸ்ம நீத்ய:' என்று எம்பெருமானுடைய கல்யாணகுணங்களை வைத்து அருளிச் செய்யப்பட்ட திருவாய்மொழியைக் காட்டிலும் 3'தாதே வேக்ஷ்வாகு நாதஸ்ய ஸ்ரீராமஸ்ய கதாம் ஸ்ரீராம' என்கிறபடியே அந்த எம்பெருமான் தனக்கும் பரம போக்யமாய் இதை அநுஸந்திப்பவர்களுக்கும் 4 'ந ஸம்ஸயோஸ்தி தத்பக்தபரிசர்யாரதாத்மநாம்' என்கிற

1. இந்தக்கவி இந்த லோகத்தை வேறு இந்திரனுடையதாகவும், வேறொரு லோகத்தை இந்திரனில்லாததாகவும் செய்யக்கூடிய யோக்யதையுள்ள வம்ஸத்திலே பிறந்தார், ரிஷிகளினால் எந்தக் காயத்ரியினால் இரண்டாவது பிறப்புச் சொல்லப்பட்டதோ அப்படிப்பட்ட லோகங்களுக்கு மாதாவாகிய காயத்ரீதேவீ எந்தக் கவியின் கோத்திரத்திலேயே பிறந்தவளோ.

2. ஆழ்வார் பகவானுடைய குணங்களினால் நிறைந்த ஆயிரம் பாட்டுக்களைச் சொன்னார்.

3. அந்த இக்ஷ்வாகு நாதனாகிய பரதனுடைய வ்ருத்தாந்தத்தைச் சொல்.

4. அவனுடைய பக்தர்களிடத்தில் பக்தி செய்வதில் ஆசையுடையவர்கள் விஷயத்தில் ஸம்ஸயமே இல்லை.

031,142 031,12* N29

படியே பரம புருஷார்த்த ஸாதனமாய் நிக்ரஹாநுக்ரஹங்களுக்குப் பொதுவானகுணங்களன்றிக்கே அநுக்ரஹம் மாத்திரத்திற்குஅஸாதாரணமான 1 'ஸ்ரீமத்தத்பதாம்புஜம்' என்னப்பட்ட ஆசார்யன் திருவடிகள் விஷயமாய் செய்யப்பட்ட ப்ரபந்தத்தின் வைபவாதிஶயம், பாவனத்வம், 2 'ஆசார்யநாம ஸதா ஜபேத்' என்று விதிக்கப்பட்டபடியே ஸதா அநுஸந்தேயமானபடி, 'அண்ணிக்கும் அமுதூறும் என் நாவுக்கே' என்கிறபடியே போக்யத்வாதிஶயம் முதலிய குணாதிஶயங்கள் நிறைந்தமை விவக்ஷிதமாகவுமாம். 'அந்தாதி' யாவது வெண்பாவினாலாவது கலித்துறையினாலாவது முன் பாட்டின் இறுதியில்வரும் பதமாவது எழுத்தாவது பின் பாட்டின் முதலாக வைத்துப் பாடப்பெற்றது. கண்ணிநுண் சிறுத்தாம்பு, இராமாநுச நூற்றந்தாதி, பிள்ளையந்தாதி என்கிற ஆசார்ய விஷயமான மூன்று ப்ரபந்தங்களும் அந்தாதியாய் அமைந்ததும் ஒரு விஶேஷம் என்று பெரிய பரகால ஸ்வாமி அருளிச் செய்தார். தமிழுக்கு சேம்மையாவது ஶ்லாக்யமான தமிழாக இருப்பது. அதாவது சீர், தளை, தொடை, பா, முதலிய லக்ஷணங்கள் பொருந்தியிருக்கை. அன்றிக்கே 'சீரார்' என்கிற இடத்தில் 'சீர்' என்பது தமிழ் லக்ஷணமான சீரைச் சொல்லுகிறபடியினால் மற்றைய லக்ஷணங்களை எல்லாம் குறிக்கிறது. 'சேம்' என்பது மற்றைய பாவனத்வாதிகளைக் குறிக்கிறதாகவுமாம். ஆக 3 'கவே: ஸ்வல்பாபி வாக்வ்ருத்தி: விதுஷாம் கர்ணபூரதாம் ஸைதி। நாயகோ யதி வர்ண்யேத லோகோத்தரகுணோத்தர:' என்ற காவ்ய லக்ஷணமும் எல்லா ப்ரகாரத்திலும் பொருந்தியிருப்பது தெரிவிக்கப்பட்டதாயிற்று. அன்றிக்கே 'ஸம்ஸ்க்ருதா ஹேதிபாஷா' என்கிறபடியே ப்ரபன்ன பூமிகைக்கு யோக்யமான பாஷையாகையாலே ப்ரபன்ன ஜன ஸந்தான கூடஸ்தரால் பரிக்ரஹிக்கப்பட்ட பாஷை என்கிற விஶேஷம் தெரிவிக்கப்பட்டதாகவுமாம். 'தமிழ்' என்பதற்கு இனிமை என்ப

---

1. ஸ்ரீயுடன் கூடிய அவருடைய திருவடிகள் இரண்டையும்.

2. ஆசார்யனுடைய நாமத்தை எப்பொழுதும் ஜபிக்க வேண்டும்.

3. அல்பமாயிருந்தபோதிலும் கவியினுடைய கவனமானது லோகத்திற்குள் உயர்ந்த குணங்கள் நிறைந்தவனான நாயகன் (அதில்) வர்ணிக்கப்படுவானேயானால் வித்வான்களுடைய காதிற்குஅலங்காரமாகிறது.

தும் பொருளாகையினுல் இனிமையான பாஷையினுல் என்றபடி யாகவுமாம். 'நேராக' என்றது தம் ஆசார்யன் விஷயத்தில் ஸாக்ஷாத் தாக வாசிக கைங்கர்யம் செய்தபடி. இத்தால் தம் பரமாசார்யனைப் பற்றிய நூற்றந்தாதியைவிட வைலக்ஷண்யம் சொல்லப்பட்டதா யிற்று. அன்றிக்கே நம் தேசிகன் திருமுன்பே அவர் திருச்செவி சாற்றியருளும்படி விண்ணப்பம் செய்தபடி சொல்லப்படுகிறதாக வுமாம். இத்தால் நேரில் விண்ணப்பம் செய்யப்படாத கண்ணி நுண் சிறுத்தாம்பை விட வைலக்ஷண்யம் அருளிச்செய்யப்பட்ட தாகிறது. 'வேதாந்ததேசிகர்' என்பதினுல் மற்றொருவருக்கு ஸாதா ரணமல்லாமல் இவருக்கே அஸாதாரணமான வேதாந்தாசார்யர் என் கிற திருநாமத்தை ஸ்ரீரங்கநாதன் தாமே ப்ரஸாதித்தருளினபடி யாலேமற்றைய எல்லா ஆசார்யர்களையும் விட நம் தேசிகனுக்கு ஏற் பட்ட உத்கர்ஷம் ஸூசிப்பிக்கப்பட்டது. 'வேதம் முன்விரித்தான்', 'ஸ்வக்ஷாஹந்ஷஸா:' இத்யாதிகளில்படியே தமக்கு அஸாதாரண மான வேதாந்தசார்யர் என்கிற திருநாமத்தைத் தகுந்த பாத்திர மாகிய ஸ்ரீ தேசிகனுக்குத்தந்து நிர்ப்பரனுய் இருந்தமை 'ஸ்வக்ஷிதி ஹரிஷத்தம்' இத்யாதி ஶ்லோகத்தில் வ்யக்தமாய் அருளிச்செய்யப் பட்டிருக்கிறது. இவ்வதிஶயத்தை 1 'யஸ்மின்ஹநந்ய ஸாகோந்யா வேஷாஹாவாயதா ஶாஶ்வ', 2 'யதா வாஸுஷதா விஷ்ண' என்று அண்ணனும், 3 'வேஷவஸ்யாயஸஂஜ்ஞா கநிதாஜநயஹ்யாஂ ஸஂஸிதொஷஹதூ' என்று தொட்டையாசார்யரும் ப்ரபஞ்சித் தார்கள். அப்படிப்பட்ட அஸாதாரணமான மேன்மையுடைய ஆசார்யன் விஷயமான ப்ரபந்தமிது என்றபடி. 'தாளிணைக்கீழ்' என்பதினுல் 'பரனடிமேல்', 'சீல மெல்லையிலானடி மேலணி' என்கிறபடியே திருவடியின் மேல் சொல்லப்பட்ட மற்ற ப்ரபந் தங்களைக் காட்டிலும் அத்திருவடிகளின் கீழே ஸமர்ப்பிக்கப் பட்ட இந்த ப்ரபந்தம் உத்க்ருஷ்டமானது என்பது த்யோதிதம். இத்தால திருவடிமேல் ப்ரபந்தத்தை அருளிச் செய்தால் 4 'கெஷ ஸ்ரீரதிகொஷோதநஸியஂவாவாஂவிஷேக்ஷோ' என்கிற ந்யாயத்

---

1. வேறு ஒருவருககும ஸதாரணமல்லாத வேதாநதாசார்ய ராக யிருக்கை ஸ்ரீதேசிகனிடத்தில் (இருக்கிறதோ)

2. புருஷன் என்பது எப்படி விஷ்ணுனிடத்திலோ.

3. இதரர்களினுல் அடையப்படாத வேதாந்தாசார்யர் என் கிற பிருதை ஸ்ரீரங்கநாதனுல் அடையப்பெற்ருர்.

4 அதி ம்ருதுவான இந்தத் திருமேனி நம்முடைய வார்த்தை யினுலுண்டாகும் நெருக்கததை எப்படிப் பொறுக்கும்?

தினால் அத்திருவடிகளின் ஸௌகுமார்யத்திற்குச் சேராது என்றனுஸந்தித்து திருவடிகளின்கீழ் ஸமர்ப்பித்தாராயிற்று. அன்றிக்கே நம் தேசிகனுடைய குணாதிசயங்களும் திருமேனி ஸௌந்தர்யாதிகளும் வாங்மனஸாபரிச்சேத்யங்களாகையாலே ஏகதேசமும் வர்ணிக்க முடியாதாகையினால் 'யதோ வாசோ நிவர்த்தந்தே' என்கிற ந்யாயத்தினால் திருவடிகளைத் தொடாமலே அவற்றின் கீழே நின்றுவிட்டன என்றபடியாகவுமாம். 'ஏரார்' இத்யாதி- அப்படிப்பட்ட ஆசார்யனின் குணங்களை வர்ணிப்பதற்கு யோக்யதை மறைகளுக்கே உள்ளது.1 'ஆம்நாயஸஹஸ்ர நீயவிபவோதயா:' என்றருளிச் செய்யப்பட்டதிறே. அன்றிக்கே வேதாந்தங்களில் பரப்ரும்ம ஸ்வரூபாதிகளை விஸ்தாரமாக நிரூபித்து 'அறியவேண்டும் எனகிற ஆசை உடையவன் குருவையே ஆஸ்ரயிக்கவேண்டும்' என்றும், 'ஆசார்யனை அடைந்த புருஷனே அந்த வஸ்துவை (பரமாத்மாவை) உள்ளபடியே அறிவான்', 'இந்தப் பரமாத்மாவை எவன் அறிந்தவனே அவனை தேவதைகள் எல்லோரும் கூட அளவிட்டு அறியமாட்டார்கள்' என்றும் ஓதப்பட்டிருக்கும் அர்த்தங்களையெல்லாம் ஒன்று சேர்த்து இப்ரபந்தத்தில் நிரூபித்தார் என்றபடியாகவுமாம். 'எடுத்து' என்றது 2 'யாவாநர்த்த உதபாநே' என்கிற ந்யாயத்தினாலே ஸாராஸாரங்கள் கலந்த வேதங்களில் ஸாராம்ஸத்தைப் பிரித்து எடுத்து என்றபடி. இப்படி அருளிச் செய்தது எதற்காக? 'இவ்வுலகுய்யவே'. 'இவ்' என்றது 'இருள் தருமா ஞாலம்' என்கிறபடியே அஜ்ஞர்கள் நிறைந்த லோகம் என்றபடி. ஆகையினால் அஜ்ஞானத்தினால் மூடப்பட்டிருக்கும் இந்த லோகததில இருக்கும் ஜனங்களுக்கு ஆசார்ய ஸமாஸ்ரயணத்தைத் தவிர வேறு கதியில்லை என்றபடி. 'உய்யவே' என்பதினால் க்யாதிலாபாதி மற்ற பலங்களுக்காக வல்லாமல் என்பது தெரிவிக்கப்படுகிறது. 'சீராகிய' என்றது ஸதாசார்யபக்தி, லோகத்தில் இருக்கும் ஸமஸ்த ஜனங்களிடத்திலும் கருணை, முதலிய கல்யாண குணங்களை உடையவரான என்றபடி. 'வரதார்யன்' என்பதினால் வரம்தரும் தெய்வப் பெருமாள் தாமே நம் தேசிகனுக்குப் புத்திரனாய் இருக்கவேண்டுமென்று 3 'பிதரம் ரோசயாமாஸ' என்கிறபடியே தாமே வரித்து வந்து அவதரித்தவர் இவர் என்கிற இவருடைய அவதார வைலக்ஷண்யம் தெரிவிக்கப்

---

1. வேதாந்தங்களினால் ஸ்தோத்திரம் செய்யப்பட வேண்டிய அநேககவிதமான சரித்திரங்களையுடைய,

2. எல்லாம் நிறைந்த குளத்தில் எவ்வளவு வேண்டுமோ (அவ்வளவே எடுத்துக்கொள்ளத்தக்கது)

3. தகப்பனாரை விரும்பினர்.

படுகிறது. இத்தால் வேங்கடமலைநாதனைவேழமலைநாதன் ஸ்துதித்த படி ஸூசிப்பிக்கப்பட்டது. 'பாதம்துணை' என்பதுடன் 'நமக்கே' என்கிற இடத்தில் இருக்கும் ஏகாரத்தை அநுஷங்கித்து அந்வயித்துக்கொண்டு 'பாதமேதுணை' என்று யோசிக்கவும். இத்தால் ஆசார்ய நிஷ்டையின் பெருமைகளையும் ஸௌகர்யத்தையும் அறியாமலும், அதினுடைய பலாதிசயத்தைக் கணிசியாமலும், அப்படி ஆச்ரயிக்கத் தக்க ஆசார்யனுடைய குணாதிசயங்களை விமர்சிக்க யோக்யதை இல்லாமலும் இருக்கும் அத்யந்த அஜ்ஞஸார்வ பௌமர்களான நமக்கு தூப்புல் நயினாரே தம்முடைய பரம க்ருபையினால் தாம் அநுஷ்டித்துப் போந்த ஆசார்ய நிஷ்டையினுடைய பெருமையைத் தெரிவிக்க வேண்டியதாகையினால் அவருடைய திருவடிகளை நமக்குத் தஞ்சம் என்றதாயிற்று. அன்றிக்கே யதா பாடம் 'நமக்கே துணை' என்று யோசிக்கவுமாம். 'நமக்கே பறைதருவான்' என்பதைப் போல் தூப்புல் நயினாருடைய ஸ்ரீஸூக்திகளின் அர்த்தங்களை ஸதாசார்யர்களிடத்தில் இருந்து க்ரஹித்து அதில் நிரூபிக்கப்பட்டிருக்கும் ஆசார்ய நிஷ்டையை அனுஷ்டித்திருக்கும் நமக்கே அவருடைய திருவடிகள் ரக்ஷகமாகும், அப்படிப்பட்டநாமே அவருடைய கருணைக்குப் பாத்திரமாவோம், அல்லாதவர்களுக்கு அந்தப்பாக்யம் இல்லை என்றபடி.

ஸ்ரீ அவதாரிகை.

இந்த இருள் தருமாஞாலத்தில் அநாதிகர்ம பரவசராய்க் கட்டுண்டு உழலுகிற க்ஷேத்ரஜ்ஞர்களுக்கு 1"பாபிஷ்ட: க்ஷத்ரபந்துச்ச புண்டரீகச்ச புண்யக்ருத் । ஆசார்யவத்தயா முக்தௌ தஸ்மாதாசார்யவான் பவேத் ॥" என்று ஸதாசார்ய கடாக்ஷமே உஜ்ஜீவன ஹேது, ஆகையாலே அவ்விஷயத்தில் க்ருதஜ்ஞனாய் பக்தி செய்து கொண்டிருக்கை உபாதேயதமம் என்னும் அர்த்தம் ச்ருதிகள், ஸ்ம்ருதிகள், இவைகளை அனுஸரித்த ஆசார்யஸூக்திகள், இவைகளுக்கு அனுகூலங்களான யுக்திகள் இவைகளினால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிஷ்டையின் பெருமையை 'இவை இரண்டிலும் ப்ரதானம் ஆசார்ய கைங்கர்யம்' என்று சுருங்க நிஷ்கர்ஷித்தருளினர்.

இந்நிஷ்டையைத் தாங்கள் அனுஷ்டித்தும், ப்ரபந்தமுகேந அயலாரை அனுஷ்டிக்கும்படி செய்தும் உபகரித்தருளின குருபக்த

---

1. மிகவும்பாபத்தையுடையவனாகிய க்ஷத்ரபந்துவும், புண்யம் செய்தவனாகிய புண்டரீகனும் ஆசார்யனை உடையவனானமையாலே மோக்ஷத்தை அடைந்தார்கள். ஆகையால் ஆசார்யனையுடையவனாக ஆகவேண்டும்.

ஶிகாமணிகள் மூவர். அவர்களாகிறார் அருமறைகள் தமிழ் செய்தான் தாளே கொண்டு துன்பற்ற ஸ்ரீ மதுரகவிகளும், அன்பாலியம்பும் கலித்துறை அந்தாதி செய்த ஸ்ரீ திருவரங்கத் தமுதனாரும், தூப்புல் நயினாரும். நம் தர்ஶநத்திற்கு தத்வத்ரயம், ரஹஸ்யத்ரயம், ரத்னத்ரயம் என்றாப்போல ஆசார்ய பங்க்தித்ரயமும் அமைந்தபடி கண்டீரே என்று ஈடுபட்டு அருளிச்செய்வர் பெரிய பரகாலஜீயர்.

இவர்கள் நம் விஶிஷ்டாத்வைத தர்ஶநத்திற்குக் 'கலியுகத்தில் ப்ரும்ம நந்த்யாதிகளுக்குப் பிறகு நம்மாழ்வார் ப்ரவர்த்தகரானார்' என்றும், 1 'காலவிப்ரகர்ஷேऽபி பகவத்ஸங்கல்பாத் கதாசித் யோகதஶாயாம் ப்ராதுர்பூய ஸாக்ஷாதேவ ஸர்வோபநிஷத்ஸாரார்தோபதேஷ்டாரம் பராங்குஶமுநிம்' என்றும், 2' ஆத்யஸ்ய ந: குலபதே:' என்றும் சொல்லுகிறபடியே ஈன்றமுதல் தாயான ஆழ்வாருடைய உபகாராதிஶயத்தைப் பற்றியும், 'மொய்ம்பால் வளர்த்த இதத்தாய் இராமாநுசன்' என்றும், 3 'த்ராதம் ஸம்யக் யதீந்த்ரை:' என்றும் சொல்லுகிறபடியே அதை ஸ்ரீ பாஷ்யாதி க்ரந்தங்களினால் ஸம்ரக்ஷித்தவரான எம்பெருமானாரைப் பற்றியும், பிறகு வாதிகளால் பஹுமுகமான க்லேஶங்கள் உண்டானபொழுது 1'அகிலதமஶ்ஶமநம் தர்ஶநம் ந:' என்றும், 2 'யஸ்ய வாக்வ்ருதிருபாத்தா யதிராஜஸூக்தி:' என்றும் சொல்லுகிறபடியே 3' ஆபாதமூலமநவத்யே ஏதஸ்மிந் ஸம்ப்ரதாயே வாதிநிரஸநாய ந கிஞ்சிதபேக்ஷிதம்' என்னும்படி ஒரு கலக்கமும் எக்காலத்திலும்

---

1. வெகுகாலம்தாண்டியிருந்தபோதிலும் பகவானுடைய ஸங்கல்பத்தினால் ஒருஸமயத்தில் யோகதசையில் ஆவிர்ப்பாவம் செய்து நேரில் எல்லா உபநிஷத்துக்களுக்கும் ஸாரமான அர்த்தத்தை உபதேசம்செய்த நம்மாழ்வாரை.

2. முதலாவதாகிய எங்களுடைய குலத்திற்குப் பதியாகிய ஆழ்வாருடைய

3. ஸ்ரீபாஷ்யகாரரால் நன்றாகக்காப்பாற்றப்பட்ட

3. எல்லா அஜ்ஞானத்தையும் போக்கடிக்கக்கூடியது நம்முடைய தர்ஶநம்.

4. ஸ்ரீபாஷ்யகாரருடைய ஸ்ரீஸூக்திகள் எவருடைய வாக்கை வேலியாக உடையவைகளோ

5. அடிமுதல் நுனிவரையில்குற்றமற்ற இந்தஸம்ப்ரதாயத்தில் எதிரிகளைப்போக்கடிப்பதற்காக வேறுஒன்றும் யோசிக்கவேண்டியதில்லை.

வராதபடி யதிராஜமத துர்யான தூப்புல் குலபதியைப் பற்றியும் ஸ்தோத்திரரூபமான க்ரந்தங்களை அருளிச்செய்தார்கள். இவர்களில் வைத்துக்கொண்டு 'தேவுமற்றறியேன்,' 'வேறொன்றும் நானறியேன்' என்று வேதத்தினுட்பொருள் நிற்கப்பாடிய உபகாராதிஶயத்தில் ஈடுபட்டு அருளிச் செய்தாராயிற்று ஸ்ரீ மதுரகவிகள். 'நம் கூரத்தாழ்வான் சரண்கூடியபின் பழியைக் கடத்தும் இராமாநுசன்' என்று ஒரு த்வாரத்தை முன்னிட்டு அல்லாவழியைக் கடத்திவைத்த உபகாராதிஶயத்தில் ஈடுபட்டார் திருவரங்கத்தமுதனார். இவர் 1'பிதா ப்ரஹ்மோபதேஷ்டா மே குருர்தைவதம் ச ய: । ப்ராப்யஶ்ச ப்ராபகஶ்ச' என்றும், 'எங்கள் தூப்புல் தேவே அருளாய் இனி எனக்கு உன்னருளேயன்றி ஆறில்லையே', 'மன்னிய நற் றிருமந்திரம் ஓதும் பொருள் நிலையை பொன்னருளால் அருளாய்' என்றும் ப்ராப்யன், ப்ராபகன், ஆஶ்ரயணீயமான தேவதை, ஜ்ஞானோபதேஷ்டா முதலிய எல்லாம் அவனே என்று அந்த உபகாராதிஶயத்தில் ஈடுபட்டு அருளிச்செய்ததா யிருக்கும்.

இப்படி ஸர்வோபகாரங்களும் செய்தருளின ஒரு ஆசார்யனைப் பெற்ற இந்த அதிஶயம் இவருக்கு விஶேஷம். இதன் அருமையை 'ஓராசார்யன் பக்கலிலே க்ருத்ஸ்நோபதேஶமும் மைத்ரேயாதிகளுக்குப் போலே சிலருக்கு உண்டாம்' என்று ஸ்ரீ தேசிகன் அருளிச் செய்தார்.

ரஹஸ்யத்ரயங்கள்போலே இந்த மூன்று ஆசார்யர்களும் அமைந்தபடி காணீர். ஸ்ரீமந் நாதமுனிகள் மூலமாக ஸம்ப்ரதாய ஜ்ஞானம் உண்டாவதற்கு ப்ரதான காரணமான ஆழ்வார் ஸ்வரூபாதி ஜ்ஞானம் உண்டாவதற்குக் காரணமான திருமந்திரம்போலே. 'திருமந்திரத்திலே பிறந்து த்வயத்திலே வளர்ந்து' என்னுமாப்போலே அந்த ஸம்ப்ரதாய ஜ்ஞானம் லோகத்தில் பரவுவதற்குக் காரணமாய் வளர்த்த தாயான எம்பெருமானார் த்வயம்போலே. அப்படி வளர்ந்த ஜ்ஞானத்தை அனுஷ்டானபர்யந்தமாக்கி அவைகளில் ஸம்ஶயாதிகளில்லாமல் ஶ்ரோதவ்யவிஶேஷம் ஒன்றுமின்றிக்கே அநேக க்ரந்தமுகங்களாலே நிரூபித்து அந்த அர்த்தங்களுக்குக் குத்ருஷ்டிகளினால் கலக்கம் உண்டாகாதபடி செய்தருளினபடியாலே சரமோபாயத்தை ஸ்தாபித்தவரான சரமாசார்யன் சரமஶ்லோகம்போலே என்று பணிக்கும் நம் ஆசார்யன்.

பகவத் விஷயத்தில் ஸ்தோத்திரம் செய்ய இழிவார்க்கும் முதலிலும் கடைசியிலும் ஆசார்ய ஸ்துதி ஆவஶ்யகமாயிருந்தது. ஏனெனில் முதலில் ஸ்தோத்திரத்திற்கு அவஶ்யமான ஜ்ஞானவைஶத்யாதி

1. பிதாவாயும், ப்ரும்மோபதேஶம் செய்தவராயும், எனக்கு ஆசார்யனாயும், பரதேவதையாயும், ப்ராப்யனாயும், ப்ராபகனாயும்.

கள் உண்டாவதற்கும், பகவதாபிமுக்யம் பெறுகைக்கும் இவர்களை முன்னிட்டல்லது வழியில்லாமையினாலே. கடைசியிலும் இதில் ஶப்தம் அர்த்தம் இவைகளில் ந்யூநாதிக்யாதி தோஷங்களைப் பொறுத்தருளுவதற்காக வேண்டியிருந்தது. ஆகையினாலே ஸ்தோத்திரரத்னம் என்னப்படும்படியான மேன்மை பெற்றது. 1‘ஸ்தோத்ர ரத்நமிதம் ந்யஸ்தமாசார்யஸ்துதிஸம்புடே । நிதாநமிவ நிஸ்ஸீமம் நிர்விஶந்தி விபஶ்சித:॥’ என்று கொண்டாடப்பட்டதாயிற்று. அப்படி ஆசார்ய ஸ்தோத்திரங்களைச் செய்தருளினவர்கள் முன்பாவது பின்பாவது வேறொரு தேவதையை ஸ்தோத்திரம் பண்ணினர்களாகக் காணப்படவில்லை. இது ஸ்வயமே ஜ்ஞான வைராக்யத்தையும், கொடுத்து ஸ்தோத்திரத்திற்கு விஷயமாயும் நின்று ஸ்தோத்திரத்திற்கு ஸாத்குண்யத்தையும் கொடுக்கக் கூடியதாய் நின்றது. எந்தப் பகவத் ப்ரஸாதத்திற்காகப் பகவானை ஸ்தோத்திரம் செய்யவேண்டுமோ அந்த பகவத் ப்ரஸாதம் இந்த ஆசார்யஸ்தோத்திரத்தினால் அதிஶயிதமாகக்கிடைக்கும் என்பது2 ‘யதா ஸ்வயாரணநியமோ ஹ்யாசார்யஸ்ய [illegible] ஸ்வதா [illegible]’ என்று ஸ்ரீஸ்தோத்திர பாஷ்யத்தில் அருளிச் செய்யப்பட்டதிறே. ஆகையினால் தன்னைப் பற்றும்பொழுது வேறு ஒன்றை அபேக்ஷிக்கும்படி நிற்கிற பகவத் விஷயத்தைக் காட்டிலும் எல்லா விஷயங்களிலும் வேறு ஒன்றை அபேக்ஷிக்க வேண்டாதபடியாய் நிற்கிற ஆசார்ய விஷயம் உத்க்ருஷ்டம் என்பது நிர்விவாதமாய் ஏற்பட்டது. இப்படிப்பட்ட ஏற்றத்தைக்கினைத்து3 ‘கரஸ்தோதகம் த்யக்த்வா கநஸ்தமபிவாஞ்சதி’ என்றது. ஆகையினாலே பூர்ணமான ஆசார்யர்கள் விஷயத்தைப்பற்றிப் பரிபூர்ணர்களான குருபக்த ரத்னத்ரயங்களும் அவர்களின் ஸ்ரீஸூக்திகளுமே அத்யந்தாகிஞ்சனர்களான நமக்கு மிகவும் உபாதேயமாகக் கடவது என்பதை ‘மதுரகவி தோன்றக்காட்டும் தொல்வழியே நல்

---

1. ஆசார்யனுடைய ஸ்தோத்திரமாகிய ஸம்புடத்தின் நடுவில் வைக்கப்பட்டிருக்கிற இந்த ஸ்தோத்ர ரத்னத்தை வித்வான்கள் எல்லையில்லாத நிதியைப் போல அனுபவிக்கிறார்கள்.

2. அன்றிக்கே ஏவ என்பதினாலும், நியமேன என்பதினாலும் அதிகமான பகவானுடைய அனுக்ரஹம் வேண்டுமானால் அந்தப் பகவானைவிட ஆசார்யனை எப்பொழுதும் பஹுமானம் செய்யத்தக்கவன் என்பது தெரிவிக்கப்படுகிறதாகவுமாம்.

3. கையில் இருக்கும் ஜலத்தைவிட்டுவிட்டு மேகத்தில் இருக்கும் ஜலத்தை ஆசைப்படுகிறான்.

வழிகள் துணிவார்கட்கே', 1'ஆசாயஃஸ்ஸத்ருஹ்ரவுஉத்ர்யுபகாரணயியா தெவவக் ஸ்யாஉபாஸ்ய:' என்று நம் ஸ்ரீதேசிகனும் அருளிச் செய்தது. அவர்களிலும் 2 'ஆசாய்யகொவயுக்தா ஏ நிமணகய் தா: தெஶிகெ: ஷெநவொக்தா: ஸவெஹஹாாரமணா ஸ்வு: ஸவெஉதவிஹவா: ஸவஉதந்த்ர ஸ்வதந்த்ர । ஶிஷ்யகெவொவயுக்தா கவிவ மணமணா: கூரநாயெ யயா ஸ்வு: நாந்ய த்ராவாயஉவமெஉ கதிவந ஹி மணா: ப்ராயஶஸ்துதி்ருஷ்டா:॥' என்று அண்ணனும், 3 'தெஶிகொ நிமஶேஷாயயாக் தக்தகாக் ஸாக்விகா ஜநா: । தத்ஸூக்தெவு ப்ரபெஸாநோ்யா நாஸ்தி நாஸ்தி ஊஹீதலெ॥' என்று தொட்டயாசார்யரும், 4 'ஆசாகைாஹமய மெருபிவராவாவதி ஐக்ஷாவ மாவாயஉநவிஜாநு ப்ரணஶ்ய ஶிரஸா யாவதா வாவாநயா । தந்தாக்ஷ்கவிதாஸ தக்வாணை தந்தெ யவாந்தெஶுதெ: த்ருஷ்ட: கிம் ஸத்யமா

1. ஆசார்யன் ஸத்துக்களினுல் ப்ரத்யுபகாரம் செய்கிறோம் என்கிற எண்ணம் இல்லாமல் பகவானைப்போல உபாஸனம் செய்யத் தகுந்தவன்.

2. ரிஷிகளினுல் சொல்லப்பட்டவைகளும், ஸ்ரீ தேசிகனுலேயே அருளிச் செய்யப்பட்டவைகளுமான ஆசார்யனுயிருக்கைக்கு உபயுக்தமான குணங்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து பெருமையுடன் ஸர்வதந்திர ஸ்வதந்திரர் என்ற இவ்வாசார்யனிடத்தில் விளங்குகின்றன, ஶிஷ்யத்வோபயுக்தங்களான குணங்கள் எப்படி கூரத்தாழ்வானிடத்தில் இருந்தனவோ, அப்படியே ஆசார்யவர்க்கத்தில் வேறு ஒருவரிடத்திலும் இல்லை, பெரும்பாலும் சிற்சில குணங்களே மற்ற ஆசார்யர்களிடத்தில் காணப்படுகின்றன.

3. ஸ்ரீ தேசிகனைவிட வேறு ஆசார்யனும் அவருடைய பக்தர்களைக் காட்டிலும் ஸாத்விக ஜனங்களும் அவருடைய ஸ்ரீஸூக்திகளைத்தவிர வேறு ப்ரபந்தமும், இந்தப் பூமியில் இல்லவே இல்லை.

4. மேரு பர்வதம் முதல் லங்கை வரையிலாக உள்ள பூமியில் இருக்கும் எல்லா ஆசார்யர்களையும் ஸேவித்து இந்த வார்த்தையினுல் ப்ரார்த்திக்கிறேன். தர்க்கஶாஸ்திரம், மீமாம்ஸை, வேதாந்தம், இவைகளில் ஸ்ரீ தேசிகனைப்போல் யாராவது காணப்பட் டிருக்கிருர்களா? ஸத்யமாய் சொல்லவேண்டும்.

மஹோஜ்ஞமார்ணவம் தயாம் ஶவெ கயாந்தரா:' என்று அரஸாணிபாலை வெங்கடாசார்யரும் அநுஸந்தித்திருக்கிறபடியே ஆசார்யத்வோபயுக்த குணங்களாலே பரிபூர்ணராய்த் தனக்கு ஒருவரும் நிகரில்லாமல் விளங்குகிற ஸ்ரீநிகமாந்த தேசிகனை ஸ்தோத்திரம் செய்த தூப்புல் நயினரும் அவருடைய ஸ்ரீ ஸூக்தியாகிய பிள்ளையந்தாதியுமே ஸத்வ நிஷ்டர்களுக்கு அத்யந்தோபாதேயம் என்றறியத் தக்கது. இப்படிப்பட்ட குணபூர்ணமான ஆசார்யன் விஷயத்தில் தமக்குண்டான நிஷ்டையை நாட்டாரும் அடைந்து உஜ்ஜீவிப்பதற்காக இப்ரபந்தத்தை அருளிச்செய்கிறார்.

முதல் பாட்டு.

இதில் முதல்பாட்டில் எம்பெருமான் துடக்கமாய் எம்பெருமானார் பர்யந்தமான ஆசார்யர்களுடைய க்ருபைக்குப் பாத்திரமாகிய ஸ்ரீதேசிகன் திருவடிகள் தமக்கு ஶிரஸா தார்யமாயிற்று என்று ஸ்வலாபத்தைப் பேசி ஹ்ருஷ்டராகிறார் - 'மாமலர்' என்றாரம்பித்து.

மாமலர் மன்னியமங்கை மகிழ்ந்துறை மார்பன்தாளாம்
தூமலர் சூடியதோல்லருள் மாறன் துணையடிக்கீழ்
வாழ்வையுகக்கு மிராமாநுசமுனி வண்மை போற்றும்
சீர்மைய னேங்கள்தூப்புல்பிள்ளைபாதமேன் சேன்னியதே. 1

[ப - ரை.] மா - பெரிய, மலர் - புஷ்பத்தில், தாமரைபுஷ்பத்தில் என்றபடி, மன்னிய - ஸ்திரமாகவஸிக்கிற, மங்கை-யுவதியாகிய லக்ஷ்மி, மகிழ்ந்து - ஸந்தோஷத்துடன், உறை - வாஸம் பண்ணுகிற, மார்பன் - திருமார்பையுடைய எம்பெருமானுடைய, தாளாம் - திருவடிகளாகிற, தூ - பரிசுத்தமான, மலர் - புஷ்பங்களை, சூடிய - ஶிரஸாவஹித்த, தோல் - அநாதியான, அதாவது ஸஹஜமான, அருள் - க்ருபையையுடைய, மாறன் - நம்மாழ்வாருடைய, துணையடிக்கீழ் - இரண்டு திருவடிகளின் கீழே, வாழ்வை - வாழுதலை, உகக்கும் - ஸந்தோஷத்துடன் அங்கீகரித்திருக்கிற, இராமாநுசமுனி - ஸ்ரீபாஷ்யகாரருடைய, வண்மை - வைலக்ஷண்யத்தை, போற்றும் - ஸ்தோத்திரம் செய்கிற, சீர்மையன் - கல்யாண குணங்களை யுடையவரான, எங்கள் - எங்களுக்கு அஸாதாரண ஸ்வாமியான, தூப்புல்பிள்ளை — விஶ்வாமித்ர குலத்தில் அவதரித்த ஸ்ரீ தேசிகனுடைய, பாதம் - திருவடிகள், என் - என்னுடைய, சேன்னியதே - தலையின்மேல் இருக்கிறது. 1

[தா - ம்.] 'மாமலர்' இத்யாதியினால் லக்ஷ்மீ நித்யவாஸம் பண்ணும் பெருமை சொல்லப்படுகிறது. இத்தால் அழகு, மார்த்தவம், நல்லவாஸனை முதலிய குணங்களும் விவக்ஷிக்கப்பட்டவைக

ளாகின்றன. 'மன்னிய' என்பதினால் 'பத்மஸ்திதாம்' (தாமரைப் புஷ்பத்தில் இருக்கிற) என்கிற ஸ்ரீஸூக்தவாக்யம் ஜ்ஞாபகப்படுத்தப்பட்டதாகிறது. 'மங்கை' என்றது அவன் நித்ய யுவாவாயிருக்கிறபடியினால் 1'யௌவநாதிகுணதுல்யா' 2'துல்யஶீலவயோவ்ருத்தாம்' என்கிறபடியே இவளும் அதற்கேற்ப யுவதி தசையை அடைந்திருப்பள் என்றபடி. இத்தால் பிராட்டியின் திருமேனியினுடைய ஸௌகுமார்யாதிகள் ஸூசிப்பிக்கப்படுகின்றன. 'மகிழ்ந் துறைமார்பன்' என்பதினால் 3'பாதாரவிந்தபரிவேதவஞ்ஜராஜ:' என்கிறபடியே இவள் திருமேனியின் ஸௌகுமார்யாதிசயத்திற்குத் தாமரைப் புஷ்பம் அநுரூபமா யில்லாமையாலே அதில் வஸிக்கும் பொழுது மகிழ்ச்சி இல்லையென்பதும், இவனுடைய திருமார்பை அடைந்த பிறகு அநுரூபமாயிருப்பதினாலே மகிழ்ச்சி உண்டானமையும் தெரிவிக்கப்படுகிறது. இத்தால் ஸ்ரீமதுரகவிகள் தம் ஆசார்யனாகிய நம்மாழ்வாரை ஸ்துதிக்க ஆரம்பிக்கும் பொழுது அவர் 'எத்திறம்' என்று ஈடுபட்ட துறையாகிய உரலினோடிணைந்திருந்தேங்கிய ஸௌலப்யாதிசயத்தை 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' இத்யாதியாக உபக்ரமித்தாப்போல இவரும் 'பற்பில்மறந்த செய்யாள் படிகாட்டிய பண்புடை எம் விற்புருவக்கொடி' என்று தம் பிறந்தகத்தைவிட்டு எம்பெருமான் திருமேனியின் ஸௌகுமார்யாதிசயங்களில் ஈடுபட்டு4'பஶ்யதாம் ஸர்வதேவாநாம் யயௌ வக்ஷஸ்ஸ்தலம் ஹரே:' என்கிறபடியே அவனையே பர்த்தாவாக அநுஸந்தித்த குணாதிசயத்தில் உகந்தருளினவரானபடியினாலே அதைக் கொண்டே உபக்ரமிக்கிறார் என்கிற ஸங்கதியும் ஸூசிப்பிக்கப்பட்டதாகிறது. அப்படியே பெரியமுதலியாரும் 'க: ஸ்ரீ: ஸ்ரிய:' என்று அருளிச்செய்தபடி அநுஸந்திக்கத் தக்கது. இப்படி அவள் எம்பெருமானுடைய வக்ஷஸ்தலத்தை ஆஸ்ரயித்த பிறகேயிறே அந்த சேர்த்தியில் ஆஸ்ரயித்தவர்களுக்கு ஸர்வாபீஷ்டங்களும் ஸித்திக்கும்படி இருக்கிறது என்னும் இவ்வர்த்தத்தை5'ஸுதாப்ளுதஸஹஜே விஷ்ணுவக்ஷஸ்ஸ்தலாஶ்ரயே ஶாபாக்ஷதா ஶரண

1. யுவத்வம் முதலியவை ஸமமாயிருந்த போதிலும்.

2. ஸமமான ஶீலம், வயது, வ்ருத்தம், இவைகளை உடைய

3. தாமரைப்புஷ்பத்தின் தாள் திருவடிகளுக்கு அருந்துதமாயிருக்கும்.

4. எல்லாத்தேவதைகளும் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுது பகவானுடைய திருமார்பை அடைந்தாள்.

5. அம்ருதத்துடன்பிறந்தஓ! பிராட்டியே, சாபத்தினால் பீடிக்கப்பட்டவரும் பத்நியுடன் கூடினவருமான தேவ ஸ்ரேஷ்டர்கள் அமுதில் பிறந்து பெருமாள் திருமார்பையடைந்த உம்மைஸே

ஶேஶேநு ஸாவரோயா ஸூரேந்த்ராः । யஸ்யா ஹ்ருதயஸிம்ஹாஸநம் ஜிதம் யக்ஷிதம் க்ஷவஸ்கடாசேக்ஷः ஸவயூர்காஸ ஸ்ரீரஸம்பூத்யாம் ஸம்வேதம் நிவியுஶந்தி ॥' என்று ஸ்ரீதேசிகனும் அனுஸந்தித்தருளி ஞர். 'வ்ருக்ஷாக்ரே தத்ஸவ தா வீக்ஷ்ய ஹ்ருஜாதரோ தாம் ஸ்வாசேவ மோவநஜ்ரீஸ ஜநாவிஹ்ருஷ்டே' என்கிறபடியே இம்மிதுனத்தை ஸாக்ஷாத்கரித்தவரான பேயாழ்வாரும் 'திருக்கண்டேன்' என்று துடங்கி 'சார்வு நமக்கு ** பூமேல்திரு' என்று உபஸம்ஹாரம் செய்தார். இவ்வர்த்தத்தை அபியுக்தர்களும் 'இம்மிது னத்தைப் பிரித்து பற்றுவார்கள் தலையறுப்புண்பார்கள்' என் றனுஸந்தித்தார்கள். 'மகிழ்ந்து' என்றது அந்தத் திருமார்பில் வஸிப்பதினால் உண்டான ஆநந்தத்தினால் பரவஶையாய் அஸ்தான பயஶங்கையினால் ப்ரஸ்தாவம் இல்லாமல் இருக்கும்பொழுது 'அகல கில்லேன் இறையும்' என்று சொல்லிக்கொண்டு என்ற படி. 'மாமலராள் மணவாளனார்' என்பதை அநுஸரித்து 'மாமலர்' இத்யாதி அருளிச் செய்யப்பட்டது என்றறியத் தக்கது. 'தாளாம் சூழலர்' என்பதினால் மற்றப் புஷ்பங்களைவிட பாவனத்வ போக்ய த்வாதிகள் விஞ்சியிருந்தமை விவக்ஷிதம். 'சூடிய' என்பதினால் 'கோலமாமென் சென்னிக்கு உன்கமலமன்ன குரைகழலே' என்று ஆழ்வார் அனுஸந்தித்தது ஸூசிதமாகிறது. 'தொல்லருள்' என்றது அநாதியான பகவத் க்ருபைக்குப் பாத்திரரான என்றபடி. 'மயர் வறமதிநலமருளினன்', 'நிர்ஹேதுகமாக எனக்குத் தன் திறத்தில் அஜ்ஞான கந்தமில்லாததொருபடி தன்னை உள்ளபடியே அறிவித்து' 'திருமாலால் அருளப்பட்ட சடகோபன்' இத்யாதிகள் இங்கனு ஸந்தேயம். அன்றிக்கே ஸ்வாபாவிகமான க்ருபையையுடைய என்று மாறனுக்கு விஶேஷணமாகவுமாம். அப்பொழுது 'அருள் கொண் டாயிரமின் தமிழ் பாடினன் அருள் கண்டீ ரிவ்வுலகினில் மிக் கதே' என்றும், 'தகவோக்கத்தில்' என்றும் அருளிச் செய்யப்பட் டிருப்பதை அநுஸந்தித்து ஸர்வோத்க்ருஷ்டமான க்ருபையை உடையவர் என்றர்த்தம். பகவானுடைய க்ருபை ஆசார்ய க்ரு பையை அபேக்ஷித்து வருகிறபடியினால் அது தொல்லருளாகாது. ஆசார்ய க்ருபை வேறு ஒன்றையும் எதிர் பார்க்காமையினால் ஸ்வா பாவிகமாகையினாலே 'தொல்லருள்' என்னப்படுகிறது. 'மாறன்' என்றது இவரவதரித்த குடிப் பெயர். அன்றிக்கே

வித்துக்கொண்டு உபாயமாக அடைந்தார்கள். உமது கடாக்ஷத்தினால் பார்க்கப்பட்டவர்களாய் ஸம்ருத்தமாய் இந்த முழுவுலகையும் அடைந்து எல்லாவற்றிலும் முன்போல் ஐஶ்வர்யத்தை அனுபவிக் கிறார்கள்.

குணக்ருதமான திருநாமமாகவுமாம். அப்பொழுது 1 'கலௌ க்ருத யுகம் தஸ்ய', 'கலியும் கெடும் கண்டுகொண்மின்' இத்யாதிகளில் படியே கலியுகத்திற்கு விருத்தமான ஸ்வபாவத்தை உடையவர் என்றர்த்தம். அன்றிக்கே தம்முடைய அபாரமான தொல்லருளாலே 2 'க்ருபயா ஸ்வம் ஸ்வபாவம் ஸம்வரணஸஹிதோ நகவிக்ராத் விஷ்ணோ பாதீய: தத்பதாத் தத்பதாரவிந்தோ விவச:' என்கிறபடியே தானுன தன்மையை மாற்றிக்கொண்டு அவதாரம் செய்தவர் என்றர்த்தமாகவுமாம் 'துணையடிக்கீழ்' என்றது பரஸ்பரம் ஸத்ருசங்களான திருவடிகளின் கீழே என்றபடி. ஆசார்யன் திருவடிகளுக்கு ஸத்ருசமானவைகள் வேறொன்றுமில்லை என்பது த்யோதிதம். அன்றிக்கே ஆஸ்ரிதர்களை ரக்ஷிப்பதை ஸ்வபாவமாக உடைய திருவடிகளின் கீழ் என்றாகவுமாம். 3'ஸ்ரீமத் தத் அங்க்ரியுகளம்' என்னப்பட்டதிறே, அதுவுமன்றிக்கே 'சரணௌ' என்றும், 4'பாதாரவிந்தயுகளம் சரணம் ப்ரபத்யே' என்றும் சொல்லப்பட்டிருக்கிறபடியே இரண்டுகளான திருவடிகளின்கீழே என்றபடியாகவுமாம். 'வாழ்வை யுகக்கும்' என்றதில் 'தாழ்ச்சி மற்றெங்கும் தவிர்த்து நின்தாளிணைக் கீழ் வாழ்ச்சியான் சேரும் வகையருளாய்' என்று ஆழ்வார் எம்பெருமானுடைய திருவடிகளின் கீழ் வாழ்வை ப்ரார்த்திக்காப்போல எம்பெருமானரும் 5'ஸவம்ஶ யதேவ நியமேந ஸேவ்யாநாம்' என்கிற பெரிய முதலியார் திருவுள்ளப்படி ஆழ்வாருடைய திருவடிகளை அடைந்தே உகந்திருந்தமை விவக்ஷிதமாகவுமாம். 'மாறனடி பணிந்துய்ந்தவன்' என்றாரிறே அமுதனாரும். 'உகக்கும்' என்பதில் இப்படி ஆழ்வார் திருவடிகளைப் பற்றினது கேவலம் ஸாஸ்திரத்திலல்ல, அவருடைய குணங்களைக்குத் தோற்றுப்பெருமாளிடத்தில் கைங்கர்யம் செய்த இளையபெருமாள்போல் இவரும் ஆழ்வாருடைய குணங்களில் ஈடுபட்டு அவரடிபணிவதை உகந்தாராயிற்று என்பது தெரிவிக்கப்படுகிறது.

---

1. அவனுக்குக் கலி யுகத்தில் க்ருத யுகம்.

2. எந்த ஆழ்வார் தம்முடைய பரமக்ருபைக்கு வசப்பட்டவராய்க்கொண்டு தம்முடைய ஸ்வபாவத்தை மறைத்துக்கொண்டு பகவானுடைய திருவடிகளிலிருந்து உண்டான வம்சத்தில் பிறந்தாரோ.

3. 4ம் பக்கம் பார்க்க.

4. தாமரைப் புஷ்பங்கள் போன்ற இரண்டு திருவடிகளையும் சரணமாக அடைகிறேன்.

5. என்னைச் சேர்ந்தவர்களுக்கும் எந்த ஆழ்வாருடைய திருவடிகளை எல்லாமோ.

வண்மைபோற்றும் என்றது வைலக்ஷண்யத்தைஸ்துதிக்கும்என்றபடி அதாவது 1'வத்ப்⁴ர ஸம்யமிநாம் பூர்ணஸ்ய வாரணள தத்வாஉகொ டீரயொஸம்வெஙேந ஸம்ஙோநவிஹவாநு யந்ரா°ஸ்யாந்ராநு ம்ராரிநு' என்று ஸ்ரீபாஷ்யகாரர் தம்முடைய ஸம்பந்தத்தி ளுலே மற்றைய ஆசார்யர்களுக்கும் தரம்கொடுக்கும் உத்கர்ஷத்தை யும், 2'யதிராஜேந நிவஙநாயகஸ்ரீ: ஜேதீமராரவஂக்திஹார யஷ்டி:' என்று குருபங்க்திக்கு நாயகரத்னம் போல் விளங்கும் தன்மையையும், ஸ்ரீ பாஷ்யாதி க்ரந்தமுகேன செய்தருளின உப காராதிசயத்தையும் அடிக்கடி ஸ்தோத்திரம் செய்தவரான என்ற படி. இத்தால் 3 'ஹாஷ்யம் தாவராரஂஜநம்' இத்யாதிகளாக ஸ்ரீ பாஷ்யகாரருக்கு விப்ரலம்பக்வாதிகளையும், அபிப்ராயபேதங்களை யும் கல்பிக்கிறவர்கள் வண்மை போற்றுமவர்களல்ல என்பதும் த்யோதிதம். 4'ஸூஙூா விஷுவவிபூஙஂஹவஉவீ வெவெஷெஶிகா ஷெ ஶிகா:' என்றிறே இவர்படி. அன்றிக்கே ஸ்ரீ ஶததூஷணீ முத லிய க்ரந்தங்களில் விஸ்தாரமாக ஶாஸ்திரார்த்தங்களை நிரூபித்து, இவ்வர்த்தங்களையெல்லாம் ஸ்ரீ பாஷ்யகாரரும் திருவுள்ளத்தில் கொண்டு இந்தப் பதத்தினால் பாஷ்யத்தில் கம்பீரமாய் அருளிச் செய்தார் என்று உபஸம்ஹாரம் செய்திருப்பதினால் ஸ்ரீபாஷ்யகாரருடைய கபீரமான பாவத்தை ஸ்தோத்திரம் செய்த என்றபடியாகவுமாம். 'மாமலர்' இத்யாதி - ஸ்ரீ, ஶ்ரிய:பதி, ஆழ் வார், எம்பெருமானார், இவர்கள் நம் ஸ்ரீதேசிகன் செய்தருளிய உபகாராதிஶயங்களை முன்னிட்டு அவருடைய குணாதிஶயங்களைப் போற்றுகிறார்கள் என்று பொருளாய் 5'ஶ்ரீ ஶ ஶ்ரீ ஶஂஜிஙய தீநு நிமோஹாய பூஹாவொஜூ:ஸரெஶாகொzவ தாராரஹவிஹவ: ராநோநஜொக்ராஷி:' என்று பெரிய பாகாலஸ்வாமியால் அரு ளிச்செய்யப்பட்ட ராமானுஜ தயாபாத்திரம் என்பதின் தாத்பர்

---

1. எம்பெருமானாருடைய திருவடிகளை ஸேவித்து அவருடைய திருவடிகளின் ஸம்பந்தத்தினாலும் திருமுடியின்ஸம்பந்தத்தினாலும் வ்ருத்தியடைந்த மஹிமையையுடையவர்களான மற்றஆசார்யர்களையும்.

2. ஸ்ரீபாஷ்யகாரரை நாயக ரத்னமாக உடைய இந்தப் பெரிய குருபங்க்தியாகிற ஹாரம்.

3. ஸ்ரீபாஷ்யமோவெனில் அயலாருடைய ஸந்தோஷத்திற்காக

4. ஸ்பர்த்தை ப்ரமம் விப்ரலம்பம் இவைகளினுடைய வழிக்கு வெகு தூரத்தில் இருப்பவர்களான ஆசார்யர்கள்.

5. எம்பெருமான், பிராட்டி, ஆழ்வார், 'ஸ்ரீபாஷ்யகாரர், ஸ்ரீ தேசிகன் இவர்களினுடைய ப்ரபாவத்தை ப்ரகாசம் செய்கிற ராமா னுஜ என்றாரம்பிக்கும் நல்ல ஶ்லோகம் அவதரித்தது.

யம் விவரிக்கப்பட்டது என்று அருளிச்செய்வராம் ஈச்சம்பாடி ஆச்சான். இதின் விஸ்தாரத்தை அந்தத் தனியன் வ்யாக்யானத்தில் கண்டுகொள்வது. இத்தால் இவருடைய க்ருபைக்குப் பாத்திரமானல் எம்பெருமானர், ஆழ்வார், ஶ்ரீ,ஶ்ரிய:பதி, இவர்களுடைய க்ருபை தன்னடைவே ஸித்திக்கும் என்றதாயிற்று. இத்தை வ்யதிரேகமுகேந அண்ணனும் 1‘ஶ்ரீமத்வாதிஹம்ஸாம்புவாஹார்ய ஶிஷ்யே ஜநா ஹ்யத்ர பக்திஹீநா யதீந்த்ரப்ரியாஸ்ஸ்யு: । யதீந்த்ரப்ரியா விஷ்ணுகாருண்யதூரா: கதந்தேஷு முக்திவார்தா ஹி தாத்ருக்விதாநாம் ॥’ என்றருளிச் செய்தார். ‘சீர்மையன்’ என்றது 2 ‘ஸுஶீலோ குருபக்திக:’ என்கிறபடியே ஆசார்ய பக்தியாகிய உத்தமமான குணத்தை உடையவன் என்றபடி. அப்படிப்பட்ட குருபக்தி உடையவர்களுக்கு மற்ற எல்லா உத்தம குணங்களும் தானே ஸித்திக்கும் என்பது 3 ‘ஸக்ருதேவ குரோரேகத்ருஷ்ட்யா ஸாத்யம் விதேஹதயத் । ந தத்ஸித்த்யதி ராஷ்டாஸஹஸ்ரஸஹஸ்ரைரிதரேஷ்வபி ॥’ என்று ஶ்ரீதேசிகனாலேயே அருளிச் செய்யப்பட்டிறே. 4‘குருஸேவநநேத்ரபாஜா’ என்று தமக்குக்குருபக்தியை நேத்ரமாய் நிரூபித்தாரிறே. அன்றிக்கே, ஏற்கும் பெரும்புகழ்வான வரீசன் கண்ணனைப்போற்ற ஏற்கும் பெரும்புகழ் வண்குருகூர்ச் சடகோபன் அமைந்தாப்போலே ‘நிவிஷ்டம் யதிஸார்வபௌமவசஸாம் வ்ருத்திஷ்வயத்நம்’, என்றும், ‘யதிவரனார் மடைப்பள்ளி வந்த மணம் எங்கள் வார்த்தையுள் மன்னியதே’ என்றும் சொல்லுகிறபடியே ஶ்ரீபாஷ்யகாரருடைய வண்மையைப் போற்றுவதற்

---

1. வாதிஹம்ஸாம்புதாசார்யர்என்கிற அப்புள்ளாருடையஶிஷ்யராகிய ஶ்ரீ தேசிகனிடத்தில் பக்தி இல்லாதவர்கள் ஶ்ரீ பாஷ்யகாரருக்கு அப்ரியர்களாவர்கள், ஶ்ரீபாஷ்யகாரருடைய ப்ரீதிக்கு விஷயமல்லாதவர்கள் பகவானுடைய க்ருபைக்குத் தூரத்தில் இருப்பவர்கள், அப்படிப்பட்டவர்களுக்கு மோக்ஷம் என்கிற வார்த்தை எப்படி உண்டாகும்?

2. குறையாத ஆசார்ய பக்தியை உடையவனும்

3. ஒன்று அல்லது இரண்டுகளான ஆசார்யனுடைய கடாக்ஷத்தினல் எது ஒருவனல் அடையப்படுமோ அது மற்றவர்களினுடைய மூன்று, அல்லது எட்டு, அல்லது ஆயிரம் கடாக்ஷங்களினலும் அடையப்படாதது.

4. ஆசார்யனை ஸேவிப்பதை நேத்ரமாக உடைய.

குப் பரிபூர்ணமான அதிகாரத்தை உடையவர் என்றபடியாகவு மாம். ஸ்ரீ தேசிகனைத்தவிர வேறு ஒருவருக்கும் ஸ்ரீ பாஷ்ய காரரை ஸ்துதிக்க யோக்யதை இல்லை என்றதாயிற்று. ‘எங்கள்’ என்பது ‘பாதம்’ என்பதுடன் அந்வயிக்கிறது. 5 அப்பொழுது ‘ஸ்தோஷ்யாமி ந꞉ குலதநம் குலதைவதம் தத்பாதாரவிந்த மரவிந்தவிலோசநஸ்ய’ என்று பெரிய முதலியார் எம்பெருமான் விஷயமாய் அருளிச்செய்ததை இவர் ஆசார்யன் திறத்தில் அனு ஸந்தித்தாராயிற்று. இவருக்கு ஸர்வவித பந்துவும் இந்த ஆசார் யனே என்பதும் 6 ‘[illegible]’ இத்யாதி ஸ்வஸூக்தியாலே ஸித்தம். இது ‘எங்கள்தூப்புல்பிள்ளை’ என் றந்வயித்து அர்த்தம் அருளிச்செய்தபடி. ‘என்சென்னியதே’ என்றது என்னுடைய ஶிரஸ்ஸைத் தனக்கு வாஸஸ்தானமாக உடை யது, தவிரவேண்டிய விஷயங்களில் முடிதாழ்ப்பதைத் தவிர்ந்து வகுத்த விஷயத்தில் நம் ஶிரஸ்ஸு ப்ரவணமாகப் பெற்றதே என்ற படி. ‘பாதம்என்சென்னியதே’ என்றதினால் ஶிரஸ்ஸு திருவடி களைத் தான் வஹிக்க வேண்டுமென்று ப்ரயத்தினம் செய்து வஹிக்கவில்லை. ‘வாழ்த்தி அவனடியைப் பூப்புனைந்து நின்தலையைத் தாழ்த்திருகை கூப்பென்றால் கூப்பாத பாழ்த்தவிதி’ யாகையி னாலே ‘திருக்கமலபாதம் வந்து என் கண்ணினுள்ளனவொக் கின்றதே’ என்கிற ந்யாயத்தினால் திருவடிகளே தங்களுடைய ஸஹஜ காருண்யத்தினால் என்னுடைய ஶிரஸ்ஸைத் தங்களுக்கு வாஸஸ்தானமாக அங்கீகரித்தன என்றபடி. என்னே இக்காருண் யம் இருக்கும்படி என்கிற ஹர்ஷாதிஶயத்தை ஸூசிப்பிக்கிறது ‘ஏ’ என்பது.

இரண்டாம் பாட்டு.

இப்படி விஸ்மிதராகப் பேசினதைக் கேட்டிருந்தவர்கள் இதற் குக் காரணமென்ன? ஸ்ரீதேசிகன் திருவடிகளை ஶிரஸ்ஸிலே வஹிக்கப்பெற்ற இது ஆஶ்சர்யப்படுவதற்குக் காரணமாகுமோ? என்று கேட்க, அதற்கு ஸமாதானமாக இது அலப்யலாபம் என் றருளிச் செய்கிறார் — ‘சென்னி’ என்றாரம்பித்து.

---

5. அப்படிப்பட்ட நம்முடைய குலதனமாயும், குலதைவத மாயும் இருக்கிற பகவானுடைய திருவடிகளாகிற தாமரைப்புஷ்பங் களை ஸ்தோத்திரம் செய்யப்போகிறேன்.

6. 9-ம் பக்கம் பார்க்க.

சென்னி வணங்கச்சிறுபனி சோரவென் கண்ணிணைகள்
வெந்நரகங்களும் வீயவியன் கதியின்ப மேவத்
துன்னு புகழுடைத் தூப்புற்றுரந்தரன் தூமலர்த்தாள்
மன்னியநாள்களு மாகும்கோல் மாநிலத்தீர் நமக்கே. 2

[ப - ரை.] மாநிலத்தீர் - விஸ்தாரமான பூமியில் இருக்கும் ஜனங்களே, நமக்கு, இதற்கு 'ஆகுங்கோல்' என்பதுடன் அந்வயம், சென்னி - ஶிரஸ்ஸு, வணங்க - தானே வணங்க, என் - என்னுடைய, கண் இணைகள் - இரண்டு கண்களும், சிறுபனி - சிறியவைகளான திவலைகளை, சோர - பெருக்க, வெம் - க்ரூரங்களான, நரகங்களும், வீய - நசிக்க, வியன் - ஆஶ்சர்யகரமான, அன்றிக்கே விலக்ஷணமான, கதி - மோக்ஷத்தில் உண்டான, இன்பம் - ஆநந்தமானது, மேவ - மேல் மேலென வ்ருத்தியடைய, துன்னு-(இந்தப் பூமி முழுவதும் நெருக்கமாய்) வ்யாபித்திருக்கிற, புகழுடை - கீர்த்தியையுடைய, தூப்புல் துரந்தரன் - தூப்புல் குலத்திற்கு துரந்தரரான நம் தேசிகனுடைய, தூ - பரிசுத்தமான, மலர் புஷ்பங்கள் போன்ற, தாள் - திருவடிகள், மன்னிய - ஸ்திரமாக அமர்ந்த, 'நம்தலையில்' என்று சேர்த்துக்கொள்ளவும், நாள்களும், ஆகும்கோல் - ஆகக்கூடியவைகளோ. 2

[தா - ம்] 'சென்னி வணங்க' என்றது 1 'ந நமேயம் ஹி கஸ்யசித்', 'நின் தலைபைத் தாழ்த்திரு கைகூப்பென்றால் கூப்பாத பாழ்த்தவிதி', 'யதி வா ந நமாமி பாதுகே' இத்யாதிகளிற்படியே பகவத்விஷயத்திலேயே வணங்காத நம்முடைய ஶிரஸ்ஸு ஸஜாதீயராகத் தோன்றி நிற்கிற ஆசார்யர்கள் திறத்தில் வணங்குவது மிகவும் துர்லபம் என்றபடி. 3 'ப்ரஜஹிஷி ப்ரதமம் ஸஹ தேஹத்ருஷ்டி யாதி: தத: ந தத்யதிகஸ்ய ஸம்ஸ்வரோ ஸ்ம் பவது.'

---

1. ஒருவரையும் வணங்கமாட்டேன் என்றபடி.

2. ஓ! பாதுகையே, உம்மை ஸேவிக்காவிட்டால்.

3. ஓ! பாதுகையே, முதலில் வெகுகாலம் தேஹம் முதலியவைகளே ஆத்மா என்றிருந்தேன். பிறகு தேஹாதிகள் ஆத்மாவைவிட வேறு என்று அறிந்து நானே ஸ்வதந்திரன் என்றிருந்தேன். பிறகு ஆசார்ய கடாக்ஷத்தினால் எம்பெருமானுக்கே தாஸபூதன் என்கிற விவேகத்தை அடைந்தேன். கடைசியாய் இப்பொழுது எம்பெருமானுக்குத் தாஸபூதையான உனக்குத் தாஸனாகி க்ருதார்த்தனானேன்.

ஸுஹ்ருதவத்வத்பாதாரவிந்த நமஸ்காரம் தவ பாதாரவிந்தநமஸ்காரம் வா தேவதேவ யந்த்யஜஸ்ரம்॥' என்று ஆசார்ய விஷயத்தில் தலைவணங்கி யன்றே இவன் தன்யனாவது. அன்றிக்கே 4 'யதாஹம் கௌஸல்யா வந்த்யா கீர்த்திவேஷா: ப்ருதிவேதிநோ' என்கிறபடியே வணங்கக்கூடா தென்று ஸங்கல்பம் செய்து வைத்திருந்த நம்முடைய தலையும் நம் முடைய புத்தி பூர்வகமன்றிகே விஷயஸ்வபாவத்தால் தானே வணங்கும்படியாயிற்று, இது ஒருபாக்யாதிஶயம் இருந்தபடி என்ற படியாகவுமாம். 'சிறுபனி' இத்யாதி-அப்படியே கண்களும் 'செல்வ நாரணனென்ற சொற்கேட்டலும் மல்கும்கண்பனி நாடுவன்மாயமே' என்றருளிச் செய்திருக்கிறபடியே அவ்வாசார்யன் செய்தருளின க்ருபாவிஶேஷத்தினாலே தானே பாஷ்பங்களைப் பெருக்காநின்றன. 'கனியிருந்தனைய செவ்வாய்க்கண்ணனைக்கண்ட கண்கள பனியரும்பு திருமாலோ' என்கிறபடியே விஷய ஸ்வபாவததினாலே இவ்வளவு அவஸ்தை பிறப்பதற்கு யோக்யதை இல்லாத நமக்கும் இந்தப் பரிபாகங்கள் தன்னடைவே உண்டாயிற்று. இத்தால், 'பய னன்றாகிலும் பாங்கலராகிலும் செயல் நன்றாகத் திருத்திப்பணி' கொள்ளுவதையே ஸ்வபாவமாக உடைய ஆசார்ய க்ருபா விஶேஷத் தின் மஹிமை ஸூசிதமாயிற்று. பகவத் விஷயத்தில் இந்தப் பரி பாக முண்டானவர்களை 5 'ஹர்ஷாச்ருபூர்ணநேத்ராம்பு: ப்ரஹ்ருஷ்ட க்ருததாதுர்வாநு । ஸதா பகவதாவிஷ்ட: த்ருஷ்டவ்யஸ்ஸ து தேஹிபி: ॥' என்று நின்றது. இது ஆசார்ய விஷயத்தில உண் டாகும்பொழுது பெரும் பேறு என்பதற்குத் தட்டென் என்று தாத்பர்யம். இந்தப் பரிபாகங்களின் பலத்தை அருளிச் செய்கிறார்- 'வெந்நரகங்களும்' இத்யாதியால். சேதனர்களை ஹிம்ஸிப்பதற்கா கவே ஸ்ருஷ்டிக்கப்பட் டிருப்பதினால் 'இன்பமில் வெந்நரகு' என்று சொல்லப்பட்ட மிகவும் க்ரூரங்களான நரகங்கள் என்றபடி. 'வீய' என்றது 'அறிவிலாமனிசரெல்லாம் அரங்கமென் றழைப்பராகில் பொறியில்வாழ் நரகமெல்லாம் புல்லெழுந் தொழியுமன்றே,' 'நர கமே சுவர்க்கமாகும் நாமங்களுடைய நம்பி' என்று பகவந் நாமங்

---

4. தங்களுடையஇந்திரியங்கள் தங்களுக்கு ஸ்வாதீனமில்லா தவர்களாய்பகவானிடத்தில் உசிதமானபடி நடந்துகொண்டார்கள்.

5. ஸந்தோஷத்தின் மிகுதியினால் குளிர்ச்சியடைந்த பாஷபங் களுடன்கூடின கண்களையுடையவனும், மயிர்க்கூச்சல் அடையும் ஶரீரத்தை உடையவனும், எப்பொழுதும் பகவானுடைய குணங் களினால் பிடிக்கப்பட்டவனும் இருப்பவன் எல்லோராலும் பார்க் கத்தக்கவன்.

ஸ்ரீராமஜயம்

களுக்கே அஹ்ருதயமாகச் … நாசம் செய்யும்படியான தன்ன … டிருக் … லலிய படி பக்தி புரஸ்ஸரமாக ஆசார்ய … வடிகளை … ஸாவஹிக்கப் பெற்ற இவரோடு ஸம்பந்தித்தார்க்கும் 'கொடுமை செய்யும் கூற்ற மென் கோலாடி குறுகப்பெறா' என்கிற ந்யாயத்தினாலே நரகானு பவம் ஏற்படாதாகையினாலே நரகத்திற்கு மனுஷ்யர்கள் இல்லாமல் அது அழிந்துவிடும் என்றபடி. 'வியன்கதி' இத்யாதி - மோக்ஷத் திலும் 'குருக்கள் குழாங்கள் குரைகழற்கீழ் மாறுதலின்றி மகிழ்ந் தெழும் போகத்து மன்னுவமே,' 6 'அத்ர பரத்ர சாபி நித்யம் யதீயசரணௌ சரணம் மதீயம்' இத்யாதி ப்ரமாணங்களாலே ஆசார் யன் திருவடிகளில் கைங்கர்யம் ப்ர … கையினால் அது இங்கே கிடைத்தபடியினால் மோக்ஷாநந்தம் கிடை … அனுஸந்திக்கத் தட்டில்லை என்றபடி. 'மேவ' என்றது ப் … வ்ருத்தி யடைந்து வர என்றபடி. அன்றிக்கே காஷ்ட … ப்தமான ஆசார்ய கைங்கர்யம் லபித்தது சொல்லப்பட்டது. இ … தால் 'கரிய கோலத் திருவுருக்காண்பன் நான் பெரிய வண்குருகூர்நகர் நம் பிக்கு ஆளுரியனாய்' என்றருளிச் செய்தபடியே பகவதனுபவ கைங்கர்யங்களும் ப்ராப்தமாவது ஸித்தம் என்பது த்யோதம். 'தேவுமற்றறியேன்', 7 'ஆசார்யாதிஹ தேவதாம் ஸமதிகாம் அந்யாம் ந மந்யாமஹே' இத்யாதிகளை இங்கனுஸந்திப்பது. 'துன்னுபுக ழுடை' என்பதினால் 8 'ராமோ ராமோ ராம இதி ப்ரஜாநாம் அபவந் கதா: | ராமபூதம் ஜகதபூத் ராமே ராஜ்யம் ப்ரசாஸதி' என்கிற ந்யாயத்தினால் இந்தப் பூமண்டலம் முழுமையும் ஸ்வாமியினுடைய கீர்த்தி வ்யாபித்திருக்கிறபடி அருளிச் செய்யப் பட்டதாகிறது. 9 இவ்விடத்தில் 'காஷாயேண க்ருஹீத பீதவஸநா தண்டைஸ்த்ரிதண்டைர் ஸாம்ப்ரதீ … ஸம்ப்ரதாயஸ்ய ஜயதி

---

6. இந்த லோகத்திலும் மோக்ஷத்திலும் எப்பொழுதும் எந்த ஸ்ரீமந்நாதமுனிகளுடைய திருவடிகள் என்னுடையதாகிய சர ணமோ, அதாவது என்னைக் காப்பாற்றுகின்றவைகளோ.

7. ஆசார்யனைக்காட்டிலும் இந்த லோகத்தில் வேறான தேவ தையை மேற்பட்டதாக எண்ணமாட்டேன்.

8. ராமன் ராமன் ராமன் என்று ஜநங்களுடைய வார்த்தை இருந்தது, ஸ்ரீராமன் ராஜ்யபரிபாலனம் பண்ணும்பொழுது பூமி முழுவதும் ராமமயமாய் இருந்தது.

9. எந்த ஸ்ரீபாஷ்யகாரரினால் ப்ரகாசம் பண்ணப்பட்ட நல்ல வழியினால் (ஸம்ப்ரதாயத்தினால்) வ்ருத்திசெய்யப்பட்ட புத்தியை

... ணீ । யஸ்ய ப்ரக்யாவிததீர்யஸ்யவஸிதயயா ஹ்ருஸ்ய... நவிரோதாநிலம் ப்ரசுஸ்நியதாகீர்த்தி: ப்ராஜாமதிர்த்தந:॥' என்றது அநுஸந்தேயம். இத்தால் பெருமாளுடைய கீர்த்தி 'ஶத்ரோ: ப்ரக்யாதவீர்யஸ்ய' என்று ராவண கோஷ்டியிலும் ப்ரஸித்தமா யிருந்ததைப்போல நம் தேசிகனுடைய கீர்த்தியும் 'ப்ரத்யர்த்திபி: ப்ரார்த்தித:' என்கிறபடியே ப்ரதிவாதிகளினுடைய கோஷ்டியிலும் வ்யாபித்திருந்தமை த்யோதிதம். 'தூப்புல் துரந்தரன்' என்றது தூப்புல் குலத்திற்கு ஶோபையைக் கொடுக்கக்கூடியவர் என்றபடி. நம் தேசிகனுடைய ஸம்பந்தத்தினால் 'கீழ்மேலெமரேழெழுபிறப்பும்' என்கிற ந்யாயத்தினால் அந்தக் குலத்தில் முன்னோர்களும் பின்னோர்களும் பெருமை பெற்றது விவக்ஷிக்கப்பட்டதாகிறது. 'தூமலர்த்தாள்' என்றது கீழ்ப்பாட்டில் 'தாளாம் தூமலர்' என்று பகவானுடைய திருவடிகளுக்கு நிரூபிக்கப்பட்ட பாவனத்வ போக்யத்வாதிகள் இந்த ஆசார்யனுடைய திருவடிகளுக்கும் உண்டு என்றபடி. 'ஸ்ரீமத் ததங்க்ரியுகலம்' என்று அருளிச் செய்யப்பட்டதிறே. 'மன்னிய' இத்யாதியினால் இப்படி ஆசார்யன் திருவடியை பக்தி புரஸ்ஸரமாக ஶிரஸாவஹித்துக் கொண்டிருக்கும் நாள்கள் நமக்குக் கிடைப்பதரிது என்பது தெரிவிக்கப்பட்டது. அன்றிக்கே நாமிங்கு இருக்கும் நாள்கள் எல்லாம் மன்னிய நாள்கள் ஆகக்கடவதோ? 'ஸுகீதாநீம் ஸகாளஸ்யாத் வநாத் ப்ரத்யாகதம் ஸுதம் । யஸ்ய காலம் ஸுத்ருஶ ஸம்வஶ்யம் ஜடாவல்கலதாரிணம் ॥' என்று வனவாஸத்திற்கு நிஶ்சயித்துப் புறப்பட்ட பெருமாளைத் திருத்தாயார் பதிநாலு வருஷங்கள் காட்டிலே கழித்து ஜடை மர உரிகளுடன் திரும்பிவந்த உன்னை பார்த்து நான் ஸந்தோஷப்படும்படியான காலம் இன்றேயாய் இருக்கக்கடவதோ என்றாளிறே விரஹத்தைப் பொறுக்கமுடியாமல். அதைப் போலஇவரும் இந்த ஸம்ஸாரத்தில் இருக்கும் காலம் மன்னிய நாள்கள் ஆகுமோ என்கிறார். ஊமனார்கண்ட கனவிலும் பழுதாய்க் கழியக்கூடிய நாள்கள் இப்படி ஸபலமாகக் கழியக்கூடியவற்றோ என்றதாயிற்று. 'மாநிலத்தீர்' என்றது ஸர்வேஶ்வரன் தான்வந்து தடார்ந்து

யுடையவர்களும், அவருடைய குணங்களை அப்யாஸம் பண்ணுகிறவர்களுமான அடியோங்களுக்கு இன்ன தேசத்தில்தான் இருக்கிறது என்று சொல்லமுடியாத கீர்த்திபானது நாலு ஸமுத்திரம்வரையில் விளங்குகிறதோ, காஷாயத்தினால் க்ரஹிக்கப்பட்ட பீதாம்பரத்தை உடையதும், மூன்று தண்டங்களினாலே அலங்கரிக்கப்பட்டதும், வேதாந்தங்களுக்கு ஸம்ரக்ஷகமானதுமான பகவானுடைய மூர்த்தி

பிடித்தாலும் 'ஸுகம் ஶே' என்று திமிரப்பண்ணும்படியான இருள் தரும்மாஞாலத்தில் வஸிக்கிற ஜனங்களே என்றபடி. 1 'வாஸுதேவஸ் ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப:', 'அவஜாநந்தி மாம் மூடா:' என்கிறபடியே ஸர்வேஶ்வரனையே மதிக்காமல் 'விண்ணுளார் பெருமாற்கடிமை செய்வாரையும் செறுமைம்புலனிவை' என்றருளிச்செய்தபடியே ஶரீராதிகளுக்குப் பரவஶர்களாய், புலன்படிந்துண்ணும் போகமே பெருக்கி வாளாதிரிகிற நமக்கு இந்த அலப்ய லாபம் கிடைக்கக்கூடுமோ! இப்படி நம் தேசிகன் விஷயத்தில் பக்தி உண்டாவதில் அருமையை3 'யேஷாம் நித்யம் மாநஸம் ஸாஸூயம் தேஷாம் ஹ்ருதி ஸ்யாத் கதம் வேதாந்ததேஶிகே' என்றும், 4 'ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய வேதாந்ததேஶிகஸ்ய கேசித் அவமாநம் குர்வந்தி நராதமா: | ஹந்த ஹந்த ராமக்ருஷ்ண த்வேஷிணாமிவ கிமேதத் சித்ரம் ராவணஶிஶுபாலாநாம் |' என்றும், 5 'ந த்வேஷலேஶோ(அ)பி வா யேஷாம் வேதாந்ததேஶிகே | வீதிஷூத்கோஷயாம்யஹம் தேஷாமிதி கிங்கரோஸ்மி தாஸ: |' என்றும் அருளிச்செய்தார்களிறே. 2

மூன்றும் பாட்டு

இப்படி ஸ்ரீ தேசிகனுடைய சரணாரவிந்தங்களை ஶிரஸாதரிக்கப் பெற்றது அலப்யலாபம் என்று நிரூபித்ததற்குக் காரணம் அவர் ஜனங்களுக்குச் செய்த உபகாராதிஶயம் என்று அதை அருளிச்

போல் இருக்கிற அந்த ஸ்ரீபாஷ்யகாருடைய மூர்த்தியானது விளங்குகிறது.

1. பகவானே எல்லாமும் என்றிருக்கிற மஹாத்மா மிகவும் துர்லபன். 2. மூடர்களான ஜனங்கள் என்னை அவமதிக்கிறார்கள்.

3. எவர்களுக்கு மனதில் எப்பொழுதும் அஸூயையிருக்கிறதோ அவர்களுக்கு ஸ்ரீ தேசிகன் இடத்தில் பக்தி எப்படி உண்டாகும்?

4. ஸர்வதந்திர ஸ்வதந்திரரான ஸ்ரீ தேசிகனிடத்தில் இப்பொழுது சிலர் அவமானம் செய்கிறார்கள். ராமன் க்ருஷ்ணன் இவர்களை தூஷித்த ராவணன் ஶிசுபாலன் இவர்களைப்போன்ற இவர்களுக்கு இது என்ன ஆச்சர்யம்

5. எவர்களுக்கு ஸ்ரீதேசிகனிடத்தில் த்வேஷம் மாத்திரம் இல்லாமல் இருக்கிறதோ அவர்களுக்கு நான் வேலைக்காரன் என்று தெருக்களில் உத்கோஷிக்கப்படட்டும்.

செய்கிறார்—'மாநிலத்து' என்றாரம்பித்து. அன்றிக்கே கீழ் 'துன்னு புகழுடை' என்று அருளிச் செய்யப்பட்ட புகழின் விசேஷத்தை நிரூபிக்கிறாராகவுமாம்.

மாநிலத்தோதிய மாமறைமன்னிய நற்கலைகள்
ஆனவைசெய்யு மரும்பொருளத்தனையே யருளும்
தூநெறிகாட்டு மிராமாநுசமுனி தோத்திரம்செய்
ஊனமில்தூப்பு லையனோர்புகழன்றி உய்வில்லையே. 3

[ப - ரை.] மா - விஸ்தாரமான, நிலத்து - பூமியில், ஓதிய - அத்யயனம் செய்யப்படுகிற, மா - பெரியவைகளான, அதாவது அநந்தங்களான, மறை - வேதங்கள், மன்னிய - ஸ்திரமாய் இருக்கிற, நற்கலைகள் - நல்ல சாஸ்திரங்கள், ஆனவை - இப்படிப்பட்டவைகளால், செய்யும் - உண்டாக்கப்படுகிற, அரும் - பெறுவதற்கு அரியதான, பொருள் - புருஷார்த்தங்கள், அத்தனையே - எல்லாவற்றையும், அருளும் - (பகவான் நமக்கு) க்ருபை செய்வதற்குக் காரணமான, தூ - பரிசுத்தமான, நெறி - சரணாகதி மார்க்கத்தை, காட்டும் - ப்ரகாசம் செய்தவராயும், இராமாநுசமுனி - ஸ்ரீபாஷ்யகாரரை, தோத்திரம் செய் - ஸ்தோத்திரம் செய்தவருமான, ஊனமில் - ஒரு குணத்தினாலும் குறைவில்லாதவரான, தூப்புல் ஐயன் - தூப்புல் குலத்தில் அவதரித்த பிதாவினுடைய, ஓர்-ஒப்பற்றதான, புகழன்றி - கீர்த்தியையல்லாமல், உய்வு - உஜ்ஜீவனோபாயம், இல்லை. 3

[தா - ம்.] 'மாநிலத்தோதிய' என்றது இந்த அதிவிஸ்தாரமான பூமியில் இருக்கும் எல்லா ஜனங்களினாலும் ஒரே ஆனுபூர்வியுடன் ஓதப்படுகிற என்றபடி. இத்தால் ஸர்வஸம்ப்ரதிபன்னமான (எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட) ப்ராமாண்யத்தை உடையதாய் அநாதிநிதனுவிச்சின்ன ஸம்ப்ரதாயமாய் எல்லோராலும் ஒரேவிதமாய் அத்யயனம் செய்யப்பட்டதாயிருக்கும் என்பது த்யோதிதம். அன்றிக்கே இந்த லோகத்தில்இருக்கும் ஜனங்களால் ருக்யஜுஸ்ஸாம அதர்வ என்றிவை முதலிய சாகாபேதங்களாய்அத்யயனம் செய்யப்படும் பாகங்களும் இன்னும் அத்யயனம் செய்யப்படாத பாகங்களுமாக 'வேதங்கள் அநந்தங்கள்' என்று சொல்லப்படுகிறதாகவுமாம். 'மா' என்பது அதின் பெருமையைக் குறிக்கிறது. அதாவது வேறு ஒரு ப்ரமாணத்தினாலும் அறிய முடியாத அர்த்தங்களை நிரூபிக்கும் பெருமையைக் காட்டுகிறது. 'மறைமன்னிய' என்று அந்வயம். அப்படிப்பட்ட வேதங்கள் குடிகொண்டிருக்கிற,அதாவதுவேதங்களில்சொல்லப்பட்டிருக்கும் அர்த்தங்களை விசதப்படுத்துகிறபடியினால் உபப்ரும்மணங்களை ஆதாரமாகக்கொண்டு வேதங்கள் ஸ்தாபிக்கப்பட்டு நிற்கின்றன. அதாவது வேதங்களில்

சொல்லப்படும் அர்த்தங்க ... 'மறையில் மன்னிய' என் ... ...யாம். அதாவது வேதத்தை மூல ப்ரமாணமாகக்கொண்டு நிற்கிறவைகளான என்றபடி. வேதத்தை மூலமாக உடையதாகையில்லாமையினால் ஸாங்க்யாதி ஸ்ம்ருதிகள் அனுபாதேயங்களாகவும் அவற்றை மூலமாக உடையவைகளாகையினால் மந்வாதி ஸ்ம்ருதிகள் ப்ரமாணதமங்களாகவும் ஆயிற்று. அன்றிக்கே சாந்தோக்யத்தில் பூமவித்யையில் சொல்லப்பட்ட எல்லாக் கலைகளும் என்றாகவுமாம். 'அரும்பொருள்' இத்யாதி - ஸாஸ்திரார்த்தங்களின் அனுஷ்டானத்தினால் எந்தப்பலம் கிடைக்குமோ அந்தப்பலத்தைப் பகவான் நமக்குக் கொடுக்கும்படியான என்றபடி. 1 'ஸாக்ஷாத் ஸ்வர்ணமேவாஸ்ய: ... ... ஸுத ... நா। ஸகலஸ்யாஸ்ய ஸேவதி வரஶ்லோகஸ்ய ஸாரஹ: ॥'

என்பதிங்கனுஸந்தேயம். கீழ்க்கூறிய ஶாஸ்திரங்களினால் ப்ரதிபாதிக்கப்பட்டவனும் மற்ற ஒருவராலும் அறியமுடியாத ஆப்தனுமாகிய பகவானை, அருளும்-நமக்கு வசப்படுத்திக் கொடுக்கக்கூடிய, 'தூநெறி' எனவும் யோசிக்கலாம். இது 'தூப்புல்ஐய'னுக்கு விசேஷணம். 'இராமாநுசமுனிக்கு' விசேஷணமாகவுமாம். அதாவது ஸர்வாதிகாரமாய் ஸர்வபலப்ரதமான ப்ரபத்திமார்க்கத்தை ஸகலரும் அறியும்படி ப்ரகாசம் செய்தவரான என்றபடி. எம்பெருமானார் கத்யத்தில் ப்ரபத்தியின் ஸ்வதந்திரத்வரூபத்தை வெளியிட்டது விவக்ஷிதம். 'இராமாநுசமுனி' இத்யாதி - ஸ்ரீபாஷ்யகாரரை ஸ்தோத்திரம் செய்த. அன்றிக்கே பாஷ்யகாரரால் ஸ்தோத்திரம் செய்யப்பட்ட என்றாகவுமாம். 2 'நித்யக்ஷித்வரஸ்வரஷாஸயே ... ஶேஷாநிஷ்டா. திநஶிஷ்யா: கேவநஸந்திந: க்ஷிதிதமேஶிக்ஷாயிக ... ஹிண: । தத்ருக்வஹிதநிஷ்ஸ்ரவஸர்யாவஜ்யா வஷிஷ்டாஶிண: க்வத: வ்ருத்யிதாநக்ஷ்வரஷவர: வ்ருத்யிஷி: வ்ராயிஷித: ॥' என்று ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் அருளிச் செய்திருப்பது இங்கு விவக்ஷிக்கப்பட்டதாகிறது. எம்பெருமானாருடைய அந்திமதசையில் கவி

---

1. தனக்கு எந்தெந்த இஷ்டபலத்திற்கு ஸாதனமான உபாயத்தை செய்யமுடியவில்லை என்று எவன் ஶோகிக்கிறானோ அவனுக்கு அந்தந்த உபாயமாக நானே இருக்கிறேன் என்பது சரமஶ்லோகத்தின் தாத்பர்யம்.

2. எப்பொழுதும் ஒன்றோடொன்று தாங்களே நிராகரணம் செய்துகொண்டிருக்கிற ஸித்தாந்தங்களின் கூட்டங்களில் ஸாமர்த்தியமுடையவர்களாயும், கற்றுக்கொடுத்ததைவிட அதிகமாக க்ரஹிக்கக்கூடியவர்களாயும் இருக்கிற நம்முடைய சிஷ்யர்கள் சிலர்

பு... ...கொங்குப்பிராட்டி வ்ருத் தாந்தத்தையும் இங்கனுஸந்தப்பட்... ...க்கை செய்யும், அருளும், காட்டும், தோத்திரம்செய் இவைகள் எல்லாம் தூப்புல் ஐயனுக்கு விசேஷணமாகவுமாம். ஸர்வதந்திர ஸ்வதந்திரர் என்கிற பிருதை ஆக்ஷேபித்தவர்களை ஜயிப்பதற்காக பாம்பாண்டியை வென்றது, ஜலத்தைத் தூணில் இருந்து வெளிவரும்படிசெய்தது, கிணறு நிர் மாணம்செய்து கொத்தனைவென்றது, தம்முடைய விக்ரஹத்தையெழுந்தருளப்பண்ணி ஶில்பிராஜனை வென்றது முதலிய வ்ருத்தாந்தங்களை அநுஸந்திப்பது. ‘அரும்பொருள்’ இத்யாதியால் அந்த ஶாஸ்திரங்களில் உள்ள விசேஷார்த்தங்களை ஶில்பார்த்தஸாரம் முதலிய க்ரந்தங்களில் நிரூபித்தருளினதும் த்யோதிதம். ‘ஊனமில்’ இத்யாதி-ஆசார்யத்வோபயுக்த குணங்களில் கொஞ்சமும் குறைவில்லாத என்றபடி. குறைவொன்றுமில்லாத கோவிந்தனாய் அவதரித்தும் நீக்கமுடியாத குறைகளை நீக்கினது இந்த ஆசார்யாவதாரத்திலே என்றபடியாகவுமாம். 3:ஸவ்யூதஜு ஹூதஜு ஸ்வாகஸ்ஸாஷூஷீவ்யூஷா ந்த: । ஸ்ரீவெங்கடநாதெளாஸள ஸாக்ஷாதெஷாஜெஷிக: ॥’ என்றருளிச்செய்யப்பட்டதிறே. ‘ஐயன்’ என்றது ‘அன்னையாய் அத்தனாய்’ இத்யாதிகளில் நிரூபிக்கப்பட்ட ஸர்வவித பந்துத்வத்திற்கும் உபலக்ஷணம். ‘ஓர்புகழ்’ என்பதினால் இப்படிப்பட்ட புகழ் வேறு ஒருவருக்கும் இல்லையாகையினால் கீழ் ‘துன்னுபுகழ்’ என்றது யுக்தம் என்று நிரூபிக்கப்பட்டதாகிறது. ‘அன்றி உய்வில்லையே’ என்றது அவருடைய குணங்களை எப்பொழுதும் பக்திபுரஸ்ஸரமாக அநுஸந்தானம் செய்வதைவிட வேறு உஜ்ஜீவன ஹேது இல்லை என்றபடி. 3

நாலாம் பாட்டு.

இப்படி ஸ்ரீதேசிகனுடைய புகழன்றி உய்வில்லை என்று அறுதியிட்டது கூடுமோ? ஸ்ரீபாஷ்யகாரர் திருவடிகளை ஆஶ்ரயித்த ஶிஷ்யர்கள் அநேகம் திருநாமங்கள் ஸம்ப்ரதாய ப்ரவர்த்தனம் செய்யவில்லையோ? என்கிற ஶங்கைகளுக்கு ஸமாதானம் அருளிச் செய்கிறார் - ‘உய்யும்’ என்றாரம்பித்து.

இந்தப் பூமியில் இருக்கிறார்கள். அவர்களுக்குள் ஆஶ்சர்யகரமாயும் பரிபூர்ணமாயும் இருக்கிற பாவுதலையுடைய புத்தியினால் சிறப்புப்பெற்றவனான உன்னைவிட எதிரிகளால் ப்ரார்த்திக்கப்பட்டவனும் நம்பக்கூடியவனும் இருக்கிறவர் மற்றொருவரும் இல்லை.

3. எல்லாத் தந்திரங்களையும் தனக்கு ஸ்வாதீனமாக உடையவராகையினாலும், ஶாஸ்திரமாகிற விளக்கைக் கொடுப்பதினாலும், இந்த ஸ்ரீதேசிகன் ஸாக்ஷாத் திருவேங்கடமுடையானே.

உய்யும் வகையில்லை [illegible] வந்துதித்த
செய்யவள் மேவிய சீ[illegible]ரைச் சிந்தை செய்யும்
மெய்யவ னெந்தை யிராமநுசனருள் மேவிவாழும்
ஐயனிலங்கு தூப்புற் பிள்ளையாய்ந்த பொருளன்றியே. 4

[ப - ரை.] உத்தரவேதியில் - ப்ரும்மாவினால் செய்யப்பட்ட அஸ்வமேதயாகத்தில் கட்டப்பட்ட உத்தரவேதியில், வந்துதித்த - ஆவிர்ப்பவித்த, செய்யவள் - லக்ஷ்மீ, மேவிய - ப்ரீதியுடன் திருமார்பில் வஸிக்கிற, சீர் - கல்யாண குணங்களையுடைய, அருளாளரை - ஸ்ரீவரதனை, சிந்தைசெய்யும் - எப்பொழுதும் த்யானம் செய்து கொண்டிருக்கிற, மெய்யவன் - மெய்யையுடையவன், ருஜுவான ஸ்வபாவத்தை உடையவன் என்றபடி, எந்தை - எனக்கு ஸ்வாமியான, இராமாநுசன் - ஸ்ரீபாஷ்யகாரருடைய, அருள் - க்ருபையை, மேவி - தனக்கு உத்தாரகமாக ஆதரித்து, வாழும் - வாழ்ந்துகொண்டிருக்கிற, ஐயன் - பிதாவாகிய, இலங்கு - ப்ரகாசித்துக்கொண்டிருக்கிற, தூப்புல்பிள்ளை - தூப்புல் குலத்தில் அவதரித்த ஸ்ரீதேசிகன், இப்படியே மேல் எங்கும் கண்டுகொள்வது, ஆய்ந்த - ஸதஸத்விவேகம் பண்ணி அருளிச்செய்த, பொருளன்றி - அர்த்தங்களைத்தவிர, உய்யும்வகை - உஜ்ஜீவிக்கும்ப்ரகாரம், ஜனங்களுக்கு என்று சேர்த்துக்கொள்ளவும், இல்லை. 4

[தா — ம்]. 'உத்தரவேதி' இத்யாதியினால் ப்ரும்மா பகவானை ஸாக்ஷாத்கரிப்பதற்காக அஸ்வமேதயாகம் செய்யும்பொழுது அந்த யாகத்தில் உத்தரவேதியில் பெருமாள் ஆவிர்ப்பவித்தார் என்று ஸ்தலபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கும் வ்ருத்தாந்தம் ஸூசிப்பிக்கப்பட்டதாகிறது. 'வந்துதித்த' என்பதினால் 1 '𑌵𑍇𑌗𑌵𑌤𑍀𑌮𑌧𑍍𑌯𑍇 𑌹𑌸𑍍𑌤𑌿𑌶𑍈𑌲𑍇 𑌚 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 । 𑌉𑌪𑌾𑌯𑌫𑌲𑌭𑌾𑌵𑍇𑌨 𑌸𑍍𑌵𑌯𑌂𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂 𑌪𑌰𑌂 𑌮𑌹𑌃 ॥' என்கிறபடியே முதலில் யஜ்ஞத்தை விக்னம் செய்வதற்காக ஸரஸ்வதியானவள் வேகவதிநதியாக ப்ரவஹிக்க அதைத் தடுக்க யதோக்தகாரியாய் அவதரித்து, (வந்து), இங்கு பிறகு ஸேவைஸாதித்தது விவக்ஷிதமாகவுமாம். இப்படி ஆஸ்ரிதஸம்ரக்ஷணத்தினால் ஏற்பட்ட ஸந்தோஷத்தினால், 2 '𑌭𑌰𑍍𑌤𑌾𑌰𑌂 𑌪𑌰𑌿𑌷𑌸𑍍𑌵𑌜𑍇' என்கிற ந்யாயத்தினால் பிராட்டி பகவானிடத்தில் செய்த ஆதரம் விவக்ஷிக்கப்படுகிறது - 'செய்யவள்

---

1. ஸ்வயம் ப்ரகாசமாயும் உத்க்ருஷ்டமாயும் இருக்கிற ஒரே தேஜஸ்ஸாகிய பகவான் வேகவதிநதியின் மத்தியிலும், ஹஸ்திகிரியிலும் உபாயமாகவும் பலமாகவும் காணப்படுகிறார்.

2. பர்த்தாவாகிய ஸ்ரீராமனை ஆலிங்கனம் செய்துகொண்டாள்.

மேவிய' என்று. 'அருளா... க்ருபையையே தனக்கு அஸாதாரணமான நிரூபகமாக ... ர் என்றபடி. இத்தால் எம்பெருமானுரை கங்கையில் தள்ளிவிடவேண்டும் என்று யாதவ ப்ரகாசன் யோசனை செய்தகாலத்தில் இதை அறிந்து தாம்பிரிந்து காட்டில் வழிதெரியாமல் திகைத்துநின்ற காலத்தில் வில்லியும் வில் லிச்சியுமாகத் தோன்றி எம்பெருமானுரை ஹஸ்திகிரிக்கு அழைத் துக்கொண்டு வந்த க்ருபாதிஶயத்தை எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருந்தார் எம்பெருமானுர் என்பது விவக்ஷிதம். அன் றிக்கே 'அன்றே அடைக்கலம் கொண்ட நம் அத்திகிரித் திருமால்' என்கிறபடியே முதலிலேயே விஶேஷகடாக்ஷம் பண்ணினமையை எப்பொழுதும் நினைத்துக்கொண்டிருந்த என்றர்த்தமாகி தூப்புல் பிள்ளைக்கு விசேஷணமாகவுமாம். 'இராமாநுசனருள் மேவிவாழும்' என்றது 'ராமாநுஜதயாபாத்ரம்' என்று ப்ரஸித்தரான என்ற படி. இங்கு பகவான் முதலாகக்கிடாம்பி அப்புள்ளார் பர்யந்த மான ஸர்வாசார்யர்களுடைய க்ருபைக்கும் பாத்திரபூதரென்று இந்தத் தனியன் வ்யாக்யானத்தில் அருளிச் செய்யப்பட்டிருப்ப தெல்லாம அநுஸந்தேயமாகக்கடவது. விஶேஷித்து ஸ்ரீபாஷ்ய காருடைய க்ரந்தங்களுக்கு எல்லாம் விஸ்தாரமாக வ்யாக்யானம் செய்தருளி அவருடைய தாத்பர்யத்தை யுக்தியுக்தமாக ஸ்தாபித்த படியினுல் அவருடைய பரிபூர்ணமான க்ருபைக்குப் பாத்திரர் இவரே என்றபடி. ஸ்ரீபாஷ்யம் வாதிகளை ஜயிப்பதற்காக அருளிச் செய்யப்பட்டதென்றும், கீதாபாஷ்யத்தில் ஸ்தாபிக்கப்பட்ட பக்தி யோகம் ஸ்வரூபவிருத்தமென்றும், கத்யத்தில் நிரூபித்த ஶரணு கதியும் உபாயமல்ல என்றும் சொல்லுகிறவர்களும், நித்யத்தில் அருளிச்செய்த திருவாராதனக்ரமத்தை அநாதரம் செய்யுமவர் களும் பாஷ்யகாரர் க்ருபைக்குப் பாத்திரர்களாகமாட்டார்கள் என்றபடி. 'இலங்கு' இத்யாதி - லோகத்தில் எங்கும் ப்ரஸித்தமான வைபவத்தை உடைய நம் ஸ்ரீ தேசிகன் என்றபடி. அன்றிக்கே தம்முடைய அவதாரத்தினுல் அந்தக்குலத் திற்கு ஒரு மேன்மையைக் கொடுத்த என்ருகவுமாம். 'ஆய்ந்த' என்றது த்யாஜ்யம் உபாதேயம் என்றுபார்த்து ப்ரமாண யுக்தி களைக்கொண்டு ஸ்தாபித்த உபாதேயார்த்தங்களை தவிர என்றபடி. 'உய்வில்லையே' என்றது இவர் நிரூபித்த ஶாஸ்திரார்த்தத்தின்படி நடந்தாலொழிய வேறு உஜ்ஜீவநோபாயமில்லை என்றபடி. ஆகை யினுல் எல்லா லோகங்களும் உஜ்ஜீவிப்பதற்கு இவருடைய ஸ்ரீஸூக் திகளைத் தவிர வேறு மார்க்கமில்லையாகையால் இவரை ஸ்தோத் திரம் செய்வதே உசிதம், இதைத்தவிர வேறு மார்க்கமில்லை

என்னப்பட்டதாயிற்று. இங்கு நிஶ்ஶேஷாம்ஶஸ்த²வ்யக்திம் நிர்வாணஸிஹ ஸியா ந்யாஸ்யதா க்வாபி கோணே யத்³ராஜாஸி தி⁴யாவா ஸஸேணி ஶமநே ஸம்ஸதே³ ஸந்த்³தீநாம் । நிஷ்கர்ஷம் கஶ்சித³ந்ய: ப்ரஸாரிதி ஶமவலக்ஷணாவாயுஸேது ப்ராக்ஷேது ப்ராவாயு ஶிக்ஷாஶதஶாணிதஸௌதாப்ரஸ்தா²ஸ ஸ்தே²:॥' என்று ஸ்ரீ தத்வமுக்தா கலாபத்தில் அருளிச்செய்திருப்பது அநுஸந்தேயம்.

ஐந்தாம் பாட்டு.

இப்படி 'பிள்ளையாய்ந்தபொருளன்றி உய்யும் வகையில்லை' என்றது கூடுமோ? அந்தந்த ஆசார்யர்களும் தங்கள் தங்கள் க்ரந்தங்களில் வெவ்வேறுகளான உஜ்ஜீவனமார்க்கங்களைச் சொல்லியிருக்கிறார்களே என்னில்? ஸமாதானம் அருளிச்செய்கிறார் - 'அன்று' என்றாரம்பித்து.

அன்றிவ்வுலகினை யாக்கியரும்பொருள் நூல் விரித்து
நின்றுதண் நீள்புகழ் வேங்கடமாமலை மேவிப்பின்னும்
வென்றிபுகழ்த் திருவேங்கட நாதனெனும் குருவாய்
நின்றுநிகழ்ந்து மண்மேல்நின்ற நோய்கள் தவிர்த்தனனே. 5

[ப - ரை.] அன்று - ப்ரளயமாயிருந்த காலத்தில், இவ்வுலகினை - இந்தலோகங்களை, ஆக்கி - ஸ்ருஷ்டித்து, அரும் - மற்றப்ரமாணங்களினால் அறியமுடியாததான, பொருள் - அர்த்தங்களைச் சொல்லுகிற, நூல் - வேதமாகிற ஶாஸ்திரத்தை, விரித்து - ப்ரவசனம் செய்து, தண் - சீதளமான, நீள்புகழ் - நீண்ட அதாவது அதிகமான கீர்த்தியையுடைய, வேங்கடமாமலை - திருமலைமேல்,

---

3. இவ்விதமாக இந்த க்ரந்தத்தில் வாஸ்தவமான அர்த்தம் எல்லாவற்றையும் நன்றாக நிரூபித்திருக்கிற என்னால் எந்த ஒரு மூலையில் அதாவது அநாவஶ்யமான அர்த்தத்தில் உதாஸீநமாக இருந்துவிடப்பட்டதோ, நல்ல புத்தியையுடைய பெரியோர்களின் இஷ்டத்தை அநுஸரித்ததும், நிஶ்சயமாக நிரூபிக்க முடியாததுமான எந்த அர்த்தத்தில் இரண்டு விதமாகவும் நிரூபிக்கப்பட்டதோ, அப்படிப்பட்ட விஷயங்களில் பகவானாகிய பாஷ்யகாரருடைய அபிப்ராயத்தை நிஷ்கர்ஷம் செய்வதற்கு உத்தமமான ஆசார்யர்களினுடைய ஶிக்ஷையினால் நூறுமடங்கு அதிகமாக வ்ருத்திசெய்யப்பட்ட புத்தியையுடையவனும், மிகவும் ஸாவதானத்துடனும் இருக்கிற என்னைவிட வேறு ஒருவரும் ஶக்தி உடையவர்களாக மாட்டார்கள்.

மேவி - ப்ரீதிபண்ணி, நின்று - அர்ச்சாரூபியாய் நின்று, பின்னும் அதற்குமேலும், வென்றிபுகழ் - ஜயத்தினால் உண்டான புகழை யுடைய, திருவேங்கடநாதன், எனும் - என்கிற திருநாமத்தை யுடைய, குருவாய் - ஆசார்யனாகி, நிகழ்ந்துநின்று - அவதாரம் எடுத்துநின்று, மண் மேல் நின்ற - பூலோகத்தில் நிற்கிற, நோய்கள் - ஸம்ஸாரத்தில் உண்டாகிற நோய்களை, தவிர்த்தனன் - நிவர்த்திப்பித்தான். 5

[தா - ம்]. 'அன்று' என்றது 1 'ஜவிஷவிஶிஷாநுஷூஜயெ ஜஹ்ஷநவஜொகூ ஜாத நிவெடஷா' என்கிறபடியே அசேதனங்களோபாதி ப்ரார்த்திக்கவும் கூட யோக்யதை இல்லாமல் போக மோக்ஷயஶூர்யங்களாய் இப்படி துர்த்தசையை அடைந்திருக்கும் ஸமயத்தில் என்றபடி. 'இவ்வுலகினையாக்கி' என்றது 'பொருளென்றிவ்வுலகம் படைத்தவன்' என்றும், 2 'கரணகளெஷவரயொமம் விதரவிவூஷஶெஶஜநாயகரணகவம்' 3 'வஹவம்நிஸஹஷஸஹூஷி' இத்யாதிகளில் படியே கேவலம் தன்னுடைய நிருபாதிக ஸௌஹார்த்தத்தாலும் கருணையாலும் இஷ்டாநிஷ்ட ப்ராப்தி பரிஹாரங்களுக்கு யோக்யங்களாகும்படி ஜ்ஞானத்தையும் கரணகளேபாதிகளையும்கொடுத்தருளி என்றபடி. 'அரும்பொருள்' இத்யாதி - இப்படிக்கொடுத்த ஶரீராதிகளையும் இந்தச் சேதனர்கள் ஆறு கடக்கைக்காகக் கொடுத்த தெப்பத்தைக்கொண்டு அவ்வாற்றின நீர்வழியேபோய் ஸமுத்திரத்தில் புகுவாரைப்போல, 'அந்நாள் நீதந்த வாக்கையின் வழியுழல்வேன்' என்றும், 'எண்ணக்கண்ட விரல்களால் இறைப்பொழுதும் எண்ணகிலாதுபோய் உண்ணக்கண்ட தம் ஊற்ற வாய்க்குக் கபளமுந்துகின்றார்களே' என்றும் சொல்லுகிறபடியே விஷய போகத்தில் ப்ரவணங்களாகச்செய்து அநர்த்தங்களை வரவழைத்துக் கொண்டவளவிலே 'ஹதஷூஶம் தஶஃ ஸஜஸதீவவிவெகூஶீஶஃஶாநம்வூதீவதீவகாரணிகொஜஜாதி' என்று இருட்டில் வழி நடப்பவனுக்குக் கைவிளக்குக் கொடுப்பவனைப் போல ஸதஸத்விவேகம் செய்வதற்குக் காரணமான ஶாஸ்திரத்தை (வேதத்தை) உபதேசித்தான் என்றபடி. 'விரித்து' என்பதினால் நித்யமாய இருந்தவைகளே இப்பொழுது ப்ரவசனம் செய்யபபட்டன என்பது ஸூசிதம். 'வூவக்ஷாஹஜஸாம்', 'வேதமுன்விரித்தான்' இத்யாதிகளை அநுஸந்திப்பது. இத்தால் அந்த வேதங்களுக்கு அப

---

1. அசித்துடன் பிரிததறியமுடியாத ஜந்துக்களைப் பார்த்து தயையுண்டாகி 2 ஸ்ரீநிவாஸனுடைய கருணையாகிற நீ கரண களேபரங்களுடன் சேருவதைச் செய்கிறாய்.

3. இப்படி ஸ்வபாவத்திலேயே ஸுஹ்ருத்தான

ஹாரம் பிறந்தவாறே 'பன்னுகலை நால்வேதப் பொருளையெல்லாம் பரிமுகமாயருளிய பரமன்', 'அன்னமாயன்றங் கருமறைபயந்தான்', 'நெறியெல்லா மெடுத்துரைத்த நிறைஞானத் தொருமூர்த்தி' என்கிறபடியே ஹம்ஸமத்ஸ்யஹயக்ரீவ ராமக்ருஷ்ணாத்யவதாரங்களைச் செய்து தர்மானுஷ்டான ப்ரவசனங்களினால் வேதார்த்தங்களை விசதப்படுத்தினதும் விவக்ஷிக்கப்பட்டதாகிறது. 1 'நின்று' என்றது கீழ்க்கூறிய விபவாவதாரங்களைப் போலே தீர்த்தம் ப்ரஸாதித்துப் போகாமே ஸ்திரமாய் நின்று என்றபடி. 'தண்' என்றது 'தண்ணார் வேங்கடவிண்ணோர் வெற்பனே' என்கிற படியே ஸர்வதாபங்களையும் போக்கடிக்கும்படியான சீதளஸ்வபாவத்தையுடைய என்றபடி. 'நீள்புகழ்' என்றது 'ஸர்வஸ்ய சைவ ஸ்வாமிநோ'என்று ஸர்வப்ரஸித்தமாய் லோகத்தில் எங்கும் பரவின அநாதியான கீர்த்தியையுடைய. 'வேங்கடமாமலை' என்றது 'திருவேங்கடமாமலை ஒன்றுமே தொழ நம்வினை ஓயுமே' என்கிறபடியே தானே ஸர்வ பாபங்களையும் போக்கடிக்கக் கூடியதாய், 'ஸாக்ஷாத்ஸ்வாமி புஷ்கரிணீ' என்கிற ந்யாயத்தினாலே 'திண்ணமிது வீடெனத் திகழும் வெற்பு' என்கிறபடியே தானே ப்ராப்யமாயிருக்கக் கூடிய மஹிமையையுடையது என்றபடி. 'மேவி' என்றது இரண்டு குழந்தைகளைப் பெற்ற தாயார் இரண்டு குழந்தைகளும் இரண்டு பக்கத்திலும் படுத்துக் கொள்ளும்படியான நடுவான இடத்தில் படுக்குமாப் போலே 'கண்ணவானென்றும் மண்ணோர் விண்ணோர்க்கு', 'விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வெற்பு', 4'தத்ராரூடைர் மநுஷ்யைச்ச தேவைச்ச ஸமுபாஸ்யதே' இத்யாதிகளிற்படியே இரண்டுவிபூதியிலுள்ளவரும் ஸாதாரணமாக வந்து ஆஸ்ரயிக்கக்கூடிய இடமாகையினால் அதில் ப்ரீதியுடன் என்றபடி. இத்தால் ஶாஸ்திரங்களினால் திருந்தாதவர்களையும் 5 'ஆபாதமௌலிபர்யந்தம் பஶ்யதாம் ஸர்வபாதகம்। பாதகாநாம் ஶ்ரவணம் ஸர்வ நஶ்யதி கிம் ஸர்வோபபாதகம்', 6'ஸக்ருத் ஸேவநாத்

---

4. அங்கு ஏறியிருக்கிற பூமியில் இருக்கும் மனிதர்களினாலும், கீழே வந்திருக்கிற தேவதைகளினாலும்.

5. பகவானை திருப்பாதம் முதல் திருமுடிவரையில் பார்க்கிறவனுடைய பாதகங்கள் எல்லாம் நசித்து விடுகின்றன. உபபாதகங்களைப்பற்றிக் கேட்பானேன்.

6. அகஸ்மாத்தாக ஒருதரம் பகவானை ஸேவிப்பதினால்...... நாஸ்திகத்வம்விட்டுப் போய்விடுகிறது.

கூஷாவ:நாஸ்திகக்ஷம்யம்வ ஜெக' 'கண்டகண்கள்மற்றொன்றினை காணாவே' என்கிறபடியே பாவனத்வ போக்யத்வங்கள் குறைவற்று தர்சன மாத்திரத்திலே த்ருஷ்டி சித்தாபஹாரியான தம்முடைய அர்ச்சாரூபத்தைக் காட்டித் திருத்த முயன்றமை விவக்ஷிக்கப்பட்டதாகிறது. 'பின்னும்' என்றது இப்படி எம்பெருமான் தானான தன்மையில் செய்யக்கூடிய எல்லா ப்ரயத்னங்களையும் செய்தும் இவர்கள் திறத்தில் பலிக்காமையைக் கண்டு 7'யஸ்யாவஸரஹஜதக ஊவீஉஜஹஸஹவிசீர ஸ்யம்ஹவிகாம் ஜ்ஞாநாம்ஹவி நாம் ஹவாண: வஸசீதாராய நாராயண:' என்கிறபடியே ஆசார்ய ரூபத்தைப் பரிக்ரஹித்தான் என்றபடி. 'வென்றிபுகழ்' என்பதினால் பகவான் இவ்வளவு ப்ரயத்னம் செய்து 'ஸஹோதாஸஉஹ:' என்றுமீண்டான், ஸர்வஜனங்களையும் உஜ்ஜீவிக்கச் செய்ய வேண்டும் என்கிற எண்ணம் நிறைவேறவில்லை. இவ்வாசார்யாவதாரம் செய்த பிறகு இஷ்டஸித்தி உண்டானமையினால் இப்படிப்பட்ட ஜய ஸ்ரீயின்நித்ய யோகத்தினால் உண்டான வ்யத்யாஸத்தையும் அதிசயத்தையும் நினைத்து 'ஸ்ரீமாநுவெங்கடநாயாய:' என்கிறபடியே அந்தத் திருவேங்கடமுடையான் தன்னாலேயே புகழப்பட்டமை விவக்ஷிதம். 8 'யதீயதேஹம் ஸ்ரீமாநிதீசநம் ராஜெஜ்ஞஸ்ரீஸஉ வாதிஸஜ்வ்ருஷமிர ஸெய ரூஷொஸாவிதி' என்றிறே பூர்வர்களின் அநுஸந்தானம். அன்றிக்கே பூர்வாசார்யர்களினால் ஒருவராலும் அடையப்படாத வென்றியால் உண்டான புகழை உடையவர் என்றாகவுமாம். முன்னாள் புணராதபரமதப் போர் பூரித்தவரிறே இவர். நிகழ்ந்துநின்று என்பதினால் ஸ்ரீரங்கநாதனுடைய நியமனத்தினால் இந்த ஆசார்யாவதாரமும் விபவமோபாதி யாகாமல் ஸில்பிராஜன் என்கிற வ்யாயஜத்தினால் அர்ச்சாரூபமாயும் அவதரித்து நின்றமை விவக்ஷிதம். மண்மேல்நின்ற என்றது இந்த ப்ரக்ருதி ஸம்பந்தம் உள்ளவளவையில் தீர்க்க முடியாதவைகளான என்றபடி. 'நோய்கள்' என்றது 'ராமாதிரொமாநு' என்கிறபடியே காமக்ரோதாதிகளை என்றபடி. 'தவிர்த்தனன்' - இங்கு

---

7. பூமியில் முழுகியிருக்கும் ஜனங்களைக் காப்பாற்றுவதற்காக தன்னுடைய ஸ்வரூபத்தைவிடாமல் எந்த ஆசார்ய ரூபத்தை அடைகிறானோ.

8. எந்த ஸ்ரீதேசிகன் விஷயமான 'ஸ்ரீமாந்' என்றாரம்பிக்கும் மந்திரத்தை ஸ்ரேயஸ்ஸுக்குக் காரணமென்று ஸ்ரீவேங்கடநாதன் ராஜாவிற்கு உபதேசித்தாரோ.

வெற்புடனென்றியயிக்ஜைதயில் வெவ்வினை தீர்மருந்தொன்றும் நோய்கள் தவிர்த்தவனும் சேர்ந்தமைந்தமை கண்டீரே என்று நான் மறைபாளர் அண்ணன் என்று ப்ரஸித்திபெற்ற ஆராவமுதாழ்வான் ஜீயர்பணிக்கும். 5

ஆரும் பாட்டு.

‘வைகுண்டநாமக்ரஹணம் அசேஷாகவிநாசநம்’ என்கிறபடியே பகவந்நாமங்களின்றே ஸர்வபாபங்களையும் போக்கடிக்கும், இவ்வாசார்யனுடைய திருநாமாதிகள் நோய்களை எங்ஙனே போக்கடித்தன என்னில், அதற்கு தன்னுடைய அனுபவத்தில் ஸித்தமானதைக் கொண்டு ஸமாதானம் அருளிச் செய்கிருர் - ‘வித்தகன்’ என்ருரம்பித்து.

வித்தகன் வேதியன் வேதாந்ததேசிகன் எங்கள் தூப்புல்
மெய்த்தவனுத்தமன் வேங்கடநாதன் வியன்கலைகள்
மொய்த்திடு நாவின் முழக்கோடு வாதியர் மூல மறக்
கைத்தவனென்றுரைத்தேன் கண்டிலேனேன் கடு வினையே. 6

[ப - ரை] - வித்தகன் - ஆஸ்சர்யமான குண சேஷ்டிதங்களையுடையவன், வேதியன் - வேதங்களை அறிந்தவன், வேதாந்த தேசிகன் - வேதாந்தார்த்தங்களை உபதேசம் செய்யும் ஆசார்யன், தூப்புல் - எங்களுக்கு ஸ்வாமியாய் தூப்புல் குலத்தில் அவதரித்த, மெய்த்தவன் - மெய்யான தவத்தையுடையவன், உத்தமன் - ஶ்ரேஷ்டனானவன், வேங்கடநாதன் என்கிற பெயரையுடையவன், வியன் - ஆஸ்சர்யப்படக்கூடிய, கலைகள் - ஶாஸ்திரங்கள், மொய்த்திடு - நிபிடமாக வருகிற, நாவில் - நாக்கில் உண்டாகும், முழக்கோடு - ஶப்தத்துடன், அது மாத்திரத்தினாலே என்றபடி, வாதியர் - ப்ரதிவாதிகளினுடைய, மூலம் - வேர், அற - அற்றுப் போகும்படி, கைத்தவன் - தூரத்தினவன், என்று - இப்படிப்பட்ட திருநாமங்களையும் குணங்களையும், உரைத்தேன் - சொன்னேன், என் - என்னுடையதான, கடு-க்ரூரமாய் ஹிம்ஸித்துவந்த, வினை - பாபங்களை, கண்டிலேன் - என்னிடத்தில் காணவில்லை. 6

[தா - ம்] ‘வித்தகன்’ என்பதினால் ‘ஸூர்யாதயஸஹஸ்ராவம் வ்யக்த வராஹஸ்ராவ:’ என்கிறபடியே அவதாரம் துடங்கி பெரிய அம்மாள் காலக்ஷேப கோஷ்டியில் உபந்யாஸம் செய்தருளினது முதலான அதிமானுஷ சேஷ்டிதங்களும், அவ்வளவு ஶக்தி இருந்த போதிலும் அஹங்கார மமகார லேஶமும் இல்லாமல் ஶாந்தராய் வைராக்ய நிதியாய் இருந்தமையும் விவக்ஷிக்கப்படுகின்றன. ‘வேதியன்’ என்றது ‘வேதவிதேவசாஹம்’ என்று கீதாசார்யன் அருளிச் செய்தபடியே பாவுமறைகளெல்லாம் பதம்சேர்ந்தொன்ற நின்றபிரான் என்கிற வாஸ்தவார்த்தத்தை அறிந்தவர் என்றபடி.

அங்கு 1 'வேதைஶ்ச ஸர்வைரஹமேவ வேத்ய:' என்றறிந்தவனை

யிறே வேதவித் என்று சொல்லியிருக்கிறது. 'வேதாந்த தேசிகன்' என்றது வேதாந்த ஶாஸ்திரத்தில் நிலவர், அதாவது அவற்றின் ஸூக்ஷ்மார்த்தங்களை அறிந்தவர் என்றபடி. அல்லது வேதாந்தங்கள் குறைபாகவிட்ட இடங்களில் அவற்றைப் பூர்த்திசெய்து உபதேசம் செய்தவர் என்றுமாகவுமாம். 'ஶ்ரீவேஷ்ம ஶீதஶிவஹஸம்' என்று ஶ்ருதி சொன்னதை 2 'கம்பீரவர்ணாட்ய பூர்ணம் மதுரம் ஶ்ரீஹுவ

ஜம் ஶ்ரீஷ்டு தடாகமிவ ஶீதலம் ப்ரவிஷ்டா' என்றருளிச் செய்

திருப்பதும் இப்படிப் பல இடங்களில் நிரூபித்திருப்பதும் ப்ரஸித்தமிறே. 'தூப்புல் மெய்த்தவன்' என்றது இந்த கோத்திரத்திற்கு ப்ரதான ருஷியான விஸ்வாமித்ரரால் வெளியிடப்பட்ட ஶரணாகதி தர்மத்தைப் பல முகமாக ஸ்தாபித்தபடியினால் தூப்புல் குலத்தின் தர்மமாகிய தவத்தை மெய்யாக உடையவன் என்றபடி. அன்றிக்கே கூடஸ்த ருஷி ப்ராம்மண்ய ஸித்திக்காக அநேகாயிரம் வருஷங்கள் தவம் செய்தார். அப்படிக்கில்லாமல் அநந்யப்ரயோஜநராய் பகவானுடைய ஸாக்ஷாத்காரத்திற்காகத் தவம் செய்தபடியினால் மெய்யான தவத்தை உடையவர் இவரே என்றபடியாகவுமாம். அதுவுமன்றிக்கே எல்லாத் தர்மங்களைக் காட்டிலும் ந்யாஸமே மேல்பட்டது என்று ஶ்ருதி ப்ரஸித்தமான ந்யாஸ வித்யையைப்ரவசனம் செய்தவர் என்றபடியாகவுமாம். 'வ்யுபதேஶயோகராஜ ராஜயோகி:' என்னப்பட்டதிறே. 'உத்தமன்' என்றது 'தேஶிகோத்தம ஸ்ரீபாதாய......நாஸ்தி நாஸ்தி ஸஹீதயோ' என்கிறபடியே ஆசார்யர்களுக்குள் தனக்கு மேற்பட்டவர் இல்லாதவர் என்றபடி. 'வேங்கடநாதன்' என்றது திருவேங்கடநாதனுடைய அவதாரமான படியாலும், அவருடைய அவப்ருத தினத்தில் அவதரித்தவரான படியாலும் வேங்கடநாதன் என்று பிதாவினால் வைக்கப்பட்ட திருநாமத்தை உடையவர் என்றபடி. 'வியன்கலைகள் மோய்த்திடு' - 'ஸ்வயம்ப்ரவாஹாவ விவாதஸர்ஜ: கிம் க்ஷுப்யதே தஸ்ய ஶிரோ யயாஸம்', 'தாவாம்ஸ்து வாதேஷு ரஸிவாமிதேஷு ஶ்ருதாகிநீம் ஶ்ருயிதாம் க்ஷேமம் தே' என்கிறபடியே விஸ்ருங்கலமாகக் கங்கையின் ப்ரவாஹம்போல் ஒன்றன்பின் ஒன்றாய் போட்டியுடன் ஶாஸ்திரங்கள் நான் முன்னென்று வருகிற என்றபடி. அன்றிக்கே 'மோய்த்திடு' என்பது 'கைத்தவன்' என்பதற்கு விசேஷணமாகவுமாம். பெருமாளுக்கு விஸ்வாமித்ரருஷி அஸ்திரவித்யைகளை உபதேஸித்

1. வேதங்கள் எல்லாவற்றினுலும் நானே அறியப்படுகிறவன்.

2. ஆழமாயும் பூர்ணமாயும் மதுரமாயும் இருக்கிற தடாகத்தில் வெயிலில் அடிபட்டவன் குளிர்ச்சியான ஜலத்தில் ப்ரவேசிப்பதைப்போல.

ததும் அவைகள் எல்லாம் புருஷரூபிகளாய்ப் பெருமாளைச் சுற்றி நின்று தங்களை அங்கீகரித்து நியமிக்கவேண்டும் என்று ப்ரார்த்தித்தாப்போலே ஹயக்ரீவன் இவருக்கும் அருள்புரிந்ததும் வித்யாபிமானி தேவதைகள் எல்லாம் இவரை சூழ்ந்துநின்று தங்களை ஏற்கும்படி ப்ரார்த்தித்தமை விவக்ஷிதம். 'நாவில் முழக்கோடு' என்றது 'ஜீமீஷதொ ஒ கவிதாகிஙுகெ ஹா நு ஜிஹ்வா ஸிஹா ஸநஹெ்ாவெயா:' என்றிவர் ப்ரார்த்தித்தபடி ஜிஹ்வாக்ரத்தில் எழுந்தருளியிருக்கும் ஹயக்ரீவனுடைய கர்ஜனஶப்தம்போன்ற ஶப்தங்களினால் என்றபடி. 'முழக்கோடு' என்பதினால் கேவலம் ஶப்தஶ்ரவண மாத்திரத்தினாலே வாதிகள் ஓடிவிடுகிறார்கள், அர்த்தவிசாரம் வரையிலாக எதிரிகள் நிற்பதில்லை என்பது த்யோதிதம். 1 'ரொஶ்ஶு யஶோணாயவூஷம் கவிதாகிஙுககஂஜாா: । ஷவெஹூாஸாஸாவாநிஙு த்ரு ஸிஹாஂகிஶேவிதஂஹஜெ॥', 2 'ஹூா ஆாயஷெெஷிதஜிஷஂ ஶாகவஷ்வஂஷ: ஹூவஷவளஜ விஜயெ வஸிதெதாபதஜ॥' இத்யாதிகள் அநுஸந்தேயங்கள். 'மூலமற' என்றது மறுபடியும் அவர்கள் திரும்பி வாராதபடி வேறற்றுப் போகும்படி நிராகரிக்கப்பட்டார்கள் என்றபடி. 'கைத்தவன்' என்றது பசுவிற்காகப் புலியைத் தொடர்ந்து வெகுதூரம் துரத்தியடிப்பதைப் போல துரத்தியடித்தவர் என்றபடி. மாலி ஸுமாலியுத்தத்தில் பகவான் அவர்களைத் தொடர்ந்து கொன்றாப்போலே என்று திருவுள்ளம். 'என்றுரைத்தேன்' என்றது அர்த்தஜ்ஞானம் இல்லாமலும் அஹ்ருதயமாகவும் கேவலம் வாயால் உச்சரிப்பது மாத்திரம் செய்தேன் என்றபடி. 'கண்டிலேன்' இத்யாதி - ப்ரபத்தியினால் பகவான் விடுவிக்கும் பாபங்கள் உருமாய்ந்து போகிறாப்போலே போய்விட்டன என்றபடி. 'வானேமறிகடலோ மாருதமோதீயகமோ கானே ஒருங்கிற்று கண்டிலமால்', 'காடுகளோ நரகோகடிதாம் காளத்திரளோ சூடுவிடாவனலோ தொலையாதிலே நள்ளிருளோ சாடுபடச்சரணாலன்று சாடிய சாரதியார் வீடுசெய்வித்து நம்மைவிடுவிக்கின்ற பாபங்களே' இத்யாதிகள் அநுஸந்தேயங்கள்.

ஏழாம் பாட்டு.

இப்படி தேசிகனுடைய திருநாமத்தைச் சொன்ன மாத்திரத்தினால் நிவ்ருத்தியடைந்த பாபங்கள் திரும்பி வாராமல் போய்விடும் என்கிற அர்த்தத்தைப் பாபங்கள் பழகிய வாஸனையினால் திரும்பிவர ப்ரயத்தினம் செய்யும்பொழுது அவைகளைக் குறித்துச் சொல்லும் வார்த்தையாக அருளிச் செய்கிறார்—'வினைகாள்' என்றாரம்பித்தது.

வினைகாளுமக்கினி வேறோரிடந் தேடவேண்டு மெனைச்
சினமேவி முன் போல் சிதைக்கும் வகையிங்கரிது கண்டீர்

---

1. 55 ம் பக்கம் பார்க்க

எனிதிலிராமாநுசமுனி யின்னுரை சேரும் தூப்புல்
புனித ரேன்புந்தி புகுந்து திகழ்ந்து பொருந்தினரே. 7

[ப - ரை] வினைகாள் - பாபங்களே, உமக்கு - உங்களுக்கு, இனி - இதற்குப் பிறகு, வேறு ஓர்இடம் - நீங்கள இருப்பதற்கு இடம், தேடவேண்டும்-தேடிக் கொள்ளவேண்டும் என்றபடி. முன் போல் - ஆசார்யனை ஆஸ்ரயித்ததற்கு முந்தின காலம் போல, சினம்மேவி - கோபத்தை அடைந்து, எனை - என்னை, சிதைக்கும் வகை - ஹிம்ஸிக்கும் ப்ரகாரங்களே, இங்கு அரிது - இவ்விடத்தில் செய்யமுடியாது, கண்டீர் என்பது உறுதியைக்காட்டுகிறது, எனி தில்-என்னகாரணத்தினால் என்னில், இராமாநுசமுனி - ஸ்ரீபாஷ்ய காரரினுடைய, இன் - ஸௌபாக்யமான, உரை - ஸ்ரீஸூக்திகளோடு, சேரும் - சேர்ந்தவரான, தூப்புல் புனிதர் - தூப்புல் குலத்தில் அவ தரித்த பரிசுத்தமான ஸ்வபாவத்தை உடைய தேசிகன், என் - என்னுடைய, புந்தி - புத்தியில், புகுந்து - ப்ரவேசித்து, திகழ்ந்து - ப்ரகாசித்துக் கொண்டு, பொருந்தினர் - ஸ்திரமாக இருக்கிறார் (என்கிற காரணத்தினால்) 7

[தா - ம்] 'வினைகாள்' என்பதினால் பாபங்கள் அனேகம் என்பதும், பஹுவிதம் என்பதும் காட்டப்பட்டது. 'இனி' என் றது பகவானை ஆஸ்ரயித்தால் வினைகள் எல்லாம் நசிக்குமோ என் பதில் ஸந்தேஹம் வரலாம், ஆசார்யஸமாஸ்ரயணத்திற்கு பிறகு ஸந்தேஹமே இல்லை என்றபடி. 'விஸிஹ்டூவதி', 'பண்டைவல்வினை பாற்றியருளினான்' இத்யாதிகள் இங்கனுஸந்தேயம். 'வேறாக ஏற்றி யிருப்பாரை வெல்லுமே மற்றவரைச் சாற்றியிருப்பார் தவம்' என்னும்படியல்லவோ இதின் பெருமை இருப்பது. 'முன்போல் சிதைக்கும்' என்பதினால் ஆசார்ய ஸமாஸ்ரயணம் பண்ணின தேஹாவ ஸானத்தில் மோக்ஷத்தை ப்ரார்த்தித்திருக்கிறபடியினால் அந்தத் தேஹத்திற்குக் காரணமான ப்ராரப்த கர்மத்தின் லேசம் இருந்த போதிலும் 3 'வந்தம் வந்தம் ஹிசுஷி வஸிவெவுஹா' என்றும், 4 'தயோரேகதரோ ராஸி: யத்யேநமுபஸந்நமேத் । நாஸ்ய ஹர்ஷேண ஸுகம் ஸ்யாத் து:கம் ஸ்யாந் ந ஸஞ்ஜ்வரேத் ॥' இத்யாதிகளிற்படியே எதுவந்தபோதிலும் ப்ரியமாகவே அனுபவிக் கப்படுகிறபடியினால் முன்போல்க்லேசத்தை உண்டுபண்ணமுடியாது

---

3 அப்போதைதக்கப்போது வந்தவைகளை அனுகூலமென்று பார்க்குமவர்களாய்

4. அந்த ஸுக துக்கங்களில் ஏதாவதொன்று இவனை அடைந் ததேயாகில் ஸுகத்தை அடைந்து அதிக ஸந்தோஷப்படக்கூடாது துக்கத்தை அடைந்து அதிக சோகத்தைப் படக்கூடாது.

என்றபடி. 'சினம்மேவி' என்பதினால் 'கோவாயைவர் என்மெய் குடியேறி கூறை சோறிவைதாவென்று குமைத்துப்போகார்' என்கிற படியே மேன்மேலென ஓயாமல் ஹிம்ஸை செய்துகொண்டிருப்பது விவக்ஷிதம். 'இங்கு' என்றது தானும் தன்னுடைய ஸம்பந்தம் பெற்றவரும்வஸிக்கும் இடமாகிய இவ்விடத்தில் என்றபடி. 'நாட்டிலுள்ள பாவமெல்லாம் சும்மெனாதே கைவிட்டோடித் தூறுகள்பாய்ந்தனவே' என்றாரிறே பெரியாழ்வார். 'நமனுக்கிங்கு யாதொன்றுமில்லை' என்றாற்போல இதுவும். 'இன்னுரைசேரும்' என்றது ஸ்ரீ தேசிகன் 'ஏரணிகீர்த்தி இராமாநுசமுனியின்னுரைசேர்' என்றருளிச்செய்ததை அனுவதித்தபடி. 'இன்' என்றது 5 'ஸூக்தியா ஸாரம் ஸ்ரீதேஹளீதிவராஹ்வ: ப்ரோக்த: க்ஷமாஹ்வரே மிஷிஞஞிந்த்ருஞ ஞிமஷேரோண: ஃபணிதய:' 6 'யத்ஸாரஸ்வதஸ்ரோத்யஸாமரஸூயா விஶேஷயாஸ்வாதிநாம்' என்கிறபடியே அம்ருதமபோன்ற என்றபடி. 'உரைசேரும்' என்றது எப்பொழுதும் அந்தஸ்ரீஸூக்திகளை அனுஸந்தானம் செய்துகொண்டிருக்கும் என்றபடி. 7 'நிவிஷ்டம் ப்ரதிஸாவஷஹளவைவஸாரோவ்ருத்திஹியஷளவநம்' என்றருளிச் செய்யப்பட்டதிறே. 'தூப்புல்புனிதர்' என்றது ஸ்வயமே புனிதமான குலத்திறகும்பரிசுத்தியைஉண்டாக்கக்கூடியவர் என்றபடி. 'ஸூஷம் தாரயதேவஸ்தஸ்தஸ்தவஸ்த' என்று ஸாதாரண பாகவதர்களுக்கு மஹிமை ஏற்பட்டதானால் இவருடைய அவதாரத்தினால் ஏற்படும் பரிசுத்திபைப்பற்றிக் கேட்கவேண்டியதில்லையிறே. 'என் புந்தி' என்றது விஷயாந்தரங்களில் மண்டியிருந்த என்புத்தியில் என்றபடி. 'திகழ்ந்து' என்றது 'நீசனேன் நிறைவொன்றுமிலேன் நங்கண்பாசம் வைத்தபரம் சுடர்சோதிக்கு' என்கிறபடியே இவருடைய புத்தியில் ப்ரவேசித்ததினால் உண்டான ஸந்தோஷம் வெளியில் தெரியும்படியான ப்ரகாசத்துடன்கூட என்றபடி. ஆக இப்பாட்டால் 'நெய்க்குடத்தைப்பற்றி' என்கிற திருமொழியில் பகவான் தன்னுடைய புத்தியில் ப்ரவேசித்ததைப் பலமாக வைத்துக் கொண்டு பாபங்களை வேறிடம் தேடிக்கொண்டு போகும்படி சொன்னாப்போலவும், நம்மாழ்வார் 'இங்கில்லை பண்டுபோல் வீற்றிருத்தல்' என்றருளிச் செய்தாப்போலவும் இவர் ஆசார்யஸமாஸ்ரயணத்தினால் அந்தப்பலம் கிட்டினபடியை நிரூபித்தாராயிற்று.

---

5. எம்பெருமானாரிடத்திலிருந்து உண்டானவைகளும் தன்னை விட கீழ்ப்பட்ட வேதமாஹாத்ம்யத்தை யுடையவைகளுமான உக்திகள் கர்ணகுஹரத்தில் அம்ருத வர்ஷத்தைப் பெருக்குகின்றன.

6. எந்த பாஷ்யகாரருடைய ஸூக்திகளாகிற க்ஷீரஸமுத்திரத்தின் அம்ருதமான ஸிதஸௌஷதத்தைப் புஜிக்கிறார்களோ.

7. எம்பெருமானாருடைய ஸூக்திகளை ஆவ்ருத்திசெய்வதினால் யௌவனம் கழிக்கப்பட்டது.

எட்டாம் பாட்டு

இப்படித் தாம்பெற்ற லாபத்தை அநுஸந்தித்து, ஸம்ஸாரத்தில் இருந்து கஷ்டப்படும் சேதனர்களிடத்தில் க்ருபையினால் அவர்களைக் குறித்து உபதேசிக்கிறார்-'பொருந்தி' என்றாரம்பித்து.

பொருந்திப்புவிதனில் போய் வாழ்க்கை பூண்கின்ற பூரியர்காள்
இருந்து நரகினிடர் கெடு மாற்ற மறிகின்றிலீர்
பொருந்தும் பொருளொன்று கேளீர் பொங்குமிவ்விடர்க் கடற்கு
வருந்தாது தூப்புல் மாபுருடன் பாதம் வணங்குமினே. 8

[ப - ரை.] புவிதனில் - இந்தப் பூலோகத்தில், பொருந்தி - ஸ்திரமாகவஸித்து, போய் வாழ்க்கை-நிலையில்லாதவாழ்வை, பூண்கின்ற – அடைந்திருக்கிற, பூரியர்காள் - அல்பபுத்தியை யுடையவர்களே! இருந்து - இந்தலோகத்தில் இருக்கச்செய்தே, நரகின் - நரகத்தினுடைய, இடர் - துக்கமானது, கெட - கெடும்படியான, நரகதுக்கத்தை நிவ்ருத்தி செய்துகொள்ளும்படியான என்றபடி. மாற்றம் - வார்த்தையை, அறிகின்றிலீர் - தெரிந்துகொள்ளாதிருக்கிறீர்கள், பொருந்தும் - யுக்தமான, பொருள் ஒன்று-ஒப்பற்ற அர்த்தத்தை, கேளீர் - கேளுங்கள், பொங்கும் - வ்ருத்தியடைந்துகொண்டிருக்கிற, இவ்விடர் - இப்பொழுது அநுபவித்துக்கொண்டிருக்கிற துக்கமான, கடற்கு - ஸமுத்திரத்திற்கு, வருந்தாது - வருத்தப்படாமல், தூப்புல்மாபுருடன் - தூப்புல்குலத்தில அவதரித்த மஹாபுருஷனாகிய ஸ்ரீதேசிகனுடைய, பாதம் - திருவடிகளை, வணங்குமினே - ஸேவியுங்கள். 8

[தா- ம்] 'பொருந்திப்புவிதன்னில்' என்றது நெருப்பில்கால் பொருந்துமாப்போலே இருக்கவேண்டியிருக்கிற இந்தலோகத்தில் பொருந்தியிருக்கிறீர்களே என்றபடி. 'வாஸம் ஹுதவஹஜ்வாலாபஞ்ஜராந்தர்வ்யவஸ்திதி:' என்னப்பட்டதிறே. ஸ்ரீவிபீஷணாழ்வான் 'வ்யஸநவவ்ருதிஷ்ட' என்கிறபடியே ராவணனுடைய ஸம்பந்தத்தை நிவ்ருத்தித்து ப்ராப்யபூமியை அடைந்து காலபாவி நின்றாப் போலேயன்றோ இருக்க அடுப்பது. 'இருள் தருமாஞாலத்துள் இனிப் பிறவியான் வேண்டேன்', 1 'காலாவர்தாந் ப்ரக்ருதிவிக்ரியா:' என்றன்றோ விவேகிகள் அநுஸந்தித்தது. அப்படி இருக்க இதில் எப்படி பொருந்தி இருக்கிறீர்கள் என்கிற ஆஶ்சர்யம் த்யோதிதம். 'புவிதன்னில்' என்பதினால் 2 'அநித்யமஸுகம் லோகம்' என்று கீதாசார்யன் அருளிச் செய்திருக்கிறபடியே இதிலிருந்து போகப் பரிஹாரம் தேடவேண்டியது அவஶ்யம் என்பது த்யோ

---

1. காலத்தின் சுழல்களையும் ப்ராக்ருதியின் பரிணமங்களையும்.
2. அநித்யமாய் துக்கத்துடன் கூடின இந்த லோகத்தை.

திதம். 'பொய்வாழ்க்கை' என்றது ஸ்திரமில்லாத வாழ்வு என்றபடி. அதிலும் 'ஆ௫ாஜாவதூவூஹூதி விஹவம்வெூகூ வயஷாய ஷுஃவம்' என்கிறபடியே துக்கமே மிகுத்து இருக்கிறபடியினால் ஸுகம் என்பது ப்ரமிக்கப்படுகிறது என்றபடி. 'பூண்கின்ற' என்றது புத்திபூர்வகமாக ஸம்பாதிக்கப்பட்ட. அன்றிக்கே ஆத்மாவிற்கு வாஸ்தவமாக இவைகள் ஸுகமில்லாமையினால் ஆரோபிக்கப்பட்ட என்றபடியாகவுமாம். அதுவுமன்றிக்கே ஸந்தோஷமாய் ஆபரணம் பூண்டாப்போல் அனுபவிக்கிற என்றபடியாகவுமாம். இப்படி ப்ரமிப்பதற்குக் காரணம் அல்ப புத்தியை யுடையவர்களாயிருக்கை என்பது 'பூரியர்காள்' என்று சொல்லப்படுகிறது. 'இருந்து' என்றது 'ஓடியோடிப் பலபிறப்பும் பிறந்து' இத்யாதிகளில்படியே இந்த ஸம்ஸாரத்திலேயே ஸ்திரமாய் இருந்து என்றபடி. 'மாற்றம்' என்றது பகவானால் உபதேசிக்கப்பட்ட சரமச்லோகரூபமான வார்த்தையை என்றபடி. 'வார்த்தை யறிபவர் மாயவர்க்காளன்றி யாவரோ' என்கிறபடியே அந்த சரமச்லோகார்த்தம் நெஞ்சில் பட்டால் இந்த ஸம்ஸாரத்தில் உழலமாட்டார்கள் என்று தாத்பர்யம். எங்களை நிந்திப்பதில் ப்ரயோஜனம் என்? இனிச் செய்யவேண்டுவதென்? என்று கேட்பதாகக்கொண்டு அருளிச்செய்கிறார்— 'கேளீர்' என்று. 'பொருந்தும் பொருள்' என்றது குருவிகழுத்தில் பனங்காய் கட்டினாப்போலே அத்யந்தம் அசக்யமான கார்யமன்றிக்கே மிகவும் அகிஞ்சனர்களான நீங்களும் ஸுலபமாய் அறியக்கூடிய அர்த்தம் என்றபடி. அன்றிக்கே பலத்துடன்கூடின உபாயம் என்றபடியாகவுமாம். இதை 'பழுதாகாதொன்றறிந்தேன் பாற்கடலான் பாதம் வழுவாவகை நினைந்துவைகல் தொழுவாரைக் கண்டிறைஞ்சி வாழ்வார் கலந்து வினைகெடுத்து விண்டிறந்து வீற்றிருப்பார்மிக்கு' என்றும், 'நிபுணனுக்குப் பரஸமர்ப்பணமும் ஆசார்யக்ருத்யம்' என்றும் ஆசார்ய நிஷ்டைபலத்துடன் அவிநாபூதம் என்று நிரூபிக்கப்பட்டதிறே. 'ஒன்று' என்றது 'எற்றியிருப்பாரை வெல்லுமே மற்றவரைச் சாற்றியிருப்பார்தவம்', 'தொல்வழியே நல்வழிகள் துணிவார்கட்கே', 'வளவுரை தந்தவனருளே மன்னியமாதவத்தோன்' என்றிவை முதலியவைகளில் நிரூபிக்கப்பட்ட ஒப்பற்ற மேன்மையுடையது என்றபடி. 'பொங்கும்' இத்யாதி - 4 'கூநூக்ஷணவஸூத்திதெதஷூஸிதவாஸியள ஊூஷூரெ' என்கிறபடியே க்ஷணம்தோறும் வ்ருத்தியடைந்து வருகிற துக்க

---

3. ப்ரும்மாவரையிலான பட்டங்களைப் பர்யாய துக்கங்களாக பார்த்து.

4. ஒவ்வொரு க்ஷணமும் வ்ருத்தியடைகிறதும் தாண்டமுடியாததுமான பாபஸமுத்திரத்தில்

மாகிற ஸமுத்திரம் என்றபடி. 'வருந்தாது' என்றது பாபங்கள் வ்ருத்தியடைந்து வந்தாலும் ஆசார்ய ஸமாஶ்ரயணம் செய்தால் அவைகள் ஒன்றும் செய்யாது என்றறிந்து அவற்றிற்காக வருத்தப்படாமல் என்றபடி. 'மாபுருடன்' என்பதினால் மஹாபுருஷன் என்று ப்ரஸித்தனான பகவானே இந்த ஆசார்ய ரூபியாய் அவதரித்தான் என்பது த்யோதிதம். அந்தப் புருஷனை ஆஶ்ரயிப்பதை விட தூப்புல் மாபுருடனை ஆஶ்ரயிப்பதின் விஶேஷம் சொல்லப்பட்டதாயிற்று. 1'தஸ்மிந் திஷ்டதி வேங்கடேஶகவௌ ஶ்ரீபாஷ்யகாரோபமே । யம் கிஞ்சித் புருஷாதமம் ஹ்ருதயவாஸிதம் ஶ்ரயே மாமாநஸ: ஸ்வஸ்தி தே ।।' என்னப்பட்டதிறே. புருஷஸூக்தம் பகவானையே சொல்லும் என்பது ப்ரஸித்தமிறே. அதாவது இந்த ஶ்ரிய:பதி திருவடிகளை ஆஶ்ரயுங்கள், இதைவிட்டு வேறு ஒருவனை ஆஶ்ரயித்தால் 'க்ஷாரஸ்யூதகதம் க்ஷீரம் ஶ்வநஸ்யேவ ஹவிராஹுதி' என்கிற நிலையாம் என்றபடி. 8

ஒன்பதாம் பாட்டு.

இப்படி ஆசார்ய ஸமாஶ்ரயணம் கர்த்தவ்யமானாலும் அதற்கு வேண்டியவைகளான ஆத்மகுண பூர்த்தியும், கெட்டகுணங்களில் இருந்து நிவ்ருத்தியும் அபேக்ஷிதமன்றோ என்னில், அவைகளும் ஆசார்யனை ஆஶ்ரயிக்க உண்டாகும் என்றருளிச் செய்கிறார் - 'வணக்கம்' என்றாரம்பித்தது.

வணக்க மோடக்கம் வழக்க மொழுக்க மிரக்கம் சேரும்
இணக்க முறக்க மிழுக்கு மழுக்கு மிகந்து நிற்கும்
குணக்குலமோங்கு மிராமாநுசன் குணங் கூறும் தூப்புல்
அணுக்கனை பிள்ளைதனையரணாக அடைபவர்க்கே. 9

[ப - ரை.] இராமாநுசன் ஸ்ரீபாஷ்யகாரருடைய, குணம் - குணங்களை, கூறும்-சொல்லுகிற, தூப்புல் அணுக்கனை - எல்லோரிடத்திலும் ஸ்வபாவத்திலேயே ஸௌஹார்த்தத்தை உடையவரான, பிள்ளைதனை - ஸ்ரீதேசிகனை, அரணாக - ரக்ஷகனாக, அடைபவர்க்கே - ஆஶ்ரயித்தவர்களுக்கே, வணக்கம் - வணங்குவது, ஓடக்கம் - விநயம், வழக்கம் - குலாசாரம், ஒழுக்கம் - நல்ல அனுஷ்டானம் இவைகளுடன், சேரும் - சேர்ந்ததாயும். இணக்கம் - கெட்டவர்களுடன் சேர்க்கை, உறக்கம் - தூக்கம், இழுக்கும்-சோம்பல், அழுக்கும்-மாலிந்யம் (அஶுசித்வம்) இவைகள், இகந்து - தாங்களே

---

1. பாஷ்யகாரருக்கு ஸமமான அந்த வேங்கடநாதன் இருக்கும்பொழுது வேறு ஏதோ ஒரு புருஷனை ஆச்ரயிக்க மனமே செல்லாதே, உனக்கு க்ஷேமம் உண்டாகட்டும்.

விலகி, நிற்கும் - நிற்கக் கூடியதான, குணக்குலம் - குணங்களின் கூட்டம், ஓங்கும் - வ்ருத்தியடையும். 9

[தா - ம்.] 'வணக்கம்' என்றது 'நாதிமாநிதா' என்று அருளிச் செய்திருக்கிறபடியே ப்ராப்த விஷயங்களிலும் (தாய் தந்தை ஆசார்யன் முதலியவர்களிடத்திலும்) 'வென்றியே வேண்டி' என்கிறபடியே தன்னுடைய மேன்மை பாராட்டாமல் வணக்கமாயிருக்கும் தன்மை என்றபடி. 'நநமேயம்' என்றிருந்த நிலை கழிந்தபடி விவக்ஷிதம். ஒடுக்கம் - தன்னுடைய ஆகிஞ்சந்யத்தை அனுஸந்திப்பதனால் உண்டான விநயத்தைத் தெரிவிக்கக் கூடிய வ்யாபாரங்கள். வழக்கம் - பூர்வர்களின் ஸம்ப்ரதாயத்தை அனுஸரித்திருக்கை. அவர்கள் கண்டகசோதனம் பண்ணிப் போந்த மார்க்கத்தில் நடக்கும் நமக்கு வருவதொரு தப்புமில்லை என்று அருளிச்செய்யப்பட்டதிறே. அன்றிக்கே வணக்கம் என்று ப்ரபத்தியையும், ஒடுக்கம் என்று ஆனுகூல்ய ஸங்கல்ப ப்ராதிகூல்ய வர்ஜனத்தையும் சொல்லி, 'சேரும்' என்பதில் ப்ரபத்தி நிஷ்டைக்குப் பொருந்தின குணங்களுடன் சேர்ந்து என்றபடியாகவுமாம். 'இரக்கம்' என்றது ஸர்வ ப்ராணிகளிடத்திலும் இரக்கத்தை யுடைத்தாயிருக்கை என்றபடி. இணக்கம் – 'கூடினேன் கூடி இளையவர் தம்மோடு' என்றருளிச்செய்யப்பட்ட அஸத்ஸங்கம். உறக்கம் தமோகுணத்தின் கார்யமான நித்ரை, இழுக்கு ஆலஸ்யம் அழுக்கு ஶரீரத்திலும் மனதிலும் பரிஶுத்தி இல்லாமை. 'இகந்து' என்றது நம்மைவிட்டு வெகு தூரத்தில் விலகி என்றபடி. 'குணக்குலம்' என்றது 'அமாநித்வம்' என்றாரம்பித்து ஸ்ரீகீதையில் சொல்லப்பட்ட ஸத்வப்ரக்ருதிகளுக்கு உண்டாகும் குணங்களின் கூட்டங்கள். 'இராமாநுசன் குணம் கூறும்' என்பதினால் ப்ரமவிப்ரலம்பாதிகளை ஆரோபணம் செய்யுமவர்கள் விலக்கப் படுகிறார்கள். 6 'யதிராஜகீர்த்திகடகமகே விஶ்ராயிதா' என்றாரம்பித்து 7 'விஷ்வவ்யாபிந்யமாயே யதிந்ருபதியஶஸ்ஸம்வலேஷ காணமேவஸ்து' என்னுமளவாக அருளிச் செய்திருப்பதிங்கனுஸந்தேயம். 'குணக்குலமோங்கும்' என்பது 'இராமாநுசமுனிக்கு' விசேஷண மாகவுமாம். அடைபவர்க்கே வணக்கம் இத்யாதி சேரும், இணக்கம் இத்யாதி இகந்துநிற்கும் என்றந்வயிக்கவும். 9

பத்தாம் பாட்டு.

இப்படி ஆசார்யபக்தியின் விசேஷத்தையும் அத்தால் உண்டாகக்கூடியப்ரயோஜனங்களையும்பரோபதேசமாயருளிச்செய்ய இதை

6. எம்பெருமானாருடைய கீர்த்தியாகிற தேத்தாங்கொட்டையினால் சுத்தம் செய்யப்பட்ட. 7 பூமி முழுவதும் வ்யாபித்திருக்கிற எம்பெருமானாருடைய கீர்த்தியாகிற ஆழமான ஸமுத்திரத்தில்.

கேட்டவர்கள் தெளிந்து, அப்படி ஆஶ்ரயிக்கும் ப்ரகாரம் என்ன என்று கேட்க அவர்களுக்கு உபதேசிக்க வேண்டிய ஆசார்யஸமாச்ரயண ப்ரகாரத்தை ஸ்வாநுஸந்தான முகேந நிரூபித்தருளுகிறார் - 'அடைபவர்' என்றாரம்பித்து.

அடைபவர் தீவினைமாற்றியருடரும் தூப்புலையா
இடர்தருமிப்பிறவிக்கடல்தன்னி லமர்ந்தவென்னைக்
கடையறப் பாசம் கழற்றி நின் தாளிணை காணும் வண்ணம்
உடையவனே யருளாய் உணர்ந்தார் தங்கள் கற்பகமே. 10

[ப - ரை.] அடைபவர்-ஆஶ்ரயித்தவர்களினுடைய, தீவினை - பாபங்களை, மாற்றி - நாசமாகும்படி செய்து, அருள்தரும் - க்ருபையைச்செய்கிற, தூப்புல், ஐயா - பிதாவே, உடையவனே - எனக்கு ஸ்வாமியானவனே, உணர்ந்தார் தங்கள் கற்பகமே - உம்முடைய வைலக்ஷண்யத்தைப்பற்றிய ஜ்ஞானமுடையவர்களுக்கு கல்பகவ்ருக்ஷம்போல் எல்லா அபீஷ்டங்களையும் கொடுக்கக்கூடியவனே, இடர் தரும் - துக்கத்தைத்தருகிற, இப்பிறவிக்கடல் தன்னில் - இந்த ஸம்ஸாரமாகிற ஸமுத்திரத்தில், அமர்ந்த – ஸ்திரமாக முழுகிக் கிடக்கிற, 'வீழ்ந்தலமர்ந்த' என்று பாடாந்தரம், அப்பொழுது அதில் மக்னராய் ஶ்ரமத்தை அடைந்திருக்கிற என்றர்த்தம், என்னை, கடையற - கடைசிவரையில் அற்றுப்போம்படி, பாசம் - மற்றபுருஷார்த்தங்களில் ஆசையை, கழற்றி, நின் - உம்முடைய, தாளிணை - திருவடிகள் இரண்டையும், காணும் - அநுபவிக்கும், வண்ணம்-ப்ரகாரத்தை, அருளாய்-க்ருபை செய்யவேண்டும். 10

[தா – ம்.] 'அடைபவர்' இத்யாதி - ஸர்வபாபமோக்ஷணம் எம்பெருமானுடைய க்ருத்யமானாலும் 'பண்டை வல்வினைபாற்றியருளினன்', 'வினைவிலக்கில்', 'ஸுவவரிஹரணாஸ' இத்யாதிகளிற்படியே ஆசார்யனுக்கும் அது ஸ்வதஸ்ஸித்தம் என்றபடி. 'அருள்தரும்' என்றது 'தகவோக்கத்தில்', 'நிஹத்ய ஹாநீ ஸம்ஸ்யாஸ' இத்யாதிகளிற்படியே பாகவதாபசாரம் முதலியது ஸம்பவிக்காதாகையினாலே 1'நிவ்ருத்திவே யஉதந்த்ய நவ தஸவஹி ம ஹஃ' என்கிறபடியே மஹா பாகவதாபசாரத்தினால் தடுக்கப்படாத க்ருபையைச் செய்கிற என்றபடி. 'தூப்புல் ஐயா' என்றது தனக்கு நேரில் பிதாவாயிருந்தபோதிலும் ஸர்வஜநங்களைக் குறித்தும்2'மஸீயாநுவ ஹஃ விதா' என்று சொல்லப்படுகிற பிதருத்வத்தை உடையவனே என்றபடி. 'இடர்' என்பதுடன் 'இடரே'

1. குற்றமற்ற பாகவதர்களுடைய நிக்ரஹமானது நிவ்ருத்தி தர்மத்தையும் (நாசம் செய்துவிடுகிறது).

2. ப்ரும்மோபதேசம் செய்யும் தகப்பனாராகிய ஆசார்யன் ஶ்ரேஷ்டனானவன்.

என்று அவதாரணத்தைச் சேர்த்துக்கொள்ளவேண்டும். ஸுக லேசங்கள் சில ஸமயங்களில் உண்டானாலும் அவைகளைக் காட்டிலும் பலீயஸ்ஸான துக்கங்களுடன் சேர்ந்திருப்பதினால் எல்லாம் துக்கமே என்றபடி. 'இப்பிறவி' இத்யாதி—'நிஜதோநஞஷ வாணஹுவாஞ:' என்பது அனுஸந்தேயம். 'வீழ்ந்தலமர்ந்த' என்கிற பாடத்தில் 'ஆவாரார் துணையென்று அலைநீர்கடலுள் அழுந்தும் நாவாய்போல் பிறவிக்கடலுள் நின்று நாம் துளங்க' என்கிற படியே அதில் முழுகி ஶ்ரமப்பட்டு நிற்பது விவக்ஷிதம். 'கடையறப்பாசம் கழற்றி' என்றது உம்முடைய திருவடிகளைத்தவிர மற்றப் புருஷார்த்தங்களிலும், ததுபாயங்களிலும் ஆசையைக்கூட நிவ்ருத்திசெய்து என்றபடி. காணும்வண்ணம் என்றது ப்ராப்யமாகவும ப்ராபகமாகவும் அனுபவிக்கும் ப்ரகாரத்தை என்றபடி. உடையவனே - உடையவன் உடைமையை ரக்ஷிக்கையும், தாஸன் ஸ்வாமியை ஶரணமாயடைவதும் ப்ராப்தம் என்று திருவுள்ளம். 'நித்யஶேஷிக்ஷ யொமாக', 'அன்னையாய் அத்தனாய்' இத்யாதிகள் விவக்ஷிதங்கள். 'உணர்ந்தார்' இத்யாதி—இப்படி உம்மை ப்ராப்யனாயும் ப்ராபகனாயும் அறிந்தவர்களினுடைய ஸர்வாபீஷ்டங்களையும் கொடுக்குமவனாகையினாலே என்னுடைய இந்த இஷ்டத்தைக் கொடுக்கவேண்டும் என்று ப்ரார்த்தித்தாராயிற்று. 10

பதினோராம் பாட்டு

இப்படி ப்ரயோஜனாந்தர வைமுக்யத்தை அருளிச்செய்து அதினால் ஏற்படக்கூடிய ஶரண்யாந்தர வைமுக்யத்தை நிரூபித்தருளுகிறார் - 'கற்பகமே' என்றாரம்பித்து.

கற்பகமே யென்று காசினியோரைக் கதிக்க மாட்டேன்
வெற்பிடையே நின்று வியன்தவத்தீயிலு மேவமாட்டேன்
பற்பல்கலை வல்லபாவலனே பத்தரேத்தும் தூப்புல்
அற்புதனேயருளாயடி யேனுக் கரும்பொருளே. 11

[ப - ரை] காசினியோரை - இந்தப் பூமியில் இருக்கும் மனிதர்களை, கற்பகமே - கல்பகவ்ருக்ஷம்போல எல்லா அபீஷ்டங்களையும் கொடுக்கக்கூடியவனே, என்று, கதிக்கமாட்டேன்-ஸ்தோத்திரம் செய்யமாட்டேன், வெற்பிடையேநின்று - பர்வதங்களில் இருந்து, வியன் - ஆஶ்சர்யப்படக்கூடிய, தவத்தீயிலும் - தபஸ்ஸாகிற அக்னியிலும், மேவமாட்டேன் – ப்ரவ்ருத்தி செய்யமாட்டேன், 'வேந்தவத்தீயிலும்' என்று பாடாந்தரம், அப்பொழுது வெப்பத்தையே கொடுக்கும் தபஸ்ஸாகிற அக்னியில் என்றர்த்தம், பற்பல்கலைவல்ல - அனேகம் விதங்களான கலைகளை அறிந்தவராயும், பாவலனே - பாக்களைச் செய்யக்கூடியவராயும், பத்தரேத்தும் - பக்தர்களினால் ஸ்தோத்திரம் பண்ணப்பட்டவராயுமிருக்கிற, தூப்

புல், அற்புதனே - ஆச்சர்யமான சரித்ரங்களை உடையவரே, அடியேனுக்கு - தாஸபூதனான எனக்கு, அரும்பொருள் - மற்றவர்களினால் அடையமுடியாத புருஷார்த்தமான மோக்ஷத்தை, அருளாய்—க்ருபை பண்ணவேண்டும். 11

[தா - ம்] 'கற்பகமே' இத்யாதி—சொன்னால் விரோதத்தின்படியே மாரியனைய கைமால்வரை யொக்கும் திண்டோள் என்று பாரிலோர் பற்றையைப் பச்சைப் பசும்பொய்கள் பேச மாட்டேன் என்றபடி. ஏனெனில் அவர்களினால் கொடுக்கப்படும் பலங்களில் ஆசையில்லாமையினால். 'என் ஆவது எத்தனை நாளைக்குப்போதும் புலவீர்காள் மன்னு மனிசரைப் பாடிப்படைக்கும் பெரும்பொருள்' என்னப்பட்டதிறே. இஹலோக ஸுகத்தை விட மேலான ஸ்வர்க்காதி ஸுகங்களிலும் ஆசையில்லை யென்கிறார்- 'வெற்பிடையே' இத்யாதியால். ஸ்வர்க்காதிகளுக்காகச் செய்யும் தபஸ்ஸு, முதலியவைகள் மிகவும் க்லேசஸாத்யமாகையினாலும், அந்த க்லேசத்திற்குத் தகுந்த ப்ரயோஜனமில்லாமையினாலும் அதற்காகத் தேவதைகளைக்குறித்து தபஸ்ஸு முதலியவைகளைச் செய்யமாட்டேன் என்றபடி. இத்தால் அந்தத் தபஸ்ஸு முதலியவைகளினால் உண்டாகும் க்லேசமும் நிரூபிக்கப்பட்டதாயிற்று. 'வியன்தவம்' என்றது தன் தலையையறுத்து ஹோமம்செய்தது முதலியது என்றபடி. 'தவத்தீ' என்பதினால் 'காயோடு நீடுகனியுண்டு வீசுகடுங்கால் நுகர்ந்து நெடுங்காலம் ஐந்து தீயோடு நின்று தவம் செய்யவேண்டா' என்கிறபடியே பஞ்சாக்னி மத்தியில்நின்று செய்வது சொல்லப்படுகிறது. 'பற்பல்' இத்யாதி-3'தஉஹிஜெஜூரவஹிஷூ ரு-தாவயம்ஹூ:', 'நிஷஉ்ராவிஉ்ரா நாம்' இத்யாதிகளிற்படியே எல்லாக் கலைகளையும் அறிந்தவர் என்றபடி. 'பாவலனே' என்றது திவ்ய ப்ரபந்தங்களை அருளிச்செய்யக்கூடிய ஸாமர்த்தியம் உடையவரே என்றபடி. 'அடியேனுக்கு' என்றது சேஷபூதனான என்னுடைய அபீஷ்டத்தைப் பூர்த்திசெய்ய ப்ராப்தி உடையவரல்லீரோ என்றபடி. 'அரும்பொருள்' என்றது இப்படி ஐஶ்வர்யாதிகளில் வைராக்யம் இல்லாதார்க்கு அடையமுடியாத மோக்ஷத்தை என்றபடி. 11

பனிரண்டாம் பாட்டு.

பொருளான தொன்று மென்னிற் பொருந்தாததுவன்றி யந்தோ
மருளே மிகுத்துமறையவர் நல்வழிமாற்றி நின்றேன்

மோக்ஷார்த்தமாகவாகிலும் வேறு ஒருவனை ஆசார்யனாக வரிக்கலாமே என்னில்? அதற்கு ஸமாதானம் அருளிச்செய்கிறார்—'பொருள்' என்றாரம்பித்து.

---

3. ஸங்கீதஶாஸ்திர மறிந்தவர்களினால் நாம் விலக்கப்படாதவர். வித்யைகளுக்கு இருப்பிடம்.

தெருளார் மறைமுடித் தேசிகனேஎங்கள் தூப்புல் தேவே
அருளாயினி எனக்கு உன்னருளேயன்றி யாறில்லையே. 12

[ப - ரை] என்னில் - என்னிடத்தில், பொருளானது - புருஷார்த்தமாக இருப்பது, ஒன்றும், பொருந்தாது - சேராது, அதுவன்றி-அதுவுமல்லாமல், அந்தோ - ஐயோ ! மருளே - அஜ்ஞானமே, மிகுத்து - அதிகமாகி, மறையவர் - வைதிகர்களுடைய, நல்வழி - நல்ல அனுஷ்டான மார்க்கத்தை, மாற்றி - அழித்து, நின்றேன், தெருள்ஆர்-ஜ்ஞானத்தினால் பரிபூர்ணரான, மறைமுடித்தேசிகனே - வேதாந்ததேசிகனே, எங்கள், தூப்புல், தேவே-தெய்வமே, இனி-இப்படி நான் ஆனபிறகு, எனக்கு, உன்னருளேயின்றி - உம்முடைய க்ருபையைத்தவிர, ஆறு - உபாயம், இல்லை, ஆகையினால், அருளாய். 12

[தா - ம்] 'பொருளானது' இத்யாதி - தர்மார்த்த காமமோக்ஷங்களாகிற நான்குவித புருஷார்த்தங்களையும் அடைய யோக்யதை இல்லாதவனானேன், தேஹாத்மவிவேகம் உள்ளவர்களுக்கேயின்றோ அவைகளை அடைய யோக்யதை உண்டு, அது இல்லாமையினால் ஒன்றையும் அடைய யோக்யனல்லேன் என்றபடி. 4'ஸுமஹாந்தி அதீயாதா நிஷ்பலஜந்மஸந்ததிঃ', 'ஊமனார் கண்டகனவிலும் பழுதாயொழிந்தன கழிந்தவந்நாள்கள்' இத்யாதிகள் அனுஸந்தேயங்கள். இனியாவது ஜ்ஞானத்தை ஸம்பாதித்து புருஷார்த்த யோக்யதையை அடையலாமே என்னில், அதுவும் ஸம்பவிக்காது என்றருளிச் செய்கிறார் - 'அதுவன்றி' இத்யாதியால். 'அந்தோ' என்பது தன்னுடைய ஹீனஸ்திதியைப் பார்த்துத் தாமே சோகிப்பதைக் காட்டுகிறது. 'ஹந்த ஜ்ஞாதிவதம் க்ருத்வா நாஹம்' என்கிற இடத்தில் 'ஹந்த' என்பதைப்போல இங்கு அந்தோ என்றபடி. மறையவர் நல்வழிமாற்றினதற்குக் காரணம் மருளேமிகுத்து நின்றமை. இத்தால் ஜ்ஞானம் என்பது கொஞ்சமேனும இல்லை, 5' பாபஃ ப்ரஜ்ஞாம் நாசயதி க்ரியமாணம் புநঃ புநঃ । நஷ்டப்ரஜ்ஞঃ பாபமேவ புநராரபதே நரঃ ॥' என்கிறபடியே மேல்மேலென அஜ்ஞானத்தை வ்ருத்திசெய்தமை விவக்ஷிக்கப்படுகிறது. சில தார்மிகர் ஹிதோபதேசம்செய்ய க்ருபை பண்ணினாலும் அவர்கள் கிட்ட அணுகாதபடி விபரீதாசரணம் பண்ணிப்போந்தேன், எனக்கு ஹிதோபதேசம் பண்ணுமவர்கள் ராவ

4. ப்ரயோஜனமற்றதாய் அநேக ஜன்ம பரம்பரைகள் எனக்குப் போய்விட்டன.

5. பாபம் அடிக்கடி செய்யப்பட்டதாய்க் கொண்டு புத்தியை நாசம் செய்கிறது. நாசம் செய்யப்பட்ட புத்தியை உடைய மனிதன் மறுபடியும் பாபத்தையேசெய்ய ஆரம்பிக்கிறான்.

ணனுக்கு ஹிதம் உபதேசித்த ஸ்ரீ விபீஷணாழ்வானைப்போலப் பருஷபாஷணங்களைக் கேட்டு விலகிப்போம்படி நின்றேன், என்னுடைய அநுஷ்டானத்தினால் அயலாரும் கெடும்படி. 'அந்தணமதன்மை ஒளித்திட்டேன்' என்கிறபடியே அதை மறைத்து நின்றேன் என்றபடி. 'நின்றேன்' என்பதினால் அந்த ப்ராதிகூல்யத்தில் இருந்து இன்னமும் நிவ்ருத்தியடையாமை த்யோதிதம். 'தெருளார்' என்றது என்னுடைய 'மருளுக்கு எதிர்தடையாக தேவரீருடைய அபாரஜ்ஞானம் ஒன்றே நிகராகுமே ஒழிய மற்றவர்களின் ஜ்ஞானம் நிகராகாது என்றபடி. ஒரு பள்ளத்திற்கு ஒரு மேடு வேண்டுமிறே. 6'ஶிலாநாவமதிஷ்டாய யதாபாரம் ந கச்சதி। ஜ்ஞாநஹீநம் குரும் ப்ராப்ய கதம் மோக்ஷம் ஸமஶ்நுதே॥' என்கிறபடியே என்னுடைய அஜ்ஞானத்தைப் போக்கடிக்க ஸர்வஜ்ஞனான தேவரீருடைய ஜ்ஞானம்தான் அமையும் என்றதாயிற்று. 'தேவே' என்பதினால் 7'ஆசார்யாதீந தேவதாம் ஸமயிகாமேந்யாம் நமேந்யாமேஹ', 'குருரேவ தேவதாயத', 'தேவுமற்றறியேன்' இத்யாதிகள் விவக்ஷிதங்கள். 'இனி எனக்கு' என்றது இப்படி அகிஞ்சன ஸார்வபௌமனாய் ஒருவித யோக்யதையும் இல்லாமல் போன எனக்கு என்றபடி. 'உன்னருள்' இத்யாதி - எப்படிப்பட்ட பாபங்களுக்கும் பரிஹாரமான 8'பாபிஷ்ட: க்ஷத்ரபந்துஶ்ச....... ஆசார்யவத்தயா முக்தௌ' என்கிறபடியே ஆசார்ய க்ருபையைத் தவிர வேறு உஜ்ஜீவனோபாயம் இல்லை என்றபடி. 'நன்மையால் மிக்க' இத்யாதி பாசுரார்த்தத்தை இங்கனுஸந்திப்பது. 12

பதிமூன்றும் பாட்டு.

இப்படிப் பொதுவாக உபாயாந்தர ஶூந்யதையை அருளிச் செய்து மோக்ஷோபாயங்களான உபாயங்கள் ஒன்றிலும் தனக்கு அந்வயமில்லை என்கிறார்—'ஆறுக' என்றாரம்பித்து.

ஆறுகவெண்ணுமரும் கருமம்ஞானம் காதல்கொண்டு
வேறாக நிற்கும் விரகெனக்கில்லை விரத்தியில்லை
தேறுது திண் மதி சீரார்கதியிலும் செம்பொன்மேனி
மாறாத தூப்புல் மாலே மறவேனினி நின்பதமே. 13

[ப - ரை] ஆறுக - மோக்ஷத்திற்கு உபாயங்களாக, எண்ணும் - (ஶாஸ்திரங்களில்) எண்ணப்படுகிற, அரும் - அநுஷ்டிக்க அருமையான, அதாவது துஷ்கரமான, கருமம் - கர்மயோகம்,

6. ஓட்டை ஓடத்தை அடைந்தவன் எப்படி அக்கரை சேர மாட்டானோ, அதைப்போல ஜ்ஞானமில்லாத குருவை அடைந்தவன் மோக்ஷத்தை எப்படி அடைவான்.

7. 21-ம் பக்கம் பார்க்க. 8. 7-ம்பக்கம் பார்க்க.

ஞானம் - ஜ்ஞானயோகம், காதல் - பக்தியோகம், இவைகளை, கொண்டு-உபாயமாக அனுஷ்டித்துக்கொண்டு, வேறாக-முமுக்ஷுக்க ளல்லாதவர்களைவிட வேறுபட்டவனாக, நிற்கும், விரகு - உபாயம், எனக்கு, இல்லை; விரத்தி - வைராக்யமும், இல்லை-இல்லை, திண் மதி - என்னுடைய உறுதியான புத்தி, அதாவது மதுரகவிநிஷ்டை யையும், 'நஸம்ஶய:' இத்யாதி வசனங்களையும் யோசித்து அதி லேயே உறுதியாக ஏற்பட்ட புத்தி, சீரார்கதியிலும்-இப்படி துஷ்கர மாக இல்லாமல் ஸுகரமாகஇருக்கை, சீக்ரமாகப் பலம்கொடுக்கை, முதலிய குணங்கள் நிறைந்த ப்ரபத்தியாகிற உபாயத்திலும், தேறாது - தெளியாது, செம்பொன்மேனி - சிவந்த ஸ்வர்ணவர்ணம், மாறாத, (திருமேனியை உடைய),தூப்புல், மாலே-எம்பெருமானே, இனி - இதற்குப் பிறகு, நின்பதம் - உம்முடைய திருவடிகளை, மறவேன் - மறக்கமாட்டேன். 13

[தா - ம்] 'நிற்கும்' இத்யாதியால் கர்மயோகாதிகளைச் செய்து அதினால் வரும் விளம்பத்தைப் பொறுத்துக்கொள்ளும் ஶக்தியுமில்லை, அவைகளை அனுஷ்டிக்கக்கூடிய ஸாமர்த்தியமு மில்லை என்று அர்த்தித்வம், ஸமர்த்யம் என்கிற அதி காரம் இல்லையென்று சொல்லப்பட்டதாயிற்று. 'விரத்தியில்லை' என்றது கர்மயோகம் முதலான பர்வங்கள் எல்லாவற்றிற்கும் பொதுவாக அபேக்ஷணீயமான இதர புருஷார்த்தங்களில் வைராக்ய மில்லை என்றபடி. 1'ஸ்வதர்ம ஜ்ஞாநவைராக்ய ஸாத்யபக்த்யேக கோசர:' என்னப்பட்டிறே. 'தேறாது' இத்யாதி—இப்படிப் பட்ட தோஷாதிகள் இல்லாமல் ஸர்வாதிகாரமாய் ஸர்வபலப்ரத மான ப்ரபத்தியிலும் நிபுணக்ருத்யமாய் பகவானுடைய ப்ரீத்யா திஶயத்திற்குக் காரணமான மதுரகவி தோன்றக்காட்டின தொல் வழியில் ஊன்றியிருக்கும் புத்திமற்ற நிஷ்டையில் தெளிவையடை யாது என்றபடி. அன்றிக்கே 'இவ்வைந்தையும் ஸதாசார்ய ப்ர ஸாதத்தாலே அறிந்தவனுக்கல்லது மஹா விச்வாஸம் பிறவாது' என்கிறபடியே ஸதாசார்யனுடைய க்ருபையில்லாமையினால் மஹா விச்வாஸம் உண்டாகாது என்றபடியாகவுமாம். 'செம்பொன்' இத்யாதி உம்முடைய ஶுபாச்ரயமான திவ்யமங்கள விக்ரஹத்தை ப்ரத்யக்ஷமாக அனுபவித்தபடியினாலே எனக்கு இப்படிப்பட்ட ஆசார்ய நிஷ்டையில் நம்பிக்கை உண்டாயிற்று என்றபடி. 'தூப்புல் மாலே' என்றது ஸம்ஸாரி சேதனர்களை உஜ்ஜீவிக்கவேண்டும் என்பதற்காகவே பகவானே அவதாரம் செய்திருப்பதினால் விஸ் வாஸம் உண்டாயிற்று என்றபடி. அன்றிக்கே 'மால்' என்றது வ்யா

---

1. தன்னுடைய வர்ணாஶ்ரமத்திற்கு உசிதமான தர்மம் ஜ்ஞானம், வைராக்யம் இவைகளினால் உண்டாக்கப்படும் பக்தி ஒன்றுக்கே விஷயமானவன்.

மோஹநாய் சேதனர்களிடத்தில் உள்ள ப்ரீத்பதிஶயத்தினால் 1'மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாத்' என்கிறபடியே மிகுந்த கருணையினால் அவதரித்தான் என்றபடியாகவுமாம். 'மறவேனினி' என்றது உபாயானுஷ்டானதசையிலும், ப்ராப்யதசையிலும் திருவடிகளே உத்தேஶ்யமாகையினாலும் ஒரு காலத்திலும் மறக்க மாட்டேன் என்றபடி. 13

பதினாலாம் பாட்டு.

இப்படிக் கீழ் மூன்று பாட்டுக்களினால் ஶரண்யாந்தர ப்ரயோஜனாந்தர உபாயாந்தரங்களில் தனக்கு அந்வயம் இல்லாமையைத் தெரிவித்து, ஆசார்ய க்ருபையே தமக்குத் தஞ்சம் என்று விஜ்ஞாபனம் செய்கிறார். இப்படிக் கீழ்ப்பாட்டில் 'மறவேனினி நின் பதம்' என்று சொல்லப்பட்ட ஆசார்யபக்தி உமக்கு இருக்கிறபடியினால் அது உபாயமாகாதோ என்ன? அதுவும் தனக்கு யதாவத்தாக இல்லை என்றருளிச் செய்கிறார் - 'நின் பதம்' என்றாரம்பித்து.

நின்பதம் தன்னிலும் நேரே யெனக்கில்லை யன்புகண்டாய்
நின்பதமோன்றிய வன்பரிலும் நேசமில்லையந்தோ
என்படி கண்டினியென்பயனேதமில் தூப்புலெந்தாய்
உன்படியே யருளாலுதவாயெனக்குன்னருளே. 14

[ப - ரை] எனக்கு, நின்பதம்தன்னிலும் - உம்முடைய திருவடிகளிலும். நேரே - நேராக, கபடமில்லாமல் என்றபடி, அன்பு - பக்தி, இல்லை, கண்டாய் - இது நீர் அறிந்தவிஷயமே, நின்பதமோன்றிய - உம்முடைய திருவடிகளை ஆஶ்ரயித்த, அன்பரிலும் - பக்தர்களிடத்திலும், நேசம் - ஸ்நேஹம் (ப்ரீதி), இல்லை, அந்தோ, இனி - இதற்குமேல், என்படி - என்னுடைய ஸ்வபாவத்தை, கண்டு - யோசித்துப்பார்த்து, என்பயன் - என்ன ப்ரயோஜனம், ஏதமில் - ஒரு தோஷமும் இல்லாத, தூப்புல், எந்தாய் - ஸ்வாமியே, உன்படியே - உம்முடைய ஸ்வபாவத்தை அனுஸரித்தே, அருளால் க்ருபையினால், உன்னருள் - உம்முடைய க்ருபையை, உதவாய் - ஸஹாயமாகச் செய்யவேண்டும். 14

[தா - ம்] 'நின்பதம் தன்னிலும்' என்றது கீழ்க்கூறியபடி பாவனமாயும், போக்யமாயும், ப்ராப்தமாயும், ஸுலபமாய்க் கிடைக்கக்கூடியதாயும் இருக்கிற உம்முடைய திருவடிகளிலும் என்றபடி. 'நேரே' என்றது கரணத்ரயங்களிலும் ஏகரூபமாக என்றபடி.

1. முழுகிக்கிடக்கும் ஜனங்களை காருண்யத்தினால் (காப்பாற்றுகிறான்).

பதினைந்தாம் பாட்டு

1 '[illegible]
[illegible]' என்கிறபடியே
புறமேபுறமேயாடினேன் என்ற ...
உறுதியைக் காட்டுகிறது,
தில்லை இது என்றபடி. 'நின்ப...
ஸம்பாஷணம் உண்டானல் ...
உண்ட... காரணம் ...
2 '[illegible]...
பாங்கலராகிலும்' என்றனு ... அ...
படி. 'ஏதமில்' இத்யாதி—... கத பரித்யாகமாக...
லாமை உம்முடைய கூடஸ்தரான ரிஷிமுதலாகவன்...
'[illegible]' என்று ஸ்ரீ விபீஷணப்...
குக் கொடிகட்டின ரகுவைச் சொன்னப்போலே...
கிறார் என்றபடி. அன்றிக்கே ஒரு காரணத்...
க்ருபை பண்ணுவதாகிய தோஷமில்லாதவர் என்ற...
'உன்படியே' இத்யாதி - உமக்கு ஸ்வபாவத்திலேற்ப...
யினாலே எனக்கு அனுக்ரஹிக்க வேண்டும் என்...
'[illegible]' (...
டும்) என்கிற உபாயத்வாத்யவஸ...
'தேவுமற்றறியேன்' என்பதின் ...
பட்டது.

பதினைந்தாம் பா...

இப்படித் தன்னுடைய ஆகிஞ்சந்ய அ... ளிச்செய்து பல ப்ரார்த்தனை பூர்வகமாக ஆசாரியனை ஶரணமபுகுகிறார்—'உன்னருளன்றி' என்றாரம்பித்து.

உன்னருளன்றி எனக்கொருநற்றுணையின்மையினல்
என்னிரு வல்வினை நீயே விலக்கி இதங்கருதி
மன்னிய நற்றிருமந்திரமோதும் பொருள்நிலையை
பொன்னருளாலருளாய் புகழ்தூப்புல் குலவிளக்கே. 15

---

1. ரஜோ குணம் தமோ குணம் இவைகளினல் மறைக்கப்பட்டவனைக் கொண்டு இவ்விதமாக ஆசைப்படாதவனாக இருந்த போதிலும் ஆசைப்படுகிறவனைப்போல இந்தமாதிரியாக கபடமான ஸ்தோத்திரத்தினுடைய சொல்லுகிற விதத்தை செய்யவே செய்தேன்.

2. என்னுடைய நடத்தையை யோசிக்காமல் அனுக்ரஹம் செய்யும்.

- எல்லோராலும் புகழப்பட்ட, தூப்புல்
லத்திற்கு ப்ரகாசகமானவரே, உன்னரு
பையைத்தவிர, எனக்கு, ஒரு - ஒருவிதமு
ஷகம்) இன்மையினால் - இல்
தத்தைஎண்ணி, அனுஷ்டித்து
டைய, இருவல்வினை - இரண்டு
க்கி - விடுவித்து, மன்னிய -
மந்திரத்தில் ...தபபடும்,
ஷ்டையை, பொன்னரு
க்ருபையினால், அருளாய் -
ணும். 15

'உன்னருளன்றி' இத்யாதி.- 'அருள்கண்டீர் இவ்வுல
ன்கிறபடியே ஸர்வேச்வரனுடைய க்ருபையை
ம்முடைய க்ருபையும் எனக்குக் கிட்டாவிடில்
ர்க்கம் இல்லை என்றபடி. இது கீழ் பதினே
ல் சொல்லப்பட்ட அர்த்தங்களை யெல்லாம் சேர்த்து
தபடி. நீயே— 'ஸ்வெவொவாயஹீதொ', 'உதஃ
...வெக்ஷணவதா (இதற்குப் பிறகு என்
பாராத உம்மால்) இத்யாதி
பரஸமர்ப்பணமும் ஆசார்யக்ருத்
க்ருத்யத்தைச் செய்யவேண்டும்
என்றது 'ஞாவதநஷிநுஹிததம்'
உயர்ந்தஉபாயம்) 'தவிஷாதஹ்ராவ
த்தில் ஆத்மாவை ஸமர்ப்பிப்பது உயர்ந்த
உபாயம்) ... பத்தை அனுஷ்டித்து என்றபடி. 'என் இரு'
இத்யாதி—ஸுக்ருத துஷ்க்ருதங்களாகிற இருவகைப்பட்ட கர்மங்
களினின்றும் என்னை விடுவித்து என்றபடி. 'மன்னிய' என்றது திரு
மந்திரத்திற்கு விசேஷணமாகவுமாம். அப்பொழுது ஸம்ப்ரதாயவிச்
சேதமில்லாமல் குருபரம்பரோபதேச க்ரமமாக வருகிற என்றபடி.
அன்றிக்கே பெரியோர்களால் ஸ்திரமாக ஆச்ரயிக்கப்பட்ட என்றபடி
யாகவுமாம். 'நமோ நாராயணாயேதிமெ ஸமாரணாவயம்' (நாங்
கள் நமோநாராயண என்கிற மந்திரத்தில் நிஷ்டையுடையவர்கள்)
என்றார்களிறே. 'பொருள்' என்பதற்கு விசேஷணமாகி அழியாத
புருஷார்த்தம் என்று அர்த்தமாகவுமாம். 'பொருள்' என்றது அர்த்தம்
என்றாகி திருமந்திரத்தில் சொல்லப்படுகிற ஸ்வரூபோபாய புரு
ஷார்த்தங்களில் நிஷ்டையை உடைய என்றர்த்தமாகவுமாம். புகழ்.
'விஶ்வாமித்ராயநோ விஶ்வாதிஷு' இத்யாதியாக தேவரீராலேயே
புகழப்பட்ட என்றபடி. 'தூப்புல் குலவிளக்கே' என்றது கூடஸ்த
ரான ரிஷியால் அனுஷ்டிக்கப்பட்ட சரணாகத ஸம்ரக்ஷண தர்

மத்தை க்ரந்தமுகத்தாலும், அனுஷ்டான முகத்தாலும் வெளியிட்டருளினபடியால் அந்தக் குலத்திற்கே ஒருமஹிமையைக்கொடுக்கக் கூடியவர் என்றபடி. 15

பதினாறாம் பாட்டு.

இப்படித் திருமந்திரத்தில் ஸாப்தமாக ஏற்பட்ட புருஷார்த்தத்தை ப்ரார்த்தித்து மேல் அர்த்தாத்ஸித்தமாய்க் காஷ்டாப்ராப்தமான பாகவதபக்தியை ப்ரார்த்திக்கிறார் - 'விளக்காகி' என்றாரம்பித்து.

விளக்காகி வேங்கடவெற்பினில் வாழும் விரைமலராள்
வளக்காதல் கொண்டுறைமார்பன் திறத்து முனதடியார்
துளக்காதலில்லவர் தங்கள்திறத்திலும்தூய்மையெண்ணிக்
களக்காதல் செய்யும் நிலை கடியாய் தூப்புற்காவலனே. 16

[ப - வை.] விளக்காகி - ப்ரகாசகமாகி, வேங்கட வெற்பினில் - திருவேங்கடமாமலையில், வாழும்-வாழ்ந்துகொண்டிருக்கிற, விரை- பரிமளத்துடன் கூடிய, மலராள் - புஷ்பத்தில் வஸிக்குமவளான, அலர்மேல்மங்கை என்றபடி, வள - வளப்பத்துடன்கூடிய, அதாவது சீர்மைபொருந்திய, காதல்கொண்டு - அனுராகத்துடன்கூடினவளாய், உறை - வஸிக்கிற, மார்பன் - திருமார்பையுடைய ஸ்ரியஃபதியின், திறத்தும் - விஷயத்திலும், உனதடியார் - உனக்குத் தாஸர்களாய், துள - சஞ்சலமான, காதலில்லவர் தங்கள் - பக்தியை உடைத்தாகாதவர்களுடைய, திறத்திலும் - பக்கலிலும், அதாவது உம்மிடத்தில் ஸ்திரமான பக்தியுடையவர்களிடத்திலும், தூய்மை - பரிஸுத்தியை, எண்ணி - அனுஸந்தானம் செய்து, களக்காதல் - கள்ளக்காதல், அதாவது வஞ்சனையான பக்தியை, செய்யும்நிலை - செய்கிற ஸ்திதியை, தூப்புல், காவலனே - ரக்ஷகனே, கடியாய் - நிவ்ருத்தி செய்யவேண்டும். அதாவது பகவத் பக்தர்களிடத்திலும், உம்முடைய பக்தர்களிடத்திலும் உண்மையான பக்தி உண்டாகுமாறு அநுக்ரஹிக்கவேண்டும் என்றபடி. 16

[தாம்]. 'விளக்காகி' இத்யாதி - மார்பனுக்கு விஸேஷணமாகவுமாம். அப்பொழுது 'வேடார் திருவேங்கடம் மேயவிளக்கே' என்கிறபடியே தன்னுடைய ஸௌலப்ய பரத்வாதிகளை ப்ரகாஸம் செய்துகொண்டு குன்றத்திட்ட விளக்குப்போல் தானும் ப்ரகாசித்துக்கொண்டிருக்கும் நிலைவிவக்ஷிதம். 'விரைமலராளுக்கு' விஸேஷணமாகவுமாம். அப்பொழுது 'இருள் செக வெமக்கோரின்னொளி விளக்காய்' என்கிறபடியே அவனுடைய திருமேனிக்கும், குணங்களுக்கும் ப்ரகாஸிகையாய் இருக்கும் பெரியபிராட்டியாருடைய இருப்பு விவக்ஷிக்கப்படுகிறது. 'வாழும்' என்றது அகிஞ்சனர்களான ஜனங்களை ரக்ஷிக்கப்பெற்றதினால் உண்டான ஸந்தோஷத்

துடன் வஸிக்கிற என்றபடி. 'விரைமலராள்' என்பதினுல் பிராட்டியின் திருமேனியின் ஸௌகந்த்யாதிகள் விவக்ஷிதங்கள். 'வளக் காதல்' என்றது எம்பெருமானுக்குச் சீர்மையைக் கொடுக்கக் கூடிய காதல் என்னவுமாம். ஒருநாளும் குறைவில்லாமல் மேல் மேலென வளர்ந்துவரும் காதல் என்றுகவுமாம். இவளுடைய காதலுக்கு விஷயமாகாத பக்ஷத்தில் திருவில்லாத் தேவரென்று கழிக்க வேண்டும்படியிறே இருப்பது. 'வண்டார் பூமலர் மங்கைமணநோக்கமுண்டானே' என்கிறபடியே அவளுடைய ப்ரேமரஸமிறே இவனுக்கு ஜீவநஹேது. 3 'ஸுவாஜ்ஞாஹ—ஸ்யாம்ஸோயத்—வஸிவாஸம்ஸுஹஜவிக்ஷ—:' என்பதை அனுஸந்திக்கவும். 'துளக் காதல்' இத்யாதி- சில்வான ப்ரயோஜனங்களுக்காகப் பக்திசெய்தால் அந்தப்ரயோஜனம் கிட்டினவாறே பக்தி நின்றுவிடும், அப்படிக்கில்லாமல் கேவலம் அநந்யப்ரயோஜனர்களான பக்தர்கள் என்றபடி. 'தூய்மை எண்ணி' என்றது அவர்களிடத்தில் தோஷாரோபணங்களைச் செய்யாமல் துய்ய குலசேகரன்படி யாகவேண்டும் என்றபடி. பாகவதர்கள் விஷயத்தில் தோஷாதர்ஶித்வமிறே அவருக்குத் தூய்மை. 'களக்காதல் செய்யும்' என்றது மனோவாக்காயங்களில் ஆநுரூப்யமில்லாமல் வெவ்வேறு பட்டிருக்கும் பக்தி என்றபடி. 'காவலனே' என்றது அகிஞ்சனர்களான எங்களை ரக்ஷிப்பதற்காகவன்றோ தேவரீர் அவதரித்தது என்றபடி. 16

பதினேழாம் பாட்டு.

இப்படிப் பகவான் முதலாக ஸ்வாசார்யன் வரையிலாக ததீய பர்யந்தமான பக்தியாகிற புருஷார்த்தத்தை ப்ரார்த்தித்து, இப்படி என்னுடைய அபீஷ்டங்களைக் கொடுத்து ரக்ஷிப்பதற்கு உசிதமான குணபூர்த்தி இருக்கிறதென்று நிரூபித்தருளுகிறார் - 'காவலன்' என்றாரம்பித்து.

காவலனெங்கள் கிடாம்பிக் குலபதியப்புளார்தம்
தேமலர் சேவடி சேர்ந்து பணிந்தவர்தம்மருளால்
நாவலரும் தென்வடமொழி நற்பொருள் பெற்றநம்பிக்
காவல தூப்புல் குலத்தரசே எம்மைக் காத்தருளே. 17

[ப ரை.] காவலன் - ரக்ஷகனாய், எங்கள் - எங்களுக்குப் பரமாசார்யனை, கிடாம்பிக் குலபதி - கிடாம்பிக்குலத்திற்குப் பதியாகிய, அப்புளார்தம் - அப்புள்ளாருடைய, தேமலர் - தேனைப் பெருக்குகிற புஷ்பங்கள்போன்ற, சேவடி - சிவந்த திருவடிகளை, சேர்ந்து - ஆஶ்ரயித்து, பணிந்து - ப்ரணிபாதாதிகளைச் செய்து,

---

3. லக்ஷ்மியினுடைய கடைக்கண் பார்வைகள் எதின்பேரில் அதிகமாகப்பட்டதோ அதைப் பரப்ருஹ்மம் என்றறிந்தார்கள்.

அவர் தம்மருளால் - அவருடைய க்ருபையினாலே, **நாவலரும்** - நாக்கிலே மலருகிற, **தென் வடமொழி** - தென்மொழி (தமிழ்), வடமொழி (ஸம்ஸ்க்ருதம் இந்தப் பாஷாரூபமான வேதங்களின் என்றபடி, **நற்பொருள்** - நல்ல அர்த்தங்களை, **பெற்ற** - அடைந்தவரான, **நம்பி** - குணங்களினால் பூர்ணரான, **காவல** - ரக்ஷகனான **தூப்புல் குலத்தரசே** - தூப்புல் குலத்தில் வந்தவதரித்த குருஸார்வபௌமனே, **எம்மை, காத்தருளே** - ரக்ஷித்தருள வேண்டும். 17

[தா - ம்] 'கிடாம்பிக் குலபதி' என்றது வேதாந்தோதயனர் என்று ஸ்ரீ பாஷ்யகாரரினால் புகழப்பெற்ற கிடம்பியாச்சானுடைய திருவம்ஶத்திற்குத் திலகம் போன்றவர் என்றபடி. 'தேமலர்' இத்யாதியால் இவ்வாசார்யனுக்கு உண்டான ஸதாசார்ய ஸமாஶ்ரயணம் ஸூசிப்பிக்கப்பட்டது. இப்படி ஸ்ரீ பாஷ்யகாரர் முதலாக ஸதாசார்ய பரம்பரையில் அந்வயித்தபெருமை 'யதிவரனார் மடைப்பள்ளி வந்த மணம் எங்கள் வார்த்தையுள் மன்னியதே', 4 '[illegible]' என்று அருளிச் செய்யப்பட்டது. இத்தால் எம்பெருமானாரால் நியமிக்கப்பட்டு ப்ரவசனம் செய்யப்பட்ட ஆச்சான் ரஹஸ்ய பரம்பரையில் அந்வயமியல்லாதார் சொல்லுவதெல்லாம் அஸாம்ப்ரதாயிகம் என்பது தெரிவிக்கப்பட்டதாகிறது. 'சேர்ந்து' இத்யாதியால் முதலில் அம்மானுடைய காலக்ஷேப கோஷ்டியில் அவருடைய நியமனப்படி அப்புள்ளாரை ஆசார்யனாகப் பெற்றபடியும், பிறகு யதாஶாஸ்திரம் ப்ரணிபதனாதிகளினால் ஆஶ்ரயித்தபடியும், அவர் கேவல க்ருபையினால் '[illegible]' என்கிறபடியே தேசித்தபடியும் ஸூசிதம். 'நாவலரும்' என்பதினால் இவரு[…] திருநாக்கின் ஸம்பந்தம் பெற்றபிறகு உபயவேதாந்தார்த்த[…] ப்ராசுர்யத்தை அடைந்தபடியும், அதற்குப் பரிமளாதிகள் […]யடைந்தபடியும், அவைகள் ஸர்வ ஜனங்களுக்கும் போ[…] படியும், அப்ரயத்தினமாக அவைகள் வ்ருத்தியடைந்தபடியு[…] ஸூசிக்கப்படுகின்றன. 'தென்வடமொழி' என்பதினால் 5 '[illegible]' என்றும், 6 '[illegible]' என்றும் உபய வேதாந்தங்களையும் ஏககண்டங்களாய் உபபாதித்து ஸர்வர்க்கும் உபயோகம[…]

4. இப்படி எம்பெருமானாருடைய மடைப்பள்[…] துடன் கூடியதைப் பருகுங்கள்.

5. கடைசியில் கொஞ்ச பாகத்தையுடைய முதல்இருப[…]டுக்கள் ஶாரீரகார்த்த க்ரமத்தை விஶதமாக்குகின்றன.

6. பதினாறு பாதங்களடங்கிய இரண்டு த்விகங்களி[…]

பெற்றமை விவக்ஷிதம். 'நற்போருள்' என்றது பரஸ்பர விரோதமில்லாத ஸம்ப்ரதாயார்த்தங்கள் என்றபடி. இத்தால் ஸ்ரீபாஷ்யகாரருடைய நியமனத்தினால் ப்ரவ்ருத்தமாய், அவர் தம்மாலே ஶிஷ்யர்களுக்கு ப்ரவசநம் செய்யப்பட்டதான திருக்குருகைப்பிரான் பிள்ளான் திருவாய்மொழிக்கு வ்யாக்யானமாய்ப் பணித்த ஆறு யிரப்படியை அங்கீகரித்துச் சொல்லுமதெல்லாம் நற்பொருளாகாது என்பது த்யோதிதம். 'நம்பி' என்றது இப்படி ஆஶ்ரிதர்களை ரக்ஷிப்பதற்கு உபயுக்தங்களான ஸத்ஸம்ப்ரதாய ஸித்தி முதலிய எல்லா குணங்களையும் பரிபூர்ணமாக உடையவர் என்றபடி. 17

பதினெட்டாம் பாட்டு.

இப்படிப் பகவான் முதலாக ஆசார்யபர்யந்தமாக ததீயபக்தியைப்ப்ரார்த்தித்து, எல்லாவற்றிற்கும் ஸாரபூதமான ஆசார்ய விஷயத்தில் ததீயபர்யந்த பக்தியைத் தனித்து ப்ரார்த்திக்கிறார்— 'அருள்தரும்' இத்யாதி. இவ்வளவும் செய்யாமல் போனாலும் இது ஒன்றுமே செய்ய அமையும் என்று ப்ரார்த்திக்கிறாராகவுமாம். இந்த ஆசார்யன் விஷயத்தில் த்வேஷமில்லாமல் இருப்பது மாத்திரத்தையே குணமாக 7 'ஃபெ௧ஷ ௭ா த்ரு ௰வீவாயெஷா० வெஷா ஐ ஷெஶிகெ । வீடீ வெடொஷூஹ० தெஷா௭ிகி வீயீஷ ஶு ஷூ தா०ஃ' என்று தொட்டையாசார்யர் ப்ரார்த்தித்தாரிறே.

அருடரு மாரணத் தேசிகனே தூப்புலாரமுதே
வருகவிதார்க்கிகசிங்கமே வாதியர் வாழ்வறுத்தாய்
இரு கையும் கூப்பியுரைக்கு மிவ்விண்ணப்பமோன்று கேளாய்
உருவ வேனக்கருளா யெண்ணுமுள்ளம் உன் தோண்டரையே. 18

[ப - ரை.] அருள்தரும் - அருளைச் செய்கிறவரான, [illegible] தேசிகனே - வேதாந்த தேசிகனே, தூப்புலாரமுதே - [illegible] குலத்தில் அவதரித்தவராய் போக்யத்வம் நிறைந்த அம்ரு[illegible], வரு - வரும், அவதாரம் செய்த என்றபடி, கவிதார்க்கிகசிங்கமே - கவிகளுக்கும் தார்க்கிகர்களுக்கும் ஸிம்மம் போன்றவரே, வாதியர்கள் - பரவாதிகளினுடைய, வாழ்வு - வாழ்வை, அறுத்தாய் - நசிப்பித்தாய், இருகையும் - இரண்டு கைகளையும், கூப்பி - அஞ்சலிபண்ணி, உரைக்கும் - நான் சொல்லுகிற, இவ்விண்ணப்பம் - இந்தவிஜ்ஞாபனம், ஒன்றுகேளாய் - கேட்டருள வேண்டும், எனக்கு, உருவ - எப்பொழுதும், உன் தோண்[illegible]ரையே - உம்முடைய பக்தர்களையே, எண்ணும் - எண்ணும்படி [illegible]ளம் - மனதை, அருளாய் - க்ருபை செய்யவேண்டும். 18

[illegible]தா - ம்.] அருள்தரும்' என்பது தேசிகனுக்கு விசேஷணம். [illegible]து வேதங்களை ப்ரவசனம் செய்தபடியினால் ஆரணத் தேசிக

[illegible]3ம் பக்கம் பார்க்க.

னை எம்பெருமான் கர்மானுகுணமாக நிக்ரஹானுக்ரஹங்களைச் செய்யுமவன், அப்படிக்கில்லாமல் தேவரீர் அனுக்ரஹைகஸ்வ பாவரன்றோ என்றபடி. இத்தால் அவனைக் காட்டிலும் இவருக்குள்ள ஏற்றம் சொல்லப்பட்டதாகிறது. ‘அருள்தரும்’ என்பது ஆரணத்திற்கு விசேஷணமாகவுமாம். அப்பொழுது பகவானுடைய க்ருபைக்குக் காரணங்களான வேதங்கள் என்றர்த்தம். அதாவது வேதங்கள் ஹோமதானாதி தர்மங்களை பகவதனுக்ரஹத்திற்குக் காரணமாக விதித்திருக்கின்றன வாகையினால் அந்தக் கர்மங்களை அனுஷ்டிக்கும் நமக்கு பகவத் க்ருபையை உண்டாக்கக்கூடியவைகள் ஆரணங்கள் என்றபடி. அப்படிப்பட்ட தாத்பர்யார்த்தத்தை அறிந்து அயலாருக்கும் அதை உபதேசம் செய்யும் ஆசார்யன் இவர் என்றபடி. இத்தால் ஶக்தி, அபூர்வம், அத்ருஷ்டம் என்றாப்போலே சொல்லுகிறவர்கள் வேதார்த்தத்தை ஸரியாக அறிந்தவர்களல்ல என்பது த்யோதிதம். இப்படியே ஸ்ரீ கீதாபாஷ்யத்தில் ‘வெடிவிெஷவவாஹம’ என்பதற்கு அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது. ‘தூப்புலாரமுதே’ என்றது ‘அண்ணிக்கும் அமுதூறும்’ என்றாப்போல பரமபோக்யமானவனை என்றபடி. ‘வரு’ என்பதினால் இவர் சேதனோஜ்ஜீவனார்த்தமாக அவதரித்தவர் என்பது த்யோதிதம். இத்தால் ‘ஸஂஹுாவஂ நத்ஶஜயஂ’ என்று ஒருபடி வந்தடைந்தவனை விடமாட்டேன் என்ற பெருமாளைக்காட்டிலும் அவர்களிருக்கும் இடம்தேடி வந்த சிங்கம் இவர் என்று இவருடைய விசேஷம் சொல்லப்பட்டது. ‘கவிதார்க்கிக சிங்கமே’ என்பதினால் நரசிங்கத்தைக் காட்டிலும் வ்யாவ்ருத்தி த்யோதிதம். அதாவது நரஸிம்மத்தைக் கண்டபிறகும் மாறுகொண்டுடன் றெதிர்ந்தான் வல்லவுணன். இவர்படி 8 ‘ஶாஶ்ஶி யஶோணாயஹ்ஹஂ கவிதாகிகஂஜராஃ। ஷ்வெநுாவஸஷவ நிஜஂ விஹஂகிஷேவிதஂஷஜெ।’ என்றிருந்தது. ‘வாதியர்’ இத்யாதியால் அநிஷ்டம்நிவ்ருத்தியானபடி சொல்லப்பட்டது. ‘இருகையும்’ இத்யாதியால் இஷ்டப்ராப்தியை அபேக்ஷிக்கிறார். ‘ஶிரஸ்யஂ ஜலிஶோஷாய’ என்று ஸ்ரீ பரதாழ்வான் ப்ரார்த்தனையைப்போல் இதுவும் அநதிலங்கனீயம் என்றபடி. ‘ஒன்று கேளாய்’ என்றது இந்த அர்த்தம் அஸத்ருபமானதாகையினால் அதைக் கே... ...வணும் என்றபடி. அன்றிக்கே ‘பதீஶ்ரஸரஷ ...’ இத்யாதியின்படியே உத்தரார்த்தத்தின் அர்த்தம் உம்முடைய ... களுக்கு ப்ரார்த்தநீயமில்லை, பூர்வா... த்தத்.

1. எந்த சப்தத்தைக் கேட்ட ... மாத்தி ச்ரேஷ்டர்கள் ஸ்வப்னத்திலும் ... டுங்குகி அத்விதீயமான ஸிம்மத்தை ஸேவி... க்கிறேன்.

கூறுக்கவேண்டும் என்றபடியாகவுமாம். அன்றிக்கே 'அடியேன் செய்யும் விண்ணப்பமே' என்றாரம்பித்து பலவாறாக விண்ணப்பம் செய்த ஆழ்வார்போலன்றியே அடியேன்செய்வது ஒன்றே என்கிறாராகவுமாம். 'தொண்டரையே' என்பதினாலே இது ஒன்றுமே அமையும் என்றதாயிற்று. 18

பத்தொன்பதாம் பாட்டு.

இப்படிக் கீழ் உபாயமாகவும் உபேயமாகவும் இருப்பதற்கு உபயுக்தங்களான ஆசார்யனுடைய காருண்யம், ஜ்ஞான வைராக்யங்கள் முதலிய கல்யாண குணங்களை அனுஸந்தித்து அவனையே ஶரணமாகப்பற்றினாராய் நின்றார். இப்பாட்டில் ஆசார்யனுடைய திவ்ய மங்கள விக்ரஹகுணங்களும் அவைகளோபாதி போக்யமாக அனுபாவ்யமாகையினால் ப்ராப்யமாகையினாலே அவைகளை அனுஸந்தித்து மங்களாஶாஸனம் செய்தருளுகிறார்-'தொண்டர்' என்றாரம்பித்து.

தொண்டருகக்கும் துணையடிவாழி நின்தூமுறுவல்
கொண்டமுகம் வாழிவாழி வியாக்கியா முத்திரைக்கை
வண்டிருநாமமும் வாழி மணிவட முப்புரிநூல்
கொண்ட சீர்தூப்புல் குலமணியே வாழி நின்வடிவே. 19

[ப - ரை.] தொண்டர் - பக்தர்கள், உகக்கும் - பக்திபண்ணுகிற, துணை - ஒன்றுக்கொன்று ஸத்ருஶங்களான, அடி - திருவடிகள், வாழி - எப்பொழுதும் நித்யமாகச் செல்லவேண்டும், நின் - உம்முடைய, தூ - வெளுப்பான, முறுவல் - மந்தஹாஸத்தை, கொண்ட - எப்பொழுதும் தனக்கு அலங்காரமாக அங்கீகரித்துக்கொண்டிருக்கிற, முகம் - திருமுகமண்டலம், வாழி, வியாக்கியா முத்திரக்கை - வ்யாக்யான முத்ரையுடன் கூடின திருக்கை, வாழி - வண் - விலக்ஷணமான, திருநாமம் - திருமண்காப்பு, வாழி, மணிவடம் - திருமணித் தாழ்வடங்களையும், முப்புரிநூல் - திருயஜ்ஞோபவீதத்தையும், கொண்ட - எப்பொழுதும் தரித்துக்கொண்டிருக்கிற, சீர்-கல்யாண குணங்கள் நிறைந்த, தூப்புல் குலமணியே - தூப்புல் குலத்தில் அவதரித்த ரத்னமே, நின்வடிவு - உம்முடைய திவ்யமங்கள விக்ரஹம், வாழி. 19

[தா-ம்]. 'தொண்டர் உகக்கும்' என்றது தங்களுக்கு ஶிரோபூஷணமாகப் பக்தியுடன் வஹிக்கக்கூடியதுகள் என்றபடி. 1'விஅநு 2தமஜஶிவாஹரணாயபோநள' என்றிவர் தாமே அனுஸந்தித்தா

2 ... கிற யானைகளுக்கு ஶிரோபூஷணமான.

ரிறே. 1 'விவிதஸஜ்ஜநாநுபாவ்யௌ' என்று ஆசார்யபக்தியின் ரஸம் அறிந்தவர்கள் அந்த ஆசார்யனுடைய திருவடிகளை உபாயமாகவும் உபேயமாகவும் எப்பொழுதும் ஆஶ்ரயித்திருப்பார்கள். 2 'இஹாமுத்ர ச தத்பாதௌ ஶரணம் தேஶிகா விது:' என்றதிறே. இந்த ப்ரமாணகதியை அனுஸரித்து 'ஸத்வரத்நாவளி' என்று பெரிய முதலியாரும் அனுஸந்தித்தது. 'அத்திவத்திலாரமுதம் ஆருமிருநிலத்தில் என்றுரைத்தார்' என்று ஸ்ரீ தேசிகனாலும் அருளிச்செய்யப்பட்டது. 'துணையடி' என்றது இந்த ஆசார்யனுடைய திருவடிகளுக்கு ஸத்ருஶம் வேறு ஒன்றும் இல்லை, இவைகள் பரஸ்பரங்களே ஸத்ருஶங்களாகும் என்றபடி. எம்பெருமானுடைய திருவடிகளும் இவைகளுக்கு நிகரில்லை என்பது 'ஶ்ரீமத்தவாங்க்ரியுகளம்' என்பதின் வ்யாக்யானத்தில் ஆசார்யனால் நிரூபிக்கப்பட்டது. அன்றிக்கே துணையான திருவடிகள் என்றர்த்தமாகவுமாம். ஆஶ்ரிதர்களை ஸம்ஸார ஸாகரத்தில் நின்றும் தாண்டுவிப்பதற்கு உதவியாயிருக்கும் திருவடிகள் என்றபடி. 3'விஸ்தீர்ணஸம்ஸ்ருதிமஹார்ணவகர்ணதாரவேதாந்ததேஶிகபதௌ ஶரணம் ப்ரபத்யே' என்றும், 4 'விஶ்வாந்தராளதமஸ க்ஷபணௌ' என்றும், 5 'ஸ்வாஶ்ரிதஶிஷ்யஜநரக்ஷணஜாகரூகௌ' என்றும் பலபடிகளாலும் இவர்தாமே அருளிச் செய்தாரிறே. அதுவுமன்றிக்கே பகவானுடைய திருவடிகளைப்போல அஸுர ப்ரக்ருதிகள் முறியும்படியன்றிக்கே எல்லோரையும் காப்பாற்றுகிற படியினால் ரக்ஷணத்திற்கே ஏகாந்தமான திருவடிகள் என்றபடியாகவுமாம். இத்தால் பகவானுடைய திருவடிகளைக் காட்டிலும் வ்யத்யாஸம் தெரிவிக்கப்பட்டதாகிறது. 'தொண்டருகக்கும்' என்பதினால் 6'விதெவதிவரமௌலிக்ருதபாதுகௌ' என்கிறபடியே 'யதீந்த்ர க்ஷோணீம் ஶிக்ஷ்யதாம்' என்று எதிரிகள் தலையில் வைக்கப்பட்டிருந்த

---

1. ஸஜ்ஜனங்களினால் அனுபவிக்கக்கூடிய.

2. இந்த லோகத்திலும் பரலோகத்திலும் ஆசார்யனுடைய திருவடிகளே உபாயம் என்று ஆசார்யர்கள் அறிந்தார்கள்.

3. விஸ்தாரமாயிருக்கிற ஸம்ஸாரமான மஹாஸமுத்திரத்திற்கு ஓடக்காரன்போன்ற ஸ்ரீ தேசிகனுடைய திருவடிகளை ஶரணம் அடைகிறேன்.

4. பூமியை வ்யாபித்திருக்கும் இருட்டை போக்கடிக்கக்கூடிய.

5. தன்னை ஆஶ்ரயித்த ஶிஷ்ய ஜனங்களின் ரக்ஷணத்தில் ஜாக்கிரதையுடைய.

6. எதிரிகளின் தலையில் செய்யப்பட்ட குட்டுதலையுடைய.

போதிலும் அவர்களுக்குப் பயாவஹமாய் இருக்கிறபடியினால் அவர்கள் உகக்கவில்லை, ஆஶ்ரிதர்களே உகக்கிறார்கள் என்பது த்யோதிதம். இப்படித் திருவடிகளை ஆஶ்ரயித்த ஶிஷ்யர்களுக்கு ஹிதோபதேசம் செய்யும் திருப்பவளத்தின் ஶோபாதிஶயத்தை அனுபவிக்கிறார் - 'தூமுறுவல்' இத்யாதியால். அபரிமிதகஹன கம்பீரங்களான வாக்யங்களை உபந்யஸித்து வாதிகளை ஜயிக்கும் ஸமயத்திலும், ஶிஷ்யர்களுக்கு அதி ஗ூடமான வேதாந்த தத்வார்த்தங்களை உபதேசிக்கும் ஸமயத்திலும் ஒருவித மாறுதலுமில்லாமல் மந்த ஹாஸ ஸுகரமான திருமுகம் என்றபடி. ஸ்ரீக்ருஷ்ணன் அர்ஜுநனுக்கு கீதோபதேசம் செய்யும்காலத்தில் 7 'ப்ரஹஸந்நிவ பாரத' என்கிறபடியே ரஸவத்தாய் ஸுக்ரஹமாய் வார்த்தை அருளிச் செய்யும்பொழுது திருமுகமண்டலத்தின் ஸௌந்தர்யம் ஆகர்ஷகமாய் பரம போக்யமாயிருந்தாப் போல ஸ்வாமியின் திருமுகம் இருந்தபடி தெரிவிக்கப்படுகிறது, அதாவது ஹிதோபதேசம் செய்யும்பொழுது உபதேசிக்கப்படும் அர்த்தங்களின் சீர்மையினால் மனதும், திவ்யவதனாரவிந்த ஸௌந்தர்யத்தினால் திருக்கண்களும் இழுபட்டு ஈடுபடுகிறார்கள் என்றதாயிற்று. ஆகையினால் இப்படிப்பட்ட திருமுகமண்டலத்தின் ஶோபை ஒருகாலத்திலும் மாறாமல் இருக்கவேண்டுமென்று அதற்கு பல்லாண்டு பாடுகிறார் — 'வாழி' என்று. 'வியாக்கியா முத்திரக்கை' இத்யாதி—நம் ஸ்ரீ தேசிகனுக்கு ஸ்ரீ கோசம் ஜ்ஞான முத்திரையுடன் கூடிய திவ்யமங்கள விக்ரஹத்தின் ஸந்நிவேஶம் ஸ்ரீ ரங்கநாதனுடைய நியமனத்தினால் உண்டானதாகையினால் அதற்கு மங்களாஶாஸனம் செய்தருளுகிறபடி. 8 'உத்க்ருஹ்ணதீவ உபநிஷத்ஸு நிகூடமர்த்தம் சித்தே நிவேஶயிதுமல்பதியாம் ஸ்வயம் ந: । பஶ்யேம லக்ஷ்மணமுநே: ப்ரதிபத்தஹஸ்தாமுந்நித்ர பத்மஸுஷமாமுபதேஶமுத்ராம் ॥' என்றும், 9 'ஸஞ்ஜ்ஞயாத் ப்ரதிஹாஸஶாஸ்தாநு ஸாங்க்ஷயஞ்சம் ஸமேப்ரதீவாநு । விஜ்ஞாநகல்பதருபேஶ்வாஹம் ப்ராப்ய நதார்யோராம் கராம்யதே ॥' இத்யாதியாக ஸ்ரீதேசிகன் அருளிச்

---

7. சிரித்துக்கொண்டு.

8. உபநிஷத்துக்களில் மறைந்திருக்கிற அர்த்தத்தை மந்தமதிகளான அடியோங்களுடைய மனதில் தானேவைப்பதற்காக உயரத்தூக்குகிறதும் மலர்ந்த தாமரைப் பூப்போல மனோஜ்ஞமானதுமான எம்பெருமானாருடைய திருக்கைகளை அடைந்திருக்கிற உபதேசமுத்ரையை அனுபவிக்கிறோம்.

9. புத்தியாகிற வத்தியில் இருக்கிற ஸித்தாந்தார்த்தமாகிற விளக்குகளை ப்ருத்தி செய்கிறதும் ஜ்ஞானமாகிற கல்பகவ்ருக்ஷத்தினுடைய தளிரின் சோபையைப் போன்ற சோபையையுடையதும்

செய்ததெல்லாம் இவர் ஸ்ரீ தேசிகன் விஷயத்தில் அனுஸந்தித்தாராயிற்று. 'வண்டிரு நாமம்' இத்யாதியால் ஹரிபாதாக்ருதியான ஸந்நிவேச விசேஷத்தினாலும், ருஜுவாயும் ஸௌம்யமாயும் இருக்கிற ஸந்நிவேசங்களினால் உண்டான வைலக்ஷண்யம் சொல்லப்படுகிறது. அன்றிக்கே ஆழ்வார் 'நெற்றியுளானே', 'எனது உச்சியுளானே', 'தோளிணையானே' இத்யாதிகளில் அனுபவித்தாப்போல் ஸ்ரீ தேசிகனும் கேசவாதி விபவாந்தரங்களான எம்பெருமான்களைத் தம்முடைய திருமேனியில் 'கேசவனாய் நின்று' இத்யாதி பன்னிருநாமப்படி எப்பொழுதும் தரித்துக் கொண்டு அனுபவித்த விசேஷம் சொல்லப்படுகிறதாகவுமாம். இவ்வர்த்தத்தை 'பன்னிருநாமம் பலபல வுருவாய் என்னுருவெங்கு மெய்தி நீ நிற்றி' என்று ஸ்ரீதேசிகனே அனுஸந்தித்தாரிறே. 'மணிவடம்' இத்யாதி-'கோண்ட' என்றது ஆபரணமாகக்கொண்ட என்றபடி. 'சீர்' என்றது திவ்ய மங்களவிக்ரஹத்தின் குணங்களாகிய லாவண்யம், ஸௌகுமார்யம், ஔஜ்வல்யம் முதலியவற்றை என்றபடி. 'தூப்புல்' இத்யாதி—தூப்புல் குலத்தில் வந்தவதரித்த [illegible]மான மணிபோன்றவரே என்றபடி. அன்றிக்கே தூப்புல் குலத்தில் அவதரித்தவராய் ஆசார்ய பங்க்திக்குநாயகமணிபோன்றவரே என்றபடியாகவுமாம். எம்பெருமானார் திறத்தில் '[illegible] நாயகஶ்ரீ:' இத்யாதியாக அனுஸந்தித்தாப்போல இவரும் ஸ்ரீதேசிகனையும் நாயகரத்னமாக அனுஸந்தித்தாராயிற்று. 'வாழி நின்வடிவே' என்றது இப்படிப்பட்ட திவ்யமங்கள விக்ரஹமும் அதின் குணங்களும் நித்யமாய் இருக்கவேண்டும் என்று பல்லாண்டு பாடினாராயிற்று. இப்பாட்டு அவதரித்தபடி—ஶில்பிராஜன் என்கிற ஒரு வ்யாஜத்தை முன்னிட்டு பகவானுடைய நியமனத்தை தலைக்கட்டத் தம்முடைய திவ்யமங்கள விக்ரஹத்தை ஸ்ரீகோச ஜ்ஞானமுத்ரைகளுடன் ஸ்ரீரங்கநாதன் நியமனப்படி ஏறியருளப்பண்ணி, ஶில்பிராஜனால் செய்யப்பட்ட பீடத்தில் அந்த விக்ரஹத்தைத் தாமே சேர்த்தருளி, அந்த விக்ரஹம் ஸர்வ லக்ஷணோபேதமாய் இருந்ததைக் கடாக்ஷித்து, அதை பஹுமானித்து அதை ஆலிங்கனம் செய்து, தம்முடைய திவ்யஶக்தியை அதில் ஆவேஶம் செய்தருளி, அருகில் இருந்த நைனாரிடம் கொடுக்க, அவரும் மஹாப்ரஸாதமாய் அங்கீகரித்துவைத்துக்கொண்டிருக்கும்பொழுது, [illegible]மான '[illegible]' என்று மேல்பரிச்சேதமில்லாமல் அனேகம்பல்லாண்டுகள் ஸ்ரீதெய்வநாயகனை மங்களாசாஸனம் செய்தருள வேண்டு[illegible]

ஜ்ஞானமுத்ரையுடன் கூடினதுமான உம்முடைய [illegible] தி[illegible]யை த்யானம் செய்கிறேன்.

என்கிற திருவுள்ளத்தினால் ஸ்ரீதேசிகன் ஸ்ரீரங்கத்தைவிட்டு திருவஹீந்திரபுரத்திற்கு எழுந்தருளி, தம்முடைய அவதார ஸமாபன காலம் கிட்டிவிட்டதைக்கடாக்ஷித்து, ஸம்ப்ரதாயார்த்தங்களில் சிலருக்குண்டான ஸந்தேஹங்கள் தீரும்படி ஸ்ரீவிரோதபரிஹாரம்என்னும் சரம ப்ரபந்தத்தை அருளிச்செய்து, அதை ஶிஷ்யர்களுக்கு ப்ரவசனம் செய்யும்பொழுது, ஸ்வாமியின் நூற்றேராவது திருநக்ஷத்ரோத்ஸவம் ஸம்பவிக்க, அப்பொழுது அங்கிருந்த ஶிஷ்யர்கள் அதைக்கொண்டாடும் காலத்தில் ஸ்வாமியின் திவ்ய சரித்திரங்களை ஒருவர்க்கொருவர் ‘வொயயஞ: வரஷூரழ’ என்கிறபடி அனுபவித்துக்கொண்டிருக்கும் ஸந்தர்ப்பத்தில் நைனாராசார்யர் ஸ்ரீரங்கத்தில் ஸ்வாமி சில்பி ராஜனை ஜயித்த வ்ருத்தாந்தத்தையும் தம்முடைய விக்ரஹத்தை எழுந்தருளப்பண்ணி அதைத் தாமுகந்து தனக்கு ப்ரஸாதித்தபடியையும் சொல்ல, ஆங்கிருந்த முதலிகள் தாங்களும் அந்த திவ்யவிக்ரஹத்தைஸேவித்து க்ருதார்த்தர்களாக வேண்டும் என்று ப்ரார்த்திக்க, நைனாரும் அந்தப் பாகவதர்களின் நியமனத்தைச்சிரஸா வஹித்து அவர்களுக்கு அவ்விக்ரஹத்தை ஸேவைபண்ணி வைக்க, அது ஸ்வாமியின் திருமேனியில் இருந்து ஒத்தியெடுத்தாப்போல் இருப்பதைக்கண்டு, அவர்கள் அவ்வடிவழகில் ஈடுபட்டுக்கொண்டு நிற்கும் அதிஶயத்தை ஊரிலுள்ளவர்களும் கேட்டுத் திரள் திரளாய்ச் செல்வதைக் கண்டு, பற்பில் மறந்தசெய்யாள் படிகாட்டிய நம் தேசிகனுக்காகவே அயிந்தை மாநகரில் அமர்ந்த அடியவர்க்கு மெய்யன் போர உகந்து, தாமும் அந்த ஆநந்தத்தை அனுபவிக்கத் திருவுள்ளம் பற்றி, அவ்விக்ரஹத்தைத் தம்முடைய ஸந்நிதிக்குக் கொண்டு வரும்படி அர்ச்சகமுகேந நியமித்தருளி, பரமபத நாதன் ஸ்ரீக்ருஷ்ணனுடைய திருமேனியைப்பார்த்ததோபாதி தாமும் இந்த ஆசார்யரூப அர்ச்சாவதார விக்ரஹத்தைக் கடாக்ஷித்து, மிகவும் ப்ரீதராய், அடியவர் பால் மெய்யை வைத்தவனாகையாலே ‘ஶாஸதெ ஸதூவாதீ’ என்றுவர்த்தமான நிர்த்தேசமான மங்களாஶாஸனத்தை அந்வர்த்தமாக்கவேண்டியதற்காகவும், தன்னை ஒரு க்ஷணம் கூட மறவாமலிருந்தவரை தாமும் மறக்காமலிருக்கவும் தம் ஸந்நிதியிலேயே திருப்ரதிஷ்டை செய்யும்படி நியமிக்க, அப்படியே அனைவரும் அதை நடத்திவைத்தார்கள் என்றும், அக்காலத்தில் கூட இருந்த நைனாராசார்யரும் இவ்வாசார்ய விக்ரஹம் தாமுகந்த திருமேனியாயும் தமருகந்த திருமேனியாயும் இருக்கும் விஶேஷத்தையும், ப்ரத்யங்கபூர்ண ஸௌஷ்டவமையுடன் கூடின திவ்யமங்கள விக்ரஹ சோபையையும் அனுபவித்து அவ்வடிவழகில் ஈடுபட்டு இந்தத் திருமேனி எப் … தும் … வ்யாஹதமாய் ஸர்வ விபவங்களுடன் மேன்மை … பஜனங்களை உஜ்ஜீவிக்கச் செய்யவேண்டும்

என்கிற திருவுள்ளத்தினால் இப்ரபந்தத்தை அனுஸந்தித்து அதின் கடைசியில் இதை விண்ணப்பம் செய்ததாயிருக்குமென்றும்வெண்ணைக்கூத்தஜீயர் அருளிச்செய்வர். 19

இருபதாம் பாட்டு.

இப்ரபந்தத்தைப் பக்தியுடன் அனுஸந்திப்பவர்களுக்குப் பரம புருஷார்த்த காஷ்டாபூதமான ஆசார்யன் திருவடிகளாகிற பரம ப்ராப்யம் தானேவந்துகிட்டும் என்று பலத்தை நிரூபித்து ப்ரபந்தத்தைத் தலைக்கட்டுகிறார்—'வடிவழகு' என்றாரம்பித்து.

வடிவழகார்ந்த வண்தூப்புல் வள்ளல் மேன் மலரடிமேல்
அடியவரோத அந்தாதியிருபது மாய்ந்துரைத்தேன்
திடமுடனீதைத் தினம்தோறுமாதரித்தோது மன்பர்
முடியிடை நேர்படும் தூப்புலம்மான் பதமாமலரே. 20

ஸ்ரீ தூப்புல் நைனாராசார்யர் அருளிச்செய்த

பிள்ளையந்தாதி முற்றிற்று.

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

தூப்புல் நைனாராசார்யர் திருவடிகளே சரணம்.

[ப - ரை.] வடிவழகு - திவ்யமங்கள விக்ரஹத்தின் ஸௌந்தர்யத்தினால், ஆர்ந்த-பூர்ணரான, வண் - விலக்ஷணமான, தூப்புல், வள்ளல் - பரமோதாரரான ஆசார்யருடைய, மேன் - ம்ருதுவான, மலரடிமேல் - புஷ்பங்கள்போன்ற திருவடிகள் விஷயமாக, அந்தாதி இருபதும் - அந்தாதிரூபமான இருபது பாட்டுக்களையும், அடியவர் - ஆசார்யனுக்குத் தாஸபூதர்கள், ஓத - அத்யயனம்செய்ய, அனுஸந்தானம் செய்வதற்கு என்றபடி, ஆய்ந்து - (ஆசார்ய குணங்களை) நன்றாக நிரூபித்து, உரைத்தேன், ஈதை - இப்ரபந்தத்தை, திடமுடன் - மனதில் உறுதியுடன் அதாவது மஹா விச்வாஸத்துடன், தினந்தோறும், ஆதரித்து - ப்ரீதிபூர்வகமாக, ஓதும் - ஓதுகிற, அன்பர் - பக்தர்களுடைய, முடியிடை - ஶிரஸில், தூப்புல்அம்மான் - தூப்புல் குலத்தில் அவதரித்த அம்மஹானாகிய ஆசார்யனுடைய, பதமாமலரே - திருவடிகளாகிற ச்லாக்யமான புஷ்பங்கள், நேர்படும் - தானே ப்ராப்தமாகும். 20

[தா - ம்] 'வடிவழகார்ந்த' என்றது கீழ்ப் பாட்டில் அனுஸந்தானம்செய்த ஆசார்ய திவ்யமங்கள விக்ரஹத்தின் ஸௌந்தர்யம் இவர் திருவுள்ளத்தில் ஸ்திரமாக அமர்ந்தபடியினால், 1'நஹிதஸ்ய

---

1. ஸ்ரீராமன் வெகு தூரம்போன பிறகு கூட அந்த புருஷோத்தமனிடத்திலிருந்து மனதையாவது கண்ணையாவது திருப்பி

நூந: கஸ்மிக வக்ஷோவ்ஷீவா நரோத்தோக: । நரஸ்நீநாத்யவாகு ஷ்டோஓதிகு ரஹேவிராவவெ॥’ என்கிறபடியே மனது அதைவிட்டு ப்ரக்ருதத்தில் நிவ்ருத்திப்பிக்க முடியாதாகையினால் அதையே அனுவதிக்கிறார் என்றபடி அன்றிக்கே கீழ்ச்சில திவ்யாவயவங்களின் ஸௌந்தர்யத்தை அனுஸந்தித்தாராய், இப்படியே ஒவ்வொரு அவயவங்களும் ப்ரத்யங்கபூர்ண ஸாஷாமா ஸாபகங்களாயிருக்கையினாலே பிரித்துச்சொல்ல முடியாமையினாலே அவைகளுடைய ஶோபாதிஶயத்தை ஸமுதாயமாக அருளிச்செய்கிறாராகவுமாம். ‘வண்’ என்றது தூப்புல் குலத்திற்கு விஶேஷணம். அந்தக் குலத்திற்கு இப்படிப்பட்ட ஆசார்யன் அவதரிக்கும்படியான பாக்யாதிஶயம் இருந்தமை த்யோதிதம். 2‘விஶ்வாதிஶாயிநோவிஶ்வாஸிதூ மாதூஹாமிஷணவஸு’ என்று ஸ்ரீஸங்கல்பஸூர்யோதயத்தில் அருளிச்செய்யப்பட்டதிறே. ‘வள்ளல்’ என்பதினால் இப்படிப்பட்ட விலக்ஷணமான தம்முடைய திவ்யமங்கள விக்ரஹத்தின் ஸௌந்தர்யத்தை ஸர்வ ஜனங்களும் அனுபவிக்கும்படி ஸகலமனுஜநயந விஷயதாங்கதனைபடியும், பிற்காலத்தவர்களும் இழக்காதபடி தாமே அனுப்ரவேசித்து ஒரு திவ்ய மங்கள விக்ரஹத்தை ஏறியருளப் பண்ணினபடியும் விவக்ஷிக்கப்படுகிறது. இத்தால் 3‘ரூமிவௌஜாயுஹாணோ: வாஂஸாஂ ஜூஷ்டிதிவஹாரிணம்’ என்கிற பெருமாள்படி இவருக்கும் இருந்தமை த்யோதிதம். ‘மென்’ என்றது அதிகடினமான நம்முடைய வார்த்தையின் ஸ்பர்ஶத்தை ஸஹிக்க முடியாத மார்த்தவத்தையுடைய என்றபடி. இத்தால் அந்த மார்த்தவத்திற்கு அனுகுணமாக இருபது பாட்டுக்களோடு தலைக்கட்டினது, அவைகளின் குணங்களின் பர்யாப்தியினாலல்ல என்பது த்யோதிதம். பரனடியேல் சொன்ன திருவாய்மொழி ப்ரபந்தத்தைக் காட்ட[illegible] வள்ளல் மென் மலரடிமேல் சொல்லப்பட்ட இப்ரபந்தம் வி[illegible]ஷயானது. ஏனெனில் அதற்குப் பரத்வம் விஷயமாகையினால் விஷயத்தைப்போலத் தாங்களும் த்ரவகாஹங்களாயிருக்கும். இதுவோ விஷயத்தில் (மலரடியில்) இருக்கும் மார்த்தவம், போக்யத்வம், ஸௌகந்த்யம் முதலிய குணங்கள் நிறைந்ததாகையினால். பெரிய பெருமாள் மெய்ப் பதங்களுக்கும் அடியவர் மெய்யர்மலர்ப்பதங்களுக்கும் உள்ளவாசி திருவாய்மொழிக்கும் இப்ரபந்தத்திற்கும் உண்டென்று நம் ஆசார்யன் பணிக்கும்படி. ‘அமு[illegible]வரோத’ என்றது தொண்டர்க்கமுதுண்ண சொன்மாலைகள்

இ[illegible]க்துக்கொள்ள ஒரு மனிதனும் ஸாமர்த்திய முடையவனல்ல.

2. லோகத்தில் மிகவும் க்யாதிபெற்றவிஶ்வாமித்ரகோத்திரத்திற்கு அலங்காரமாயிருக்கிற.

3. ரூபதௌதார்யம் ஸௌசீல்யம் இவைகளினால் மனுஷ்யரின் த்ருஷ்டியையும் மனதையும் அபஹரிக்கிற.